விழி 08 பார்வை 85 ஓகஸ்ட் 2012

# அகவிழி

ஆசிரியத்துவ நோக்கு...


- ★ பாடசாலைகளில் மாற்றங்காணும் வெளிநிலைச் சக்திகள்
- ★ ஆங்கில மொழித் தேர்ச்சி மேம்பாட்டுக்கான கொள்கைத் தெரிவுகள்
- ★ பிள்ளைகளின் ஆளுமை விருத்தியில் ஆசிரியர்களின் வகிபாகம்
- ★ கல்வித்தர அபிவிருத்தியில் பண்புசார் விருத்தி மதிப்பீட்டுமுறை
- ★ பொருதாரமும் கல்வியும்: கல்வியில் அரசாங்க முதலீடு
- ★ பியாஜேயின் அறிகை நோக்கும் கற்றல் தொழிற்பாடும்
- ★ பாடசாலைகளில் பிள்ளைகளை சேர்த்தல்: தரம் 1 க்கான அனுமதி
- ★ உள்ளடக்கல் கல்வி: பின்தங்கியோருக்கான கல்வியும் வள ஏற்பாடும்
- ★ எழுத்தாளனும் எழுத்தாற்றலும்
- ★ கற்பித்தல் முறையியல்கள்
- ★ கல்வித்துறை அபிவிருத்தி: வரலாற்றுச் செல்நெறியும் எதிர்கால நெறிப்படுத்தல்களும்
- ★ தனி மனித அமைதியும் தன்னிலை விளக்கமும்


www.viluthu.org

விலை: 100/=

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ISSN 1800-1246
அகவிழி

*AHAVILI*
3, Torrington Avenue, Colombo 07
Tel.: 011 250 6272
E-mail: ahavili.viluthu@gmail.com



## உள்ளே......

| | |
|---|---|
| பாடசாலைகளில் மாற்றங்காணும் வெளிநிலைச் சக்திகள் | 4 |
| ஆங்கில மொழித் தேர்ச்சி மேம்பாட்டுக்கான கொள்கைத் தெரிவுகள் | 8 |
| பிள்ளைகளின் ஆளுமை விருத்தியில் ஆசிரியர்களின் வகிபாகம் | 12 |
| கல்வித்தர அபிவிருத்தியில் பண்புசார் விருத்தி மதிப்பீட்டுமுறை | 16 |
| பொருதாரமும் கல்வியும்: கல்வியில் அரசாங்க முதலீடு | 20 |
| பியாஜேயின் அறிகை நோக்கும் கற்றல் தொழிற்பாடும் | 23 |
| பாடசாலைகளில் பிள்ளைகளை சேர்த்தல்: தரம் 1 க்கான அனுமதி | 29 |
| உள்ளடக்கல் கல்வி: பின்தங்கியோருக்கான கல்வியும் வள ஏற்பாடும் | 30 |
| எழுத்தாளனும் எழுத்தாற்றலும் | 35 |
| கற்பித்தல் முறையியல்கள் | 39 |
| கல்வித்துறை அபிவிருத்தி: வரலாற்றுச் செல்நெறியும் எதிர்கால நெறிப்படுத்தல்களும் | 42 |
| தனி மனித அமைதியும் தன்னிலை விளக்கமும் | 44 |

அகவிழியில் இடம்பெறும் கட்டுரைகளுக்கு அதன் ஆசிரியர்களே பொறுப்பு, கட்டுரைகளில் இடம்பெறும் கருத்துக்கள் "அகவிழி"யின் கருத்துக்கள் அல்ல.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ISSN 1800-1246

அகவிழி

மாத இதழ்

ஆசிரியர்:
V.S. இந்திரகுமார்

நிர்வாக ஆசிரியர்:
சாந்தி சச்சிதானந்தம்

ஆசிரியர் குழு:
க. சண்முகலிங்கம்
திருமதி பத்மா சோமகாந்தன்

ஆலோசகர் குழு:
திரு.து. ராஜேந்திரம்
முன்னாள் முதுநிலை விரிவுரையாளர்,
இலங்கை திறந்த பல்கலைக்கழகம்

கலாநிதி உ. நவரட்ணம்
முன்னாள் ஓய்வு நிலைப்பணிப்பாளர், தேசிய கல்வி நிறுவகம்

பேராசிரியர் சோ. சந்திரசேகரம்
முன்னாள் கல்விப் பீடாதிபதி, கொழும்புப் பல்கலைக்கழகம்

பேராசிரியர் வ. மகேஸ்வரன்
தலைவர் தமிழ்த்துறை, பேராதனைப் பல்கலைக்கழகம்

பேராசிரியர் இரா.வை. கனகரட்ணம்
தமிழ்த்துறை, பேராதனைப் பல்கலைக்கழகம்

திரு.தை. தனராஜ்
முதுநிலை விரிவுரையாளர், இலங்கைத்திறந்தபல்கலைக்கழகம்

திரு.க. இரகுபரன்
முதுநிலை விரிவுரையாளர், தென்கிழக்குப் பல்கலைக்கழகம்

கலாநிதி சசிகலா குகமூர்த்தி
சிரேஷ்ட விரிவுரையாளர், இலங்கைத் திறந்தபல்கலைக்கழகம்

திரு.வீ. தியாகராஜா
சிரேஷ்ட ஆலோசகர், சமூக விஞ்ஞானக் கற்கைகள் துறை,
இலங்கைத் திறந்த பல்கலைக்கழகம்

லெனின் மதிவானம்
பிரதி கல்வி வெளியீட்டு ஆணையாளர், கல்வி அமைச்சு

திரு.கே. சாம்பசிவம்
தேசிய ஆலோசகர்: கல்வி முகாமைத்துவம்

திருமதி. அருந்ததி ராஜவிஜயன்
ஆசிரிய ஆலோசகர், கொழும்பு கல்வி வலயம்

ஆசிரியரிடமிருந்து..........

தற்போது இலங்கையின் கல்வித்துறை சூனியத்தில் இயங்கிக்கொண்டிருக்கிறது. ஆனால் கல்வி என்பது சூனியததில் இயங்குவதில்லை. அது அரசியல் பொருளாதாரம், கலாசாரம், சமூகமனப்பாங்கு, என பல்வேறு காரணிகளுடன் ஒன்றிணைகிறது. பொருளாதார அந்தஸ்து என்பது ஒரு நாட்டின் பலம் வாய்ந்த சக்தியாக இருப்பதோடு பொருளாதார அபிவிருத்தியானது ஒரு தேசத்தின் பிரதான இலக்குகளில் ஒன்றாகவும் மாறியுள்ளது. எனவே நாட்டின் பொருளாதாரத்தை மேம்படுத்தும் முக்கிய பொறுப்பு அந்நாடடின் கல்வித்துறைக்கு உண்டு. அதன் மேம்பாட்டுக்கு தேவையான மனித வளத்தை விருத்தி செய்யும் பணியையும் அத்துறை கொண்டுள்ளது.

கல்வியை பொருளாதார அபிவிரிருத்தியுடன் இணைத்து நோக்கும் போது கல்வியானது பரந்த அர்த்தத்தை ஏற்கிறது. அதாவது கல்வியை தொழில்சார் மயப்படுத்துவதால் மாத்திரம் பொருளாதார மேம்பாட்டிற்கு அது உதவும் எனக் கூற முடியாது. மாறாக தொழிற்சந்தைக்குத் தேவையான உளச்சார்பு, ஆளுமைத்திறன்கள் மற்றும் ஒழுகலாறு கொண்ட ஒரு தொழிற்படையை உருவாக்க கல்வி உதவுவதாக இருக்க வேண்டும். எனவே மனிதவள அபிவிருத்தியில் மேற்கொள்ளப்படும் செலவீனம் அபிவிருத்திச் செயன்முறையில் ஒரு முதலீடாகக் கருதப்படவேண்டும். தனியாளின் உள்ளார்ந்த ஆற்றலை வளர்த்தெடுப்பது கல்வியின் தலையாய பணியாக இருக்கின்ற போதிலும் மக்களைத் தொழில் உலகத்திற்கு தயார்படுத்துவதும் கல்வியின் வகிபங்குகளில் முக்கிய ஒன்றாகும்.

இலங்கையில் இன்று கல்வித்துறை பாரிய பிரச்சினைகளை எதிர்நோக்கியுள்ளது. கல்வித்துறை சார்ந்த அனைத்து தொழிற்சங்கங்களும் போராட்டத்தில் இறங்கியுள்ளன. பல்கலைக்கழக விரிவுரையாளர்களின் பணிப்பகிஷ்கரிப்பு மாதக்கணக்கில் நீடித்து இறுதியில் பல்கலைக்கழகங்கள் மூடப்படும் நிலைமையை தோற்றுவித்தது. பல்கலைக்கழக விரிவுரையாளர்களின் வலுவான கோரிக்கையாக அமைவது மொத்த தேசிய உற்பத்தியில் கல்விக்காக ஒதுக்கப்படும் செலவீனம் போதியதாக இல்லை. இதனை உடனடியாக அதிகரிப்பதன் மூலம் தமது பிரச்சினைகளுக்கு தீர்வு காண முடியும் என்பதாகும். அத்துடன் இலங்கை ஆசிரிய அதிபர் தொழிற்சங்கங்களும் நீண்டகாலமாக தங்களது கோரிக்கைகளை முன்வைத்து பல போராட்டங்களை முன்னெடுத்து வருகின்றனர். இவற்றோடு சம்பந்தப்பட்ட



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அரச திணைக்களங்களும் அதிகாரிகளும் இவர்களது கோரிக்கைகளுக்கு செவி சாய்ப்பதாக இல்லை. கடந்த மாதம் ஆசிரியர் தொழிற்சங்கங்கள் கல்வி அமைச்சின் முன் கூடி தமது 13 அம்சக் கோரிக்கைகளை முன்வைத்து ஆர்ப்பாட்டங்களை நடத்தயிருந்தன. தமது கோரிக்கைகளை நிறைவேற்றும் படி மூன்றுவார கால கெடுவையும் விதித்திருந்தன. காலக்கெடு முடிவடைந்த நிலையிலும் கோரிக்கைகளுக்கான தீர்வுகள் பற்றி எதுவித கலந்துரையாடல்களும் நடைபெற்றதாக தெரியவில்லை. ஆசிரிய தொழிற்சங்கங்கள் தங்களது நியாயமான கோரிக்கைகளாக பின்வருவனவற்றை முன்வைத்திருந்தன.

ஆசிரியர், அதிபர் சேவை பிரமாணக் குறிப்பு திருத்தலின் போது ஆசிரியர், அதிபர் தொழிற்சங்கங்களுடன் கலந்தாலோசித்தல்.

இலங்கை ஆசிரியர் சேவை அதிபர் சேவைகளில் காணப்படும் சம்பள முரண்பாடுகள் சம்பந்தமாக திருத்தியமைக்கப்பட்ட முண்டிகல அறிக்கையை உடனடியாக அமுல்படுத்துதல்.

கல்வி உளவியல் கொள்கைகளுக்கு முரணாக பாடசாலை நேரத்தை நீடிக்கக் கூடாது.

கல்வித்துறை சார்ந்தவர்களின் ஆலோசனைகளை ஏற்காது கல்வி அமைச்சர் தன்னிச்சையாக தீர்மானம் எடுப்பதை நிறுத்த வேண்டும்.

Z - புள்ளி சம்பந்தமாக உச்ச நீதிமன்றம் வழங்கிய தீர்ப்பை கௌரவித்து க.பொ.த (உ/த) பரீட்சைகளில் சித்திபெற்ற மாணவர்களுக்கு நீதி வழங்க வேண்டும்.

நிலுவைச் சம்பளம் உட்பட ஆசிரியர்களுக்கு சேர வேண்டிய சகல கொடுப்பனவுகளையும் உடனடியாகக் கொடுக்க வேண்டும்.

சேவை பிரமாணக் குறிப்பை மீறி கல்வி நிர்வாக சேவைக்கும் அதிபர்கள் சேவைக்கும் அமைச்சரவை பத்திரத்தினூடாக நியமனம் வழங்குதலை நிறுத்த வேண்டும்.

பரந்த ஆய்வின்றி கல்வித்துறையின் நோக்கங்களுக்கு முரணாக டியூசன் மனப்பாங்கில் புதிய கலைத்திட்டத்தை அமுலாக்குவதை நிறுத்த வேண்டும்

இலங்கை நிர்வாக சேவைக்கு ஆசிரியர்களும் அதிபர்களும் உள்வாங்கப்படும் சந்தர்ப்பத்தை இல்லாது செய்யும் அதே வேளை இலங்கை கல்வி நிர்வாக சேவை வெற்றிடங்களை இலங்கை நிர்வாக சேவையில் உள்ளவர்கள் மூலம் நிரப்புவதை நிறுத்த வேண்டும்.

பரீட்சைத் திணைக்களத்தின் சுயாதீனமான செயற்பாட்டையும் அதன் நம்பகத்தன்மையும் பாதுகாப்புடன், க.பொ.த (உ/த) மாணவ மாணவிகள் தாம் விரும்பும் பாடசாலைக்கு செல்வதற்கான தடையை நீக்கவேண்டும்.

இலங்கை அதிபர் சேவையின் பதவி உயர்வை செயற்படுத்தி, இலங்கை ஆசிரியர் பதவி உயர்விற்கான திகதியை 2012.12.31 வரை நீடிக்க வேண்டும்.

உயர் நீதிமன்றத் தீர்ப்பின் படி அதிபர் சேவை தரம் II, III ஆகிய நியமனங்களை உடனடியாக வழங்க வேண்டும்.

தேசிய இடமாற்றக் கொள்கைக்கு அமைய ஆசிரிய இடமாற்ற சபையையும் அதிபர் இடமாற்ற கொள்கையையும் உருவாக்க வேண்டும்.

இவர்களது கோரிக்கைகளை தெரிவிக்க வேண்டிய தேவை அகவிழிக்கு அவசியமானது ஏனெனில் இலங்கையிலுள்ள அனைத்து தமிழ்மொழி மூல ஆசிரியர்கள் இவற்றை பூரணமாக தெரிந்திருக்கவில்லை என்பதையும் அகவிழி சுட்டிக் காட்டுவதற்கு விளைகிறது.

இவர்களது இக்கோரிக்கைகளுக்கு அரசு செவிசாய்க்குமா என்பதே அனைவரினதும் கேள்வி. ஆனால் கோரிக்கைகள் நிறைவேறும் வரை போராடவேண்டும் என்பது எழுதப்படாத விதி. போராட்ட சக்திகள் ஒரு குறிப்பிட்ட கட்டத்தை நோக்கி நகரவேண்டும். ஒன்றுபட்ட தொழிலாளர்களின் சக்தி மாபெரும் பலத்தை சிருஷ்டிக்கிறது. இணைந்திருத்தலும் தனித்திருத்தலும் ஒற்றுமையில் நிலைகொண்டிருக்கிறது. சாத்தியப்படுமா என்ற சந்தேகம் இருக்கக்கூடாது. சாத்தியப்பாட்டை உண்மை நிலையாக மாற்றுவதற்கு அவசியமான காரணக்கூறுகள் ஒட்டுமொத்தமாக தேவை. மாற்றங்களில் நடக்கக்கூடாததும் நடக்கும். நடக்க வேண்டியதும் நடக்கும். போராட்டம் ஒருங்கியைந்த பாதையில் உண்மையாக இருக்குமாயின் அடக்குவோரின் வீழ்ச்சியும் அடக்கப்படுவோரின் வெற்றியும் நடந்தே தீரும்.

V.S. இந்திரகுமார்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# பாடசாலைகளில் மாற்றங்காணும் வெளிநிலைச் சக்திகள்

**பேராசிரியர் சோ. சந்திரசேகரம்**

*முன்னாள் கல்விப் பீடாதிபதி, கொழும்பு பல்கலைக்கழகம்*

பொது நிறுவனங்கள், தனியார் நிறுவனங்கள் என்ற முறையில் உரிமையாளர்களைக் கொண்டு நிறுவனங்கள் வகைப்படுத்தப்படுகின்றன. அத்துடன் தொழிற்பாடுகளின் அடிப்படையில் அவை வர்த்தக நிறுவனங்கள், சேவை நிறுவனங்கள், கைத்தொழில் நிறுவனங்கள் எனவும் அவை வகைப்படுத்தப்படும். மேலும் இந்நிறுவனங்கள் வெளிச் சக்திகளின் செல்வாக்குக்கு உட்படும் போது அவை திறந்த நிறுவனங்கள் என்றும் அழைக்கப்படுகின்றன. பாடசாலை அவ்வாறான ஒரு வகை திறந்த நிறுவனமாகும்.

பாடசாலைகளின் நோக்கங்கள், பாட ஏற்பாடு, அமைப்பு, ஆசிரியர் நியமனம் போன்ற விடயங்களில் பாடசாலைகள் சுயமாக இயங்க முடியாது. வெளிச் சக்திகளாக சமூகம், அரசாங்கம் என்பவற்றின் விருப்பு வெறுப்புக்களுக்கும் தீர்மானங்களுக்கும் அமையவே பாடசாலைகளின் சகல அம்சங்களும் தீர்மானிக்கப்படுகின்றன. அவை அரசாங்கக் கட்டுப்பாட்டில் இயங்குவதால் தேவையான நிறுவனங்கள், மனித வளங்கள் மற்றும் பௌதீக வளங்களுக்குப் பாடசாலைகள் அரசாங்கத்தையே நம்பி இருக்க வேண்டியுள்ளது. அதாவது வெளிச் சக்திகளின் செல்வாக்குக்கு உட்படாமல் பாடசாலைகள் இயங்குவதற்கில்லை. சற்று பல படிகள் மேலே சென்றால் இலங்கையின் அரச பாடசாலை அமைப்பானது வெளியில் இயங்கும் அரசியல் சக்திகளின் தலையீடுகளுக்கும் உள்ளாக நேரிடுகின்றது. இத்தகைய அரசியல் தலையீடு காரணமாக அரசாங்கப் பாடசாலைகளின் கல்வித் தராதரங்கள் வீழ்ச்சி காணுகின்றன, என்றும் இதனால் அரசியல் தலையீட்டைத் தவிர்ப்பதில் அரசியல் கட்சிகளிடையே கருத்தொற்றுமை ஏற்பட வேண்டும் என்றும் தேசிய கல்வி ஆணைக்குழுவின் அறிக்கை ஒன்றில் (2003) தெளிவாகக் கூறப்பட்டுள்ளது. இது பாடசாலைகள் எந்த அளவுக்கு வெளிச்சக்திகளுக்கு இடந்தரும் திறந்த அமைப்புக்கள் என்பதை எடுத்துக் காட்டும்.

இவ்வாறான அரசியல் தலையீடும் செல்வாக்கும் ஒரு எதிர்மறை விளைவை ஏற்படுத்துகின்றன. இது ஒருபுறமிருக்க பாடசாலைகள் வெளிச்சக்திகளினால் பாதிக்கப்படுவது ஒரு வரலாற்று ரீதியான விடயமாகும். சமூகப் பொருளாதார முறைமைகளைப் பொறுத்தவரையில் பொதுவாக மூன்று கட்டங்களை அவதானிக்க முடியும். நீண்டகாலமாக விவசாய, மானிய முறையைக் கொண்டிருந்த சமூகங்கள் 17–18 ஆம் நூற்றாண்டிலிருந்து கைத்தொழில் சமூகங்களாக மாற்றமுற்றன. இக்கைத்தொழில் சமூகங்கள் தொழிற்சாலைகளையும் இயந்திரப் பாங்கான உற்பத்தி முறையையும் பெரு நகரங்களையும் கொண்டிருந்தன. அதன் பின்னர், குறிப்பாக 20 ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியில், பின் கைத்தொழில் சமூகங்கள் தோன்றின. இவை தகவல் தொழில்நுட்பம், கணினித் தொழில் நுட்பம், அறிவுப் பெருக்கம், அறிவை உற்பத்திக்குப்





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பயன்படுத்தும் அறிவார்ந்த பொருளாதாரம் என்பவற்றைக் கொண்டிருந்தன.

இவ்வகையான மூன்று வகையான சமூக, பொருளாதார முறைகளுடைய தேவைகளுக்கு ஏற்றவாறு, கல்வி முறைகளும் உருவாயின. இவ்வகையான பொருளாதார மூறைகள் வேறுபட்ட கல்வி முறைகளும் கல்வி ஏற்பாடுகளும் கல்விச் சிந்தனைகளும் தோன்றக் காரணமாக இருந்தன. ஒரு புறம் கல்வி வளர்ச்சியானது சமூகப் பொருளாதார முறைமையில் பல மாற்றங்கள் ஏற்படக் காரணமாக இருந்தன. சமூகத்தில் பெண்களின் விடுதலை, அவர்களுக்கான உரிமைகள் பற்றிய உணர்வு, பிள்ளைகளின் உரிமைகள் பற்றிய உணர்வு, ஆரோக்கியமாக வாழும் உணர்வு, அதன் காரணமாக ஆயுள் எதிர்பார்க்கையில் ஏற்பட்ட நீடிப்பு மரண வீதங்களில் ஏற்பட்ட வீழ்ச்சி, எழுத்தறிவு வளர்ச்சி, பின்தங்கிய சமூகங்களில் ஏற்பட்ட விழிப்புணர்வும் சமூக நகர்வும் என இவையாவும் கல்வி வளர்ச்சியினால் ஏற்பட்ட சமூக விளைவுகள் எனக் கொள்ளலாம்.

கல்வி வளர்ச்சியின் விளைவாக சமூகத்தில் எவ்வளவுதான் உடன்பாடான மாற்றங்கள் ஏற்பட்டிருந்தாலும் சமூக வளர்ச்சியின் காரணமாக கல்வித்துறையில் நிகழ்ந்த மாற்றங்களே பிரதானமானவை அவ்வாறான மாற்றங்கள் கல்வியினால் சமூகத்தில் ஏற்பட்ட மாற்றங்களை மிஞ்சிவிட்டன என்பதே கல்வித்துறை ஆய்வாளர்களின் கருத்தாகும்.

மேற்கூறிய மூன்று வகை சமூக, பொருளாதார அமைப்புக்களில் வளர்ச்சி பெற்ற கல்வி முறைகள் விவசாய, கைத்தொழில், பிள்ளைத் தொழில் முறைமைகள் இதனையே காட்டுகின்றன.

**விவசாய சமூகங்களில் கல்வி**

கைத்தொழில் மயமாக்கத்திற்கு முற்பட்ட விவசாயக் கழகங்களில் பெரும்பாலான மக்கள் கிராமங்களில் விவசாய நிலங்களுக்கு அண்மையில் வாழ்ந்து வந்தனர். வர்த்தக, இராணுவ மற்றும் அரசாங்கத் தேவைகளுக்காக ஒரு சில சிறு நகரங்கள் மட்டுமே இருந்தன. விவசாய சமூக மக்கள் இயற்கை, பருவங்கள், காலநிலை என்பன பற்றி நன்கு அறிந்திருந்தனர். அவர்களுடைய நாளாந்த வேலை இவற்றுடன் தொடர்புபட்டிருந்தது. அத்துடன் அவர்கள் விலங்குகளையும், பறவைகளையும் நம்பியே வாழ்ந்தனர். இயந்திரங்கள் இல்லாத நிலையில் உடல் உழைப்பையே நம்பி அவர்கள் வாழ்ந்தனர்.

அக்காலத்தில் சமயம், சமய நிறுவனங்கள், அரசர்கள், மானிய பிரபுக்கள் ஆகியோர் செல்வாக்குப் பெற்றிருந்தனர். அரசர்களுக்கு ஆட்சிபுரிய தெய்வீக உரிமை இருந்ததாகக் கருதப்பட்டது. வர்க்கங்களைக் கொண்ட சமூக அமைப்பு முற்றாக ஏற்றுக் கொள்ளப்பட்டது. செல்வந்த வகுப்பினர்கள் நில உடமையாளர்களாகவும் மற்ற வகுப்பினர்களைக் கட்டுப்படுத்தும் அதிகாரம் உடையவர்களாகவும் காணப்பட்டனர். இதன் காரணமாக கலைகளும் இயந்திரங்களும் கல்வி அறிவும் இவர்களுக்குரியதாகவே காணப்பட்டது.

இத்தகைய பின்னணியில் கல்வி வாய்ப்புக்கள் ஒரு சிலருக்குரியதாகக் காணப்பட்டது. அதாவது கல்வி உயர் குழாத்தினரின் ஏகபோக உரிமையாகக் காணப்பட்டது. மற்றவர்களை ஆட்சி செய்வதற்கான அறிவு அவர்களுக்குத் தேவைப்பட்டது. கல்வி நிறுவனங்களைத் தமது தேவைகளுக்கேற்ப அவர்களே உருவாக்கிக் கொண்டனர். இதனால் கல்வியானது தனியாரின் ஏகபோக உரிமையாயிற்று. இதற்கப்பால் சமய நிறுவனங்களும் தமது சமயத் தேவைகளுக்காகக் கல்வி நிறுவனங்களை ஏற்படுத்தியிருந்தன. மேலை நாடுகளில் உயர் குழாத்தினருக்கான கல்வியானது மொழிகள் (இலத்தீன், கிரேக்க மொழி) வரலாறு, தத்துவம், கலைகள், சமயம் என்பவற்றை உள்ளடக்கிக் காணப்பட்டது. சாதாரண மக்கள் உடல் உழைப்புத் தொழிலாளர்கள் என்பதால் இத்தகைய புலமைத் துறைகள் அவர்களுக்குத் தேவையற்றவை. சில பயிற்சிகள் மட்டும் போதுமானவை என்று கருதப்பட்டது. தென்னாசியாவில் உயர்ந்த சாதியினா் எனக் கருதப்பட்டவர்கள் வேத சாஸ்திரங்களைக் கற்றனர். சாதாரண சாதியிலிருந்து இத்தகைய கல்வி தேவையற்றது எனக் கருதப்பட்டதோடு, அவர்கள் நூலறிவு பெறத் தகுதி குறைந்தவர்கள் என்ற நிலைப்பாடும் இருந்தது. நூற்கல்வியே சிறந்தது. தொழிற் பயிற்சியும் தொழில் நுட்பத் திறன்களும் கல்வி தொடர்பானவையல்ல, கல்வியின் பயன் கல்விப் பேறேயன்றி, வேறொன்றமில்லை, என்ற கருத்து நிலையும் ஏற்பட்டது. இத்தகைய விவசாய சமூகச் சிந்தனைகள் தற்போதும் பரந்த அளவில் காணப்படுகின்றன. இதனை சாதாரணமாகப் பாடசாலைக் கல்வி இன்றும் கூட தொழிற்சார்பின்றி நூற்கல்விச் சார்புடையதாகவே விளங்குகின்றது. தொழிற் கல்வியை விட நூலறிவை வழங்கும் பல்கலைக்கழகங்கள் சமூகத்தில் விசேட இடத்தைப் பெற்றுள்ளன.

மேலை நாடுகளின் விவசாய சமூகப் பாடசாலைகள் அக்காலத்து சமூகத்தில் பெருமதிப்பைப் பெற்றிருந்த மடாலயங்கள், இராணுவம், மானிய முறை அரசு ஆகிய நிறுவனங்களை முன்மாதிரியாகக் கொண்டு எழுந்தவை என்பது ஒரு முக்கிய விடயம். மடாலயப் பணியில் பாடசாலைகள் அமையக் காரணம் அக்காலத்தில் மடாலயங்களே கல்வி நிறுவனங்களாக விளங்கின. பாடசாலை அதிபர் பதவி, பாடசாலைகளின் சமயப் பாட ஏற்பாடு, சீருடைகள், கற்பித்தல் முறை (திரும்பத்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திரும்பச் சொல்லல், மனனம் செய்தல், ஆசிரியரின் மேலாண்மை) போன்றவற்றில் மடாலயங்களின் செல்வாக்குத் தெரிந்தது.

மாணவர்களில் வலியுறுத்தப்படும் ஒழுக்காற்றல், அதிகாரபீடத்திற்குக் கீழ்படிதல், நன்னடத்தை, தண்டனைகள் முதலிய விவசாய சமூகப் பாடசாலை அம்சங்கள் மடாலயங்களிடமிருந்து பெற்றுக் கொள்ளப்பட்டவை. இந்த அம்சங்கள் இன்றைய பாடசாலைகளிலும் வலியுறுத்தப்படுகின்றன. அத்துடன் கிறிஷ்தவ மிஷனரிப் பாடசாலைகளின் ஒழுக்காற்றல் சிறந்தது என்ற நிலைப்பாடு இன்றும் உண்டு.

அவ்வாறே பாடசாலைக் கீதம், மகுட வாசகம் (MOTTO), பாடசாலைச் சீருடை என்பனவும் மானிய முறைப் பிரபுக்களின் வாழ்க்கை முறையைத் தற்போதும் பிரதிபலித்து வருகின்றன. பாடசாலைகள் இன்றும் கூட புலமை சார்ந்த பாடங்களுக்கு முக்கியத்துவம் அளிப்பதும் தொழில் சார்ந்த கற்கை நெறிகளை ஏற்கத் தயக்கம் காட்டுவதும் மானிய முறை கால உயர் குழாத்தினரின் கல்வி நெறிகளைப் பிரதிபலிக்கும் தன்மையினவாகும். இல்ல விளையாட்டு போட்டிகள், மாணவர் தலைவர் முறை, பாடசாலைக் கூட்டங்கள் விழாக்கள் என்பவையும் அக்கால மேலோர் குழாத்தினரின் வாழ்க்கை முறைகளிலிருந்து எழுந்தவையாகும்.

**தொழிற்கால பாணியிலான பாடசாலைகள்**

கைத்தொழில் புரட்சியின் பின்னர் எழுந்த பாடசாலை முறையிலும் இதே போன்று கைத்தொழில் சமூகத்திற்குரிய படிமங்களும் குறியீடுகளும் படியத் தொடங்கின. பதினேழாம் நூற்றாண்டு தொடக்கம் மேலைநாடுகளின் பொருளாதார முறைகளில் மட்டுமன்றி சமூக வாழ்க்கையிலும் கைத்தொழில் மயமாக்கம் செல்வாக்குச் செலுத்தத் தொடங்கியது. கோப்பனிக்கர்ஸ், கலிலியோ, ஐசாக் நியூட்டன் போன்ற அறிஞர்களின் விஞ்ஞானக் கண்டுபிடிப்புக்கள் மட்டுமன்றி தொழிற்சாலை முறையும் அதனால் விளைந்த புதிய செல்வமும் சமூகத்தில் பல அடிப்படை மாற்றங்களை ஏற்படுத்தின.

பெரிய அளவிலான பொருள் உற்பத்திக்குக் காரணமான தயாரிப்பு முறையைக் கொண்ட தொழிற்சாலைகள் சமூக, பொருளாதார, முறைமையில் ஒரு பிரதான இடத்தைப் பெற்றன. இயந்திரங்களையும் பொறிமுறைகளையும் கொண்ட தொழிற்சாலை முறையை இயக்குவதற்கு எழுத்தறிவுடையவர்கள் தேவைப்பட்டனர். தொழிலாளர்கள் அனைவரும் அடிப்படைக் கல்வி பெற்றவர்களாக இருக்க வேண்டிய நிலையில் யாவருக்கும் ஆரம்பக் கல்வி வழங்கப்படலாயிற்று. கட்டாயக் கல்வி விதிகள் இயற்றப்படலாயின. பாடசாலைகளில் இத்தகைய



அடிப்படைத் திறன்களை வழங்கும் பொதுப்பாட ஏற்பாடு உருவாக்கப்பட்டது.

கிராம சமூகங்கள் வீழ்ச்சியடைந்து, சமூகத் தொடர்புகளும் ஆளிடைத் தொடர்புகளும் குறைந்த நகர்ப்புற வாழ்க்கை கைத்தொழில் மயமாக்கத்தின் ஒரு பிரதான விளைவாகும். இதனால் பிளவு பட்டுக் காணப்பட்ட சமூக உறவுகளில் இணக்கத்தைக் காண பாடசாலைக் கல்வியினூடாக ஒருமைப்பாடு ஒரு முக்கிய கல்வியின் நோக்கமாயிற்று.

கைத்தொழில் மயமாக்கத்துடன் எழுச்சியுற்ற புதிய செல்வந்த வகுப்பு, தொழிலாளர் வகுப்பு என்பவற்றைப் பிரதிபலிக்கும் வகையில் இருவகையான பாடசாலை மற்றும் பல்கலைக்கழக முறைமைகளும் எழுச்சியுற்றன. குறிப்பாக பிரித்தானியாவின் மூவகை சமூகவகுப்புக்களைப் பிரதிபலிக்கும் மூவகைப் பாடசாலை முறைமை (Tripartite) எழுச்சியுற்றது. உயர்வகுப்பினருக்கான ஒக்ஸ்போட், கேம்பிரிட்ஜ் பல்கலைக்கழகங்களுக்கு அப்பால் மாகாணப் பல்கலைக்கழகங்களும் தொழில் நுட்பக் கல்லூரிகளும் எழுந்தன. சாதாரண மக்களுக்கான அரசாங்கப் பள்ளி முறையும் உயர் வகுப்பினருக்கான தனியார் பாடசாலை முறையும் உருவாகின.

அரசாங்க பாடசாலை முறையை நிர்வகிக்க ஒரு அதிகார வர்க்க முறைமை (பணிக்குழு ஆட்சி) ஏற்படுத்தப்பட்டது. தொழிற்சாலைகளைப் பொறுத்த வரையிலும் அங்கு பணிபுரிந்த தொழிலாளர்களையும் உற்பத்தி முறைகளையும் கட்டுப்படுத்த ஏற்படுத்தப்பட்ட பணிக்குழு ஆட்சி முறை பாடசாலைகளைப் பொறுத்தவரையிலும் பின்பற்றப்பட்டது. இவ்வாறு கைத்தொழில் சமூகத்தில் பெரும் முக்கியத்துவம் பெற்றிருந்த தொழிற்சாலை முறைமை அம்சங்கள் பாடசாலை முறைமையிலும் இடம்பெறலாயிற்று. எல்லா வகையிலும் தொழிற்சாலை அம்சங்களைக் கொண்டதாக பாடசாலைகளும் விளங்கின என்பது குறிப்பிடத்தக்கது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**பின் கைத்தொழில் சமூகம்**

பல மேலை நாடுகள் இன்று பின் கைத்தொழில் சமூகம் / நாடுகள் என்ற அந்தஸ்தைப் பெற்றுள்ளன. பல்வேறு காரணங்களுக்காக விவசாயத்துறையிலும் கைத்தொழில் துறையிலும் ஈடுபடும் மக்களின் தொகை பெருமளவிற்கு வீழ்சசியடைந்து விட்டது. பொருள் உற்பத்தித் துறையில் 50% மான மக்கள் ஈடுபட்டிருந்த நிலைமை இன்றில்லை. 10%, 15% மானவர்களே அதில் ஈடுபட்டுள்ளனர். விவசாயமும் கைத்தொழிலும் இலாபந்தரும் தொழிலாக இருந்த போதிலும் அதில் வேலைவாய்ப்புக்கள் மிகவும் குறைந்து சேவைத் துறையிலும் உயர் தொழில் துறையிலும் வேலைவாய்ப்புக்கள் பெருகிவருவது பின் கைத்தொழில் சமூகத்தின் ஒரு பிரதான அம்சமாகும். கோளமயமாக்கத்தைத் தொடர்ந்து எழுச்சியுற்ற சந்தைப் பொருளாதார சிந்தனைகள், எழுச்சி பெற்றுவரும் அறிவுப் பொருளாதார சிந்தனைகள், என்பன கல்வித்துறைக்கான புதிய சிந்தனைகளுக்கு வழிகோலி உள்ளன. பாடசாலை பற்றிய பழைய சிந்தனைகள் மாற்றம் பெற்று வருகின்றன. இம்மாற்றங்களுக்கு ஏற்ப பாடசாலைக் கல்வியின் நோக்கங்கள் நிர்வாக முறை, பாட ஏற்பாடு, கற்பித்தல் முறை, ஆசிரியர்களின் வருமானம் என்பன பெரிய மாற்றங்களுக்கு உள்ளாகி வருகின்றன.

பாடசாலைகள் இன்று தனியார் வர்த்தகத்துறை போன்று கருதப்படுகின்றன. அவற்றின் உற்பத்திப் பொருள் கல்வி, அவற்றின் வாடிக்கையாளர்கள் மாணவர்களும் பெற்றோர்களுமாவார்கள்.

தங்களுடைய உற்பத்திப்' பொருள் (கல்வி) சிறப்பாக இருந்தால் மட்டுமே வாடிக்கையாளர்கள் அவர்களை நாடி வருவார். அவர்கள் வழங்கும் கல்வி சிறந்ததாக தரமானதாக இருந்தால் மட்டுமே வாடிக்கையாளர்கள் நாடி வருவார்கள். எனவே பாடசாலைகள் தம்மை விற்கின்ற ஆற்றல் உடையவனாக மாற வேண்டும். அத்துடன் பாடசாலைகள் கல்விச் சந்தையில் தமக்குரிய ஒரு இடத்தைப் பெற்றுக் கொள்ள வேண்டும். அதனைப் பெற்றுக் கொள்ள போட்டியிட வேண்டும்.

உள்ளூர் சமூகத்தின் கல்வித் தேவைகள் எவை என்பதை இனங்கண்டு அவற்றை வழங்குவதற்கான ஏற்பாடுகளை பாடசாலைகள் செய்ய வேண்டும். நுகர்வாளர்களை திருப்தி செய்யும் முறையில் அவை இயங்கி ஏனைய வர்த்தக நிலையங்கள் போல் பணியாற்றிட வேண்டும்.

வர்த்தக நிறுவனங்கள் போன்று பாடசாலைகள் தம்மை நிர்வகித்துக் கொள்ளும். இவை ஓரளவிற்கு சுயமாக நிதியீட்டிக் கொள்ளும்.

அரசாங்கத்தின் பல்வேறு மட்டங்களில் இருந்து இவை நிதி உதவி பெறும் சில அடிப்படையான திறன்கள் மற்றும் அறிவையும் மாணவர்களுக்கு வழங்குவதற்காக இந்த நிதி பாடசாலைகளுக்கு வழங்கப்படும். பாடசாலைகளில் சேருகின்ற ஒவ்வொரு பிள்ளைக்கும் அரசாங்கம் பண ஆணைகளை (வவுச்சர் வழங்கும்)

பாடசாலைகள் அனைத்தும் தமக்கிடையே வலைத்தள தொடர்புகளை (networking) ஏற்படுத்திக் கொள்ளும். தமக்கிடையே ஒத்துழைத்து, தேவையற்ற போட்டிகளைத் தவிர்த்துக் கொள்ளும், கற்றல் அனுபவங்களைப் பகிர்ந்து கொண்டு பயனடையலாம்.

அறிவுச் சமூகத்தின் புதிய பாடசாலைகள் தமது தொழிற்பாடுகளை விரிவு செய்து வருகின்றன. மிக உயர்தரமான பாடசாலைகள் உலகளாவிய கல்வி நிறுவனங்களுடன் தொடர்புகளை ஏற்படுத்துகின்றன. தமது மண்டபங்கள், கணினி நிலையங்கள், அரங்குகள் என்பவற்றை சமூகப் பயன்பாட்டிற்கு வழங்குகின்றன. சமூகத்தின் பொழுது போக்கு நிறுவனங்கள், விளையாட்டுச் சங்கங்கள், என்பவற்றுடன் தொடர்பு கொள்கின்றன. பாட ஏற்பாட்டு சாதானங்கள், கற்பித்தல் துணைக்குழுக்கள் என்பவற்றைத் தயாரிக்கின்றன.


மரபு வழிவந்த கல்விமுறை என்ற ஒருமைப்பாடான அமைப்பு பொருந்தியதாக எண்ணற்ற கற்றல் - கற்பித்தல் ஏற்பாடுகள் தோன்றி வருகின்றன.

மேலைநாடுகளில் ஆசிரியர்களின் அதிகரித்த சம்பளங்கள் காரணமாக, நிதி ஒதுக்கீட்டில் பிரச்சினைகள் ஏற்படுகின்றன. இதனால் பாடசாலைகளின் ஊழியர் செறிவை (ஆசிரியர் தொகையை) குறைத்து அவர்களின் கற்றலுக்கு முற்றாக நவீன முறைகளைப் பயன்படுத்தும் நிலை ஏற்படலாம்.

கைத்தொழில் யுகத்தோடு ஒப்பிடும் போது புதிய அறிவுயுகத்தில் நூல்களுக்குப் பதிலாக தொழில்நுட்பம் கற்றல் கருவி, பாடநூலுக்குப் பதிலாக இலத்திரன் நூல் நிலையம், வகுப்பறையே உலகம் என்ற நிலைமாறி உலகமே வகுப்பறை கற்கை முடிவில் சான்றிதழ் என்ற நிலைமாறி வாழ்க்கை நீடித்த கல்வி மனன முறைக்குப் பதிலாக பிரச்சினை தீர்த்தல் முறை, பாட உள்ளடக்கத்திற்குப் பதிலாக சுய கற்றல் திறன்கள், வாசிப்புத் திறன்களுக்குப் பதிலாக தொடர்பாடல், தகவல் நிறுவனங்கள், மாணவர் மத்தியில் போட்டி என்ற நிலை நீங்கி அவர்கள் மத்தியில் ஒத்துழைப்புக் கற்றல், நிர்வாக வசதிகளுக்கான கற்றல் என்றில்லாது மாணவர் வசதிக்காக கற்றல், ஆசிரியரே அறிவின் ஊற்று என்ற நிலைமாறி அவர் ஒரு வழிகாட்டி, கற்றலை இலகுபடுத்துபவர் என்ற மறையில் புதிய அறிவு மைய யுகத்திற்கேற்ப கல்வி முறைகள் மாறி வருகின்றன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# ஆங்கில மொழித் தேர்ச்சி மேம்பாட்டுக்கான கொள்கைத் தெரிவுகள்

**தை. தனராஜ்**

*முதுநிலை விரிவுரையாளர், கல்விப் பீடம்*
*இலங்கை திறந்த பல்கலைக்கழகம்*

**முன்னுரை**

பல்வேறு வரலாற்றுக் காரணங்களினால் சர்வதேச மொழியாகப் பரிணாமம் பெற்றுவிட்ட ஆங்கில மொழி இன்று உலகளாவிய அறிவுசார் பொருளாதாரத்தின் மூலவேராகவும் மாறியுள்ளது. சர்வதேச நிதி, வர்த்தகம் மற்றும் சர்வதேச அரசியல், சமூக பொருளாதார கருத்தாடல்களின் முதன்மை மொழியாக வளர்ச்சி பெற்றுள்ள ஆங்கில மொழியானது அறிவுக்கருவூலமாகவும் விளங்குகிறது. பெரும்பாலான தேசிய, சர்வதேச ஆய்வுகள் குறிப்பாக விஞ்ஞான, மருத்துவ, தொழில்நுட்ப ஆய்வுகள் ஆங்கில மொழிகளிலேயே மேற்கொள்ளப்படுவதோடு ஆய்வு முடிவுகளும் அம்மொழியிலேயே ஆராய்ச்சிப்படுத்தப்பட்டு உலகளாவிய ரீதியில் பகிர்ந்து கொள்ளப்படுகின்றன.

இலங்கையில் ஆங்கிலேயர் காலத்தில் ஆங்கிலம் ஆட்சி மொழியாகவும் நிர்வாக மொழியாகவும் விளங்கியதோடு பயிற்று மொழியாகவும் விளங்கியது. எனினும் 1956க்குப் பின்னர் ஏற்பட்ட தேசியவாத எழுச்சியினால் ஆங்கிலம் இலங்கை மக்களின் அரசியல், சமூக வாழ்விலிருந்து தூக்கி எறியப்பட்டது. காலணித்துவ ஆட்சியிலிருந்து விடுதலை பெற்ற ஒரு நாட்டில் தேசிய மொழிகளுக்கு புத்துயிர் அளிக்க வேண்டியது அவசியமே ஆயினும் ஆங்கிலத்தைத் தூக்கி எறிதலால் மக்களுக்கு குறிப்பாக இக்காலத் தலைமுறையினருக்கு ஏற்படக்கூடிய பாதகங்கள் பற்றிச் சிந்திக்கும் தெளிவும் தூர நோக்கும் குறுகிய தேசிய வாதத்தை முன்னிறுத்தி ஆட்சிக் கதிரைகளில் அமர்ந்து கொண்ட அன்றைய அரசியல் தலைவர்களுக்கு இருக்கவில்லை. இவர்களது தவறான அணுகுமுறையினால் எமது நாட்டின் இளைய தலைமுறையினரின் ஆங்கில மொழித் தேர்ச்சி படிப்படியாக வீழ்ச்சியுற்று ஆதாளபாதாளத்தை அடைந்தது.

எனினும் 1977க்குப் பின்னரான திறந்த பொருளாதாரம், உலகளாவிய ரீதியில் ஏற்பட்டுள்ள விஞ்ஞான, தொழில்நுட்ப வளர்ச்சிகள் மற்றும் பூகோளமயமாக்கம் என்பவற்றினால் திரும்பவும் மாணவர்கள் மத்தியில் ஆங்கில மொழித் தேர்ச்சியை மேம்படுத்தும் முயற்சிகள் பல்வேறு மட்டங்களில் மேற்கொள்ளப்படுகின்றன. இக்கட்டுரையானது ஆங்கில மொழியின் இன்றைய முக்கியத்துவம் இலங்கையில் ஆங்கில மொழித் தேர்ச்சியின் நிலைமை மற்றும் ஆங்கில மேம்பாட்டு முயற்சிகள் பற்றி ஆராய முற்படுகிறது.

**ஆங்கில மொழியின் முக்கியத்துவம்**

ஆங்கில மொழியானது நாம் ஏற்கனவே குறிப்பிட்டவாறு உலகளாவிய ரீதியில் முதன்மை மொழி ஆகிவிட்டது. எனவே ஆங்கில மொழித் தேர்ச்சியானது நவீன சமூகங்களுக்கு அல்லது நவீன சமூகமாக உருமாற்றம் பெறுவதற்கு முயலும் சமூகங்களுக்கு ஓர் அத்தியாவசிய தேர்ச்சியாகிவிட்டது. இன்று இந்தியா ஒரு வலிமைமிக்க பொருளாதார சக்தியாக வளர்ச்சி அடைவதற்கு ஆங்கில மொழியின் பங்களிப்பு முக்கியமானது. இந்தியாவின் சனத்தொகையில் குறிப்பிடத்தக்க பங்கினர் குறிப்பாக தொழில் முயற்சியாளர்கள், முகாமையாளர்கள், தொழில்நுட்பவியலாளர்கள் மற்றும் தொழிலாளர்கள் ஆங்கிலத்தில் தேர்ச்சி உள்ளவர்களாக விளங்குகின்றனர். அதே போல ஆசியாவின் முதன்மைப் பொருளாதாரமாக வளர்ச்சியுற்றுள்ள சீனா தனது மக்கள் ஆங்கிலத்தில் தேர்ச்சி பெறுவதற்கு பெருந்தொகையான நிதியை முதலீடு செய்துள்ளது. சுமார் 325 மில்லியன் சீனர்கள் அதாவது சனத்தொகையின் ஐந்திலொரு பங்கினர் ஆங்கில மொழியைப் பயில்கின்றனர். ஆங்கில மொழிப் பாடநூல்களுக்காக சீனா வருடாந்தம் 60 மில்லியன் டொலர்களைச் செலவு செய்கிறது. கல்லூரிகள் மற்றும் பல்கலைக் கழகங்களில் பயிலும் மாணவர்கள் ஆங்கில மொழியைத் தாய் மொழியாகக் கொண்ட ஆசிரியர்களிடம் கற்க வேண்டும் என்னும் நோக்குடன் ஆஸ்திரேலியா, கனடா, இங்கிலாந்து, நியூசிலாந்து முதலிய நாடுகளிடமிருந்து ஆங்கில ஆசிரியர்களை நியமித்துள்ளது. ஆங்கிலம் தரம் 3இல் இருந்து கட்டாய பாடமாக அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. ஆங்கில மொழியை கற்றல், கற்பித்தல் மற்றும் மதிப்பீடு செய்தல் தொடர்பாக, சீனா தற்போது ஐரோப்பிய சட்டகத்தை பின்பற்றி ( A Common European Framework of Referance 1996) புதிய கலைத்திட்டத்தையும் கற்பித்தல்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



முறைகளிலும் பின்பற்றுகிறது. ஆரம்ப வகுப்பு முதல் உயர்வகுப்பு வரை ஒன்பது தேர்ச்சி மட்டங்கள் அறிமுகஞ் செய்யப்பட்டு மாணவர்கள் உரிய மட்டங்களை அடைய ஊக்குவிக்கப்படுகின்றனர்.

இதேபோல் இலங்கையிலும் இன்று ஆங்கில மொழித் தேர்ச்சிக்கான கேள்வி வேகமாக அதிகரித்துள்ளது. இலங்கைப் பொருளாதாரமும் ஏற்றுமதி வர்த்தகமும் பன்முகப்படுத்தப்பட்டுள்ள நிலையில் ஆங்கில மொழித் தேர்ச்சிக்கான முக்கியத்துவம் சகல மட்டங்களிலும் உணரப்பட்டுள்ளது. ஆங்கில மொழித் தேர்ச்சியானது வெளிநாடுகளில் பிரசித்திபெற்ற உயர்கல்வி நிலையங்களில் கற்கும் வாய்ப்புக்களை விரிவாக்கியுள்ளது. அதுமட்டுமன்றி உயர்வருமானமும் வசதிகளும் கொண்ட சர்வதேச தொழிற்சந்தைக்கான பிரவேசமும் ஆங்கில மொழித் தேர்ச்சி கொண்டவர்களுக்குக் கிடைக்கிறது.

தவிர, பன்மொழி, பன்மத, பல்கலாசார நாடான இலங்கையில் ஆங்கில மொழித் தேர்ச்சியானது பல்வேறு இனக்குழுக்களிடையே நல்லிணக்கத்தையும் பரஸ்பர விளக்கத்தையும் துரிதப்படுத்துவதற்கு ஒரு கருவியாகவும் விளங்கக் கூடும்.

இவ்வாறான காரணங்களினால் ஆங்கில மொழித் தேர்ச்சியின் முக்கியத்துவம் இன்று இலங்கையில் கொள்கைரீதியாக ஏற்றுக் கொள்ளப்பட்டுள்ளது. அரசாங்கக் கொள்கை விளக்கமான மகிந்த சிந்தனை கல்வித்துறை அபிவிருத்திச் சட்டகம் மற்றும் நிகழ்ச்சித் திட்டம் (Education Sector Development Framework and Programme 2007) புதிய கல்விச் சட்டத்திற்கான முன்மொழிவுகள் (2010) ஆகிய ஆவணங்களில் ஆங்கில மொழித் தேர்ச்சியின் முக்கியத்துவம் வலியுறுத்தப்பட்டுள்ளதோடு அதனை மேம்படுத்துவதற்கான கொள்கைத் தெரிவுகளும் முன்மொழிவுகளும் முன்மொழியப்பட்டுள்ளன.

## ஆங்கில மொழித் தேர்ச்சியின் இன்றைய நிலைமைகள்

வரலாற்று ரீதியாகப் பார்க்கும் போது காலனித்துவ ஆட்சியின் விளைவாக இலங்கைப் பாடசாலைகளில் ஆங்கிலத் தேர்ச்சி உயர்நிலை மட்டத்தில் இருந்திருக்கவேண்டும். ஆனால் நிலமை எதிர்மறையாகவே இருந்துள்ளது. கடந்தகாலங்களிலிருந்து க.பொ. த சாதாரணதர பரீட்சையில் கணிதம், விஞ்ஞானம் ஆகிய பாடங்களை விட ஆங்கிலமொழிப் பாடத்தின் பெறுபேறுகள் கீழ்மட்டத்திலேயே இருந்து வருகின்றன.

பின்வரும் அட்டவணை 2005 முதல் 2009 வரையிலான ஆண்டுகளில் க.பொ. த சாதாரணதர மற்றும் உயர்தர பரீட்சையில் ஆங்கில அடைவைக் காட்டுகிறது.

### அட்டவணை-1

பொதுப் பரீட்சைகளில் ஆங்கிலத் தேர்ச்சி

| பரீட்சை | ஆண்டு | | | | |
|---|---|---|---|---|---|
| | 2005 | 2006 | 2007 | 2008 | 2009 |
| க.பொ.த. (சா/த) | 36 | 37 | 40 | 31 | 37 |
| க.பொ.த. (உ/த) | 24 | 24 | 30 | 28 | 28 |

மூலம்: உலகவங்கி-2011

மேற்படி அட்டவணையின் படி க.பொ.த சாதாரணதர பரீட்சை ஆங்கிலப்பாடத்தின் பெறுபேறுகள் 36-40 வீதத்துக்கு இடைப்பட்டதாக உள்ளது உயர்தரத்தில் பொது ஆங்கில பாடத்தில் 24-30 வீதத்துக்கு இடைப்பட்டதாகவே உள்ளது. அத்துடன் இலங்கைத்திறந்த பல்கலைக்கழகம் தரம் 10 மாணவர்களின் ஆங்கில தேர்ச்சி தொடர்பாக மேற்கொண்ட ஆய்வின் படி (2010) 47வீத மாணவர்கள் 10-39 வீதமான புள்ளியினையே பெற்றனர்.

எழுத்தறிவு ,பாடசாலைப்பரம்பல் , மாணவர்சேர்வு, ஆசிரியர் மாணவர் விகிதம் ஆண்-பெண் கல்விச்சமத்துவம் முதலிய பல்வேறு கல்விசார் குறிகாட்டிகளில் இலங்கையின் அடைவுகள் வளர்முக நாடு என்ற அடிப்படையில் உன்னதமானவைகளாக பாராட்டப்படுகின்றன. காலணித்துவ காலத்தில் 1869ஆம் ஆண்டிலேயே கல்விக்கான ஒரு திணைக்களம் நிறுவப்பட்டது. காலணித்துவ தேவைகளை பூர்த்தி செய்யக்கூடிய ஒரு கூட்டத்தினரை உருவாக்குவதற்காகவே காலணித்தவ வாதிகள் இலங்கையில் கல்வி விருத்தியை மேற்கொண்டனர் எனினும் அது சமூகத்தின் ஏனைய பிரிவினர்களும் கல்வியில் ஊக்கம் கொள்ள உதவியது. அரசாங்க சபையில் (1931) கல்வி அமைச்சராய் பொறுப்பேற்ற திரு. C.W.W. கன்னங்கரா நியமித்த கல்விமீதான விசேட ஆணைக்குழு சுதந்திர



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இலங்கையின் கல்வி மேம்பாட்டுக்கான ஓர் உறுதியான அடித்தளத்தை நிறுவியது. ஆனால் 1956க்குப் பின்னர் ஏற்பட்ட தீவிர தேசியவாத எழுச்சியின் விளைவாக ஆங்கில மொழிப் பாடசாலைகளில் நிராகரிக்கப்பட்டது. உண்மையில் இலங்கை சுதந்திரம் அடைந்த போது சமூகத்தின் உயர்ந்தோர் குழாம் (Elite) மட்டத்திலேயே ஆங்கில மொழி கையாளப்பட்டது உண்மையில் ஆங்கிலத்திற்கு எதிரான குறுகிய தேசியவாத முனைப்புகளுக்குப் பதிலாக சமூகத்தின் சகல பிரிவினரும் ஆங்கிலத் தேர்ச்சியைப் பெற்றுக் கொள்ளும் நடவடிக்கைக் கொள்கை வகுப்போர் மேற்கொண்டிருப்பின் இலங்கை பல நன்மைகளை அடைந்திருக்கக் கூடும். இந்தியா, சிங்கப்பூர் முதலிய நாடுகள் தாம் சுதந்திரம் அடைந்த பின்னர் சமூகத்தின் சகல பிரிவினர் மத்தியிலும் ஆங்கிலத் தேர்ச்சியை மேம்படுத்தும் முயற்சியை மேற்கொண்டனர். அதன் விளைவாக அவை பொருளாதார மேம்பாட்டை அடைவதற்கு ஆங்கிலத் தேர்ச்சி ஓர் உடன்பாடான காரணியாக அமைந்தது.

(ஆங்கில மொழித் தேர்ச்சியை மேம்படுத்துவதற்கு எதிரான தடைகளும் அவற்றை நீக்குவதற்கான முயற்சிகளும்.)

ஆங்கிலத்தை இரண்டாம் மொழியாகக் கற்பிப்பது தொடர்பாக வியட்னாம், தாய்லாந்து, இந்தோனேசியா, ஜப்பான், தாய்வான், தென்கொரியா, பிலிப்பைன்ஸ், சிங்கப்பூர் ஆகிய எட்டு நாடுகளில் மேற்கொண்ட ஆய்வுகளில் (2007) பின்வரும் பொதுவான பிரச்சினை இனங்காணப்பட்டன.

1. வகுப்பறைப் பருமன்- 30 முதல் 60 மாணவர்கள்
2. மாணவரின் தேர்ச்சியில் பல்வேறு படிநிலைகள்
3. மாணவர் மையக் கற்பித்தலில் ஆசிரியருக்கு பயிற்சியின்மை
4. ஆங்கில ஆசிரியர்கள் மத்தியில் ஆங்கில மொழித் தேர்ச்சிக் குறைவு
5. தகைமையுள்ள ஆசிரியர்களின் பற்றாக்குறை
6. வகுப்பறைக்கு வெளியே ஆங்கிலத்தைப் பயன்படுத்த முடியாத சூழ்நிலை
7. மாணவரின் கற்கும் ஆர்வத்திற்கு சாதகமற்ற பாடநூல்களும் ஏனைய கற்றல் சாதனங் களும்

மேற்படி காரணிகள் இலங்கைக்கும் பொது வானவைகளாகும். எனினும் இக்காரணிகளை நீக்குவதற்கான முயற்சிகள் 1990 களிலிருந்து மேற்கொள்ளப்படுகின்றன. இவற்றுள் முதன்மையானது தரம் 1 இல் அறிமுகஞ் செய்யப்பட்ட செயற்பாடு சார்ந்த வாய்மொழி ஆங்கிலமும் (Activity Bases Oral English) தரம் 3 முதல் ஆங்கிலத்தை இரண்டாம் மொழியாகக் கற்பித்தலும் ஆகும். அடுத்தது இருமொழிக் கல்வி மூலம் குறிப்பிட்ட சில பாடங்களை மாணவர்கள் ஆங்கிலத்தில் கற்க வழிப்படுத்தியமையாகும்.

ஆங்கில மொழிக் கற்பித்தலை மேம்படுத்துவதற்காக பிராந்திய நிலைகள் (Regional English Support Centres (RESCS) அமைக்கப்பட்டன. அவை ஆரம்ப வகுப்புகளில் ஆங்கிலம் கற்பித்தலை மேம்படுத்துவதற்கு மாணவர்க்கான பாடநூல், செயல்நூல், துணைவாசிப்பு நூல்கள், ஆசிரியர் வழிகாட்டி மற்றும் வீடியோவுடனான ஆசிரியர்களுக்கான பயிற்சிக் கைநூல் ஆகியவை பயன்படுத்தப்படுகின்றன. இவை ஆசிரியர்கள் மத்தியில் வரவேற்பையும் பெற்றுள்ளன.

ஆரம்ப வகுப்பு மட்டத்தைப் பொறுத்த மட்டில் ஆங்கிலத் தேர்ச்சி அதிகரித்துள்ளதை ஆய்வுகள் காட்டுகின்றன. 2009 இல் (NEREC தரம் 4 மாணவர்களின் ஆங்கிலத் தேர்ச்சி தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட ஆய்வில் கேட்டல், பேச்சு, வாசிப்பு, எழுத்து ஆகிய மொழித்திறன்களில் 2003 – 2009 ஆண்டுகளுக்கிடையில் குறிப்பிடத்தக்க வளர்ச்சி ஏற்பட்டிருப்பதை உறுதிப்படுத்தியது.

எனினும் இடைநிலை வகுப்புக்களைப் பொறுத்தமட்டில் குறிப்பிடக் கூடிய விருத்திகள் பதிவுசெய்யப்படவில்லை. தற்போதைய பாடநூல்கள் கவர்ச்சிகரமாக உள்ளன. தொனிப்பொருள், மொழிக் கட்டமைப்புக்களில் கிடையான மற்றும் நிலைக்குத்தான ஒன்றிணைப்புக்கள் காணப்படுகின்றன. எனினும் இப்பாடநூல்களில் பல குறைபாடுகளும் உள்ளதாக ஆய்வுகள் தெரிவிக்கின்றன. குறிப்பாக ஒரே ஒரு பாடநூல் பயன்படுத்தப்படுகின்றமையானது வகுப்பறையில் காணப்படும் பல்வேறுபட்ட மொழிசார் நிலைமைகளுக்கு சாதகமானதல்ல. பாடநூல்களில் மொழித்திறன்களுக்கு சமமான முக்கியத்துவம் கொடுக்கப்படவில்லை என்பதோடு பல்வேறு தவறுகளும் காணப்படுகின்றன. தவிர, ஆசிரியர் வழிகாட்டியில் கூறப்பட்டுள்ள மொழித்தேர்ச்சிகள் அனைத்தையும் அடையக்கூடியதாக பாடநூல்கள் அமையவில்லை என்பது கண்டறியப்பட்டுள்ளது.

மாணவர்களின் மொழித்தேர்ச்சியில் ஆசிரியர்களின் வகிபாகமும் பிரதானமான காரணியாகும். இலங்கையில் ஆங்கில ஆசிரியர்களின் எண்ணிக்கை மேலதிகமாக உள்ளது. 2010 இல் தேவையான ஆங்கில ஆசிரியர்களின் எண்ணிக்கை 21,425 ஆக இருக்கும்போது ஆசிரியர்களின் இருப்பு 21,476 ஆகவிருந்தது. அவை ஆங்கில ஆசிரியர்களின் பரம்பலில் பிரச்சினை உள்ளது. 35 வீதமான குறிப்பாக கிராமப்புற பாடசாலைகளில் ஆசிரியர் பற்றாக்குறை நிலவியபோது 12 வீத பாடசாலைகளில் ஆங்கில



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆசிரியர்கள் மேலதிகமாக இருந்தனர். அத்துடன் ஆங்கில ஆசிரியர்கள் தரம், அவர்களுக்கு வழங்கப்படும் பயிற்சியின் விளைதிறன், பயிற்றுனர்களின் தரம் மற்றும் அர்ப்பணிப்பு, கல்விநிலையங்கள் மற்றும் பயிற்சி நிலையங்களில் காணப்படும் வளங்கள், பயிற்சி முறைகள் தொடர்பாக பல்வேறு பிரச்சினைகளும் இனங்காணப்பட்டுள்ளன.

அண்மைக்காலத்தில் அறிமுகஞ் செய்யப்பட்ட இலங்கையில் இருமொழிக் கல்வி பல நாடுகளில் வெற்றிகரமாக நடைமுறைப்படுத்தப்படுகிறது. இருமொழிக் கல்வியைப் பயிலும் மாணவர்களின் எதிர்கால உயர்கல்வி மற்றும் தொழில் வாய்ப்புக்கள் பிரகாசமானவை. அத்துடன் இலங்கையைப் பொறுத்த மட்டில் பல்லின மாணவர்கள் ஒரே வகுப்பில் சேர்ந்து பயில்வதால் சமூக நல்லிணக்கத்திற்கும் வாய்ப்பு ஏற்படுகிறது. எனினும் இலங்கையில் இருமொழிக் கல்வி பல்வேறு குறைபாடுகளைக் கொண்டுள்ளதாக அறியப்படுகிறது. குறிப்பாக இருமொழிக்கல்வியை வெற்றிகரமாக அமுல்படுத்தும் நாடுகள் உள்ளடக்கம் மற்றும் மொழி ஒன்றிணைப்புக் கற்றல் முறைகள் (Content and Language Intergrated Learning) பின்பற்றுகின்றன. இலங்கையிலும் இம்முறை விதந்துரைக்கப்பட்ட போதும் அது பொருத்தமாகக் கடைப்பிடிக்கவில்லை என ஆய்வுகள் சுட்டிக்காட்டுகின்றன. திட்டமிடல், பாடநூல்களின் உருவாக்கம், ஆசிரியர் பயிற்சி, கற்பித்தல் வளங்கள் சம்பந்தப்பட்ட நிறுவனங்களுக்கிடையிலான இணைப்பாக்கம் ஆகியவற்றில் காணப்படும் குறைபாடுகள் இருமொழிக்கற்றலின் விளைதிறனைப் பாதித்துள்ளன.

### ஆங்கிலமொழித்தேர்ச்சிக்கான கொள்கைத் தெரிவுகள்

சமகால தேசிய, சர்வதேசிய சமூகபொருளாதார செல்நெறிகளும் தேவைப்பாடுகளும் எமது மாணவர்கள் ஆங்கிலத்தில் உயர்ந்த தேர்ச்சி நிலையை அடைவதை வேண்டிநிற்கின்றன. குறுகிய காலத்தில் ஏற்பட்ட சர்வதேச பாடசாலைகளின் எழுச்சி பெற்றோர் தமது பிள்ளைகளின் ஆங்கில மொழித் தேர்ச்சியில் காட்டும் ஆர்வத்தையும் அக்கறையையும் வெளிப்படுத்துகின்றன. எனினும் மாணவர்கள் சகல பாடங்களையும் ஆங்கிலத்தில் கற்பது தொடர்பாக கல்வியாளர்கள் மத்தியில் கருத்தொருமிப்பு இல்லை. எமது கலாசாரம் மற்றும் மரபுரிமைகளின் நிலைக்களனான தாய்மொழிக் கல்வியை முற்றாகக் கைவிட்டு திரும்பவும் ஆங்கில மொழிக் கல்வியை ஏற்றுக் கொள்வதைப் பெரும்பாலான இந்தியர்கள் எதிர்க்கின்றனர்.

எனினும் ஆங்கில மொழித் தேர்ச்சியின் முக்கியத் துவத்தை நாம் குறைத்து மதிப்பிட முடியாததன் காரணமாக இவ்விடயம் தொடர்பான சரியான கொள்கைத் தெரிவுகள் அவசியமாகின்றன.

- ❖ பயிற்று மொழி தொடர்பாக பொதுக் கல்விக்கான புதிய சட்டத்தை உருவாக்குவதற்கான தேசிய குழு பின்வரும கொள்கைத் தெரிவுகள் முன்வைத் துள்ளது.
- ❖ ஆரம்பக் கல்வி மட்டத்தில் தாய்மொழியிலே பயிற்று மொழியாக இருக்கவேண்டும், தரம் 3-11 வரை ஆங்கிலம் கட்டாய பாடமாக கற்பிக்கப்பட வேண்டும்.
- ❖ ஆரம்பக் கல்வி மட்டத்தில் முதன்மை நிலை 1 இல் அறிமுகப்படுத்தப்பட்டுள்ள வாய்மொழி ஆங்கிலத்தை மேம்படுத்த தீவிரமான முயற்சிகள் மேற்கொள்ளப் படவேண்டும்.
- ❖ இடைநிலைக் கல்வி மட்டத்திலும் தாய்மொழி பயிற்று மொழியாகத் தொடர வேண்டும் எனினும் தேவையான வளங்கள் இருப்பின் விரும்புபவர்களுக்கு இருமொழி அல்லது ஆங்கில மொழி மூலமாகக் கற்பிக்கலாம்.

### முடிவுரை


புதிய கல்விச் சட்டம் பயிற்றுமொழி தொடர்பான மேற்படி விதந்துரைகளுடன் பாராளுமன்றத்தில் நிறைவேற்றப்படுமானால் அவையே பயிற்று மொழி தொடர்பான எதிர்கால கொள்கைத் தெரிவுகளாக அமையும். 1956க்குப் பின்னர் குறுகிய தேசிய வாதிகளின் பிற்போக்குத்தனமான மொழிக் கொள்கை காரணமாக தேசிய மட்டத்தில் ஆங்கிலத் தேர்ச்சி வீழ்ச்சி நிலையை அடைந்தது. அதன் காரணமாக இன்று ஆங்கில மொழியை கற்பதற்கான தேவையும் ஆர்வமும் அதிகரித்துள்ள நிலையில் அச்சவால்களை வெற்றிகரமாக முகங்கொடுக்க முடியாத நிலமை தோன்றியுள்ளது. கல்வி அமைச்சும் சம்மந்தப்பட்ட ஏனைய கல்வி அமைப்புகளும் எவ்வளவு முயன்றபோது பொதுப் பரீட்சைகளில் மாணவனின் தேர்ச்சி மட்டத்தை எதிர்பார்க்கும் அளவுக்கு மேம்படுத்த முடியவில்லை. இப்பின்னணியில் பயிற்றுமொழி தொடர்பாக தற்போது முன்வைக்கப்பட்டுள்ள கொள்கைத் தெரிவுகள் எந்தளவிற்கு வெற்றியளிக்கும் என்பதை அறிவதற்கு நாம் பொறுத்திருக்க வேண்டும்.

### உசாத்துணைகள்


- ❖ இலங்கையில் பொதுக்கல்விக்கான புதிய கல்விச் சட்டம் (2009). பொதுக் கல்விக்கான புதிய சட்டத்தை உருவாக்குவதற்கான தேசிய குழு, கல்வி அமைச்சு, இலங்கை.
- ❖ *Transforming School Education in SriLanka: From Cut Stones to Polished Jewels* (2011). The World Bank. Colombo Office.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# பிள்ளைகளின் ஆளுமை விருத்தியில் ஆசிரியர்களின் வகிபாகம்

**திரு. கந்தசாமி நிதிஹரன்**

B.A (Hons), M.A(Tamil), M.Ed, M.A(Pub.Adm),
PGDE(Merit), Dip in Human Rights & Peace(Merit)

*வருகை விரிவுரையாளர், இலங்கைத் திறந்த பல்கலைக்கழகம், மட்டக்களப்பு*

பிள்ளையின் பன்முகப்பாங்கான விருத்தியிலே கல்வியின் பங்கு மிக முக்கியமானது. பாடசாலைகளில், பிள்ளைகளினுடைய முறையான ஆற்றுகை வெளிப்பாடுகளுக்கு வினைத்திறனான பாடசாலைக் கட்டமைப்பு பொருத்தமாக அமைதல் அவசியம். பாடசாலைகளின் செயற்பாடுகள் இன்றைய சமகாலத் தேவைகளை நிவர்த்திக்கும் வகையில், மனித வள விருத்தியை முன்னெடுப்பவையாகக் காணப்பட வேண்டும். இலங்கையில் அவ்வப்போது பல மறுசீரமைப்புக்கள் மேற்கொள்ளப்பட்டபோதும், கல்வி ரீதியான அடைவு மட்டங்களும் தன்னிலை ஆளுமை கொண்ட பிரஜைத்துவத்தை உருவாக்கல் என்ற எண்ணக்கருவில் பின்தங்கிய நிலையையே இலங்கையின் அண்மைய ஆய்வு முடிவுகள் சுட்டி நிற்கின்றன.

இன்றைய சமகால சூழலில் நல் ஆளுமையும் சமூக ஒத்திசைவும் கொண்ட மனித வள விருத்தியை அடைவதே தேவையான ஒன்றாக உள்ளது. இந்த இடத்திலே தான் பிள்ளைகளின் ஆளுமை விருத்தி என்பது முக்கிய எண்ணக்கருவாக முகிழ்தெழுகின்றது. பாடசாலைகளில் சமூக மாற்றத்திற்கான கருவிகளாகக் கருதப்படுகின்ற ஆசிரியர் சமூகம், மாணவர்களின் ஆளுமை விருத்தியில் முக்கிய பங்காற்றுபவர்களாவர். இதனால் இன்று ஆசிரியர்களை அறிவு வேலையாட்கள்(knowledge Workers), சமூகப் பொறியியலாளர்கள்(Social Engineer) என்ற புதிய வகிபாக மாதிரிகளை ஆற்ற வேண்டியவர்களாக உள்ளனர். இவை மாத்திரமின்றி மேலும் பல வகிபாகங்களை நிறைவேற்ற வேண்டியவர்களாகவுள்ளனர். இத்தகைய வகிபாகச் செயற்பாடுகள் மூலமே பிள்ளையின் ஆளுமை புத்தாக்கமிகு தன்மைகளோடு வளர்ச்சியுருகின்றதெனலாம்

ஆளுமை என்ற எண்ணக்கரு தொடர்பில் திட்ட வட்டமான ஒரு வரையறை முன்வைப்பது சற்றுச் சிரமமானது. தனியாள் ஒருவரிடம் முழுமையான வளர்ச்சிக்குட்படும் பல்வேறு அம்சங்களினதும் ஒன்றிணைப்பின் விளைவாகவே ஆளுமை உருவாக்கம் இடம் பெறுகின்றது. கல்விச்




செயல்களின் இறுதியான நோக்கமாகவும் விளைவாகவும் கருதப்படுவது, மாணவர்களின் ஆளுமை என்பது, பரந்ததும் சிக்கலானதுமான ஓர் எண்ணக்கருவாகும். ஒருவரிடம் காணப்படும் வெளிப்புற தோற்ற இலட்சணங்களை வைத்து, இவர் ஆளுமை உடையவர் எனக் குறிப்பிடுவது அளுமை தொடர்பான ஒரு குறுகிய விளக்கமாகும். உளவியலின் படி, ஆளுமை தொடர்பில் குறிப்பிடுவது, சகலரிடமும் காணப்படுவதும் ஒருவரிடமிருந்து வேறுபடுத்த முடியாததும் குறிப்பிட்டவருக்கே விசேடமானதுமான நிலையான நடத்தை அமைப்புகளின் பரந்த அமைப்பை ஆளுமை எனக் குறிப்பிடலாம். உளவியாலாளர்கள் தம் கோட்பாட்டுத் தளத்திற்கு ஏற்ப பல்வேறு விளக்கங்களை முன்வைத்துள்ளனர். எனினும், எந்தவொரு விளக்கமும் பொருத்தமற்றது என்பதல்ல. ஆளுமை தொடர்பான பல்வேறு பாரிமாணங்களை வெளிப்படுத்துபவையாக அவை அமைந்துள்ளன. G. W. ஒல்போர்ட் (G.W. Allport) ஆளுமை என்பது "சூழல் இடைத்தாக்கங்களுடன் செயற்படும் போது, விசேட நடத்தையைத் தீர்மானிக்கும் ஒருவரிடம் உள்ளார்ந்த நிலையில் காணப்படும் உளவியல் அமைப்பின் உருவாக்கமாகும்" என்கின்றார். சாபர் (Saffer) என்ற அறிஞர் குறிப்பிடுகையில் ஆளுமை என்பது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"வெளிப்படுத்திய நடத்தைகளை உள்ளடக்கியவைகளாகும்" என்கின்றார்.

பொதுவாக, ஆளுமையைப் பின்வருமாறு வரையறுத்துக் கொள்ளலாம். ஒருவனது அனைத்து இயல்புகளினதும் மொத்த விளைவைக் குறிப்பிடுகின்து. அதாவது, ஒருவனுடைய உளச்சார்பு, அறிவு, மனப்பாங்கு, கவர்ச்சி, சூழலுடனான இடைவினை என்பவற்றையும் இப்பண்புக் கூறுகள் அவனது சிந்தனை, உணர்ச்சி, செயல் என்பவற்றில் ஏற்படுத்தும் விளைவுகளையும் குறித்து நிற்பது ஆளுமை எனலாம்.

பாடசாலைகளில் பிள்ளைகளை வினைத்திறனுள்ள வர்களாக்கி, அவர்களது விளைதிறனை அதிகரிக்கச் செய்யத் தக்க வகையில் அவர்களின் ஆளுமை விருத்தி செய்யப்பட பல நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. கல்விச் செயலொழுங்கின் மூலம் எதிர்பார்க்கப்படும் மாணவர்களின் சிறந்த அடைவு மட்டமானது, பயனுறுதிமிக்க வகுப்பறைக் கற்றல் கற்பித்தல் முறை மூலமே அது சாத்தியப்படும். பாடசாலைகளில் மாணவர்களின் பன்முக ஆளுமையை வளர்க்கும் நோக்கில் ஆசிரியர் பொறுப்புமிக்க பல பணிகளை ஆற்ற வேண்டியவராக உள்ளார். இதனால் தான் இன்றைய ஆசிரியர்கள் மீண்டுடெழும் புதிய தேவைகளுக்கு ஏற்ப தம்மைத் தயார் செய்து கொள்ளல் வேண்டும். மாணவர்களின் தனிப்பட்ட திறன்களையும் ஆற்றுகைகளையும் கருத்தில் கொண்டு அவர்களின் முன்னோக்கிய பயணத்திற்கு ஆசிரியர்கள் பல்வேறு வகி பங்குகளை ஆற்ற வேண்டியவர்களாக முன்னோக்கிய பயணத்திற்கு ஆசிரியர்கள் பல்வேறு வகி பங்குகளை ஆற்ற வேண்டியவர்களாக உள்ளனர். இவ்விதமான மிகச் சிக்கலான பணிகளை ஆற்ற முற்படும் போது ஆசிரியர்கள் பல அறை கூவல்களை எதிர்நோக்க வேண்டியுள்ளன.

இலங்கையின் புதிய கல்வி மறுசீரமைப்பின் கீழ் 5E கற்றல் புதிய மாதிரி அறிமுகம் செய்யப்பட்டுள்ளது. கற்றல் தொடர்பான கட்டுருவாக்க சிந்தனையினை அடிப்படையாகக் கொண்டு இது உருவாக்கப்பட்டுள்ளது. இக்கட்டுருவாக்க சிந்தனையினை அடிப்படையாகக் கொண்டு இது உருவாக்கப்பட்டுள்ளது. இக்கட்டுருவாக்க சிந்தனை தொடர்பில், பல ஆய்வுகளை மேற்கொண்டவர்களில் முக்கியமானவர்கள் ஜீன்பியாஜே, எலினர், டக்வேர்த், ஜோர்ஜ்கீன் மற்றும் ஹொவர்ட் கார்டனர் போன்றோர் குறிப்பிடத்தக்கவர்களாவர். தொடர்ந்து றொகர் கைபீ என்பவரின் தலைமையிலான உயிரியல் விஞ்ஞான கலைத்திட்ட கற்கைக் குழுவினரால் கட்டுருவாக்கத்திற்கான 5E எனும் கற்றல் மாதிரி உருவாக்கப்பட்டது. இதிலே ஒரு பிள்ளையிடத்திலே படிப்படியாக எவ்வாறு அறிகை விருத்தியை மேற்கொண்டு ஆளுமை உள்ள பிள்ளையாக மாற்றியமைப்பது தொடர்பில் விளக்கமளிக்கப்படுகின்றது.

புதிய கல்விச் சீர்திருத்தத்திலே தேர்ச்சி என்ற எண்ணக்கரு முக்கியமானது. இத்தேர்ச்சியானது பிள்ளையின் ஆளுமையோடு தொடர்புடைய அம்சமாகும். தேர்ச்சி என்பது அறிவு, திறன், மனப்பாங்கு, ஆளிடைத் தொடர்புகள் ஆகியவற்றின் திரட்சியால் உருவாகும் வாழ்க்கைப் பரிட்சயமாகும். உடல் உள சக்திகளாகச் செயற்படத் தக்க இவ்வாறான பழக்கங்களை உருவாக்குவதற்குத் தயாரிக்கப்பட்டுள்ள தேர்ச்சிகளை அடிப்படையாகக் கொண்ட கலைத்திட்டம் ஏற்படுத்தப்பட்டுள்ளது. இவை வகுப்பறையிலே 5E கற்பித்தல் முறையிலே மேற்கொள்ளப்பட ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. இன்று பாடசாலைகளில் பிள்ளைகளிடத்திலே ஏழு தேர்ச்சி அடையப்பட வேண்டியவையாக அடையாளப்படுத்தப்பட்டுள்ளன. அத்தேர்ச்சிகளை அடைவதன் ஊடாக பிள்ளையை சிறந்த ஆளுமை கொண்டவராக மாற்றியமைப்தே இதன் நோக்கமாகும். அத்தேர்ச்சிகள் பின்வருமாறு

- தொடர்பாடல் தொடர்பான தேர்ச்சிகள்
- சூழலோடு தொடர்புடைய தேர்ச்சிகள்
- சமயமும் ஒழுகலாறும்
- விளையாட்டும் ஓய்வும் தொடர்பான தேர்ச்சிகள்
- வேலையுலகிற்கு தொடர்புபடுத்தும் தேர்ச்சி
- ஆளுமை தொடர்பான தேர்ச்சி


இவ்வாறு பல்வேறு தேர்ச்சிகளை அடைவதன் மூலம் பிள்ளை முழுமையான ஆளுமை விருத்தியை இந்த 5E மாதிரி மூலம் அடையப்பட எதிர்பார்க்கப்படுகின்றது. இந்த நோக்கினை அடைவதற்கு ஆசிரியர் முக்கியமானவர். மனிதவள விருத்தியை முன்னெடுக்கும் நபர் என்ற வகையில், அவர்கள் ஆற்ற வேண்டியபன்முக வகிபாகம் மிகப் பொறுப்பு வாய்ந்தது. உணர்வுள்ள மனிதனோடு தொடர்புகொண்டு அவனை ஆக்கமிகு பிரஜையாக மாற்றியமைப்பது என்பது சற்றுச் சிரமமானதொரு காரியமாகும். அதற்கு ஆசிரியர் நல்ல உளவியல் தத்துவார்த்தப் பின்புலத்தை தகவினை கொண்டிருத்தல் வேண்டும்.

5E மாதிரி கற்பித்தல் முறை மூலம் மாணவர்களின் உள்ளார்ந்த ஆளுமையை அபிவிருத்தி செய்வதன் மூலம் திறன்தகவு கொண்ட சமூக உருவாக்கம் என்பது அதன் நோக்கமாக உள்ளது. இதில் செயற்பாடுகளுக்கு முன்னுரிமை கொடுத்து, மாணவர்களின் ஆற்றல்களை வெளிக் கொணரும் வகையில் இக்கற்பித்தல் முறை அமைந்துள்ளது. இது கட்டுருவாக்க கற்றல் கற்பித்தல்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அணுகு முறையினூடாக பெறப்பட்டதாகும். இதன்படி, அறிவையும் அர்த்தத்தையும் தாமாகவே உருவாக்கிக் கொள்வதற்கு கற்போருக்கு வாய்ப்பளிப்பதாக அமைந்துள்ளது. பேச்சு மூலம் அல்லது வினா விடை அடிப்படையில் அறிவை ஒப்படைப்பதற்குப் பதிலாக தேடியாய்வில் ஈடுபட்டு அனுபவங்களின் ஊடாக அறிவையும் விளக்கத்தையும் தனிப்பட்ட ரீதியில் உருவாக்கிக் கொள்வதற்கு மாணவர்களுக்கு வாய்ப்பினை வழங்குவதாக இந்த 5E கற்பித்தல் மாதிரி அமைந்துள்ளது. இதன்படி, அறிவை மாத்திரம் பெற்றுக் கொள்ளல் என்பதற்கு அப்பால், அறிவு, திறன், மனப்பாங்கு, பிரயோகம் (KASP) ஆகிய பண்புக் கூறுகள் நிறையப் பெற்ற ஒரு முழுமையான ஆளுமை கொண்டவராகத் தனிநபரை மாற்றியமைப்பதாக இந்த கற்பித்தல் மாதிரி எதிர்பார்க்கின்றது.



இத்தகைய கருமத்தை வெற்றிகரமாக நிறைவேற்றுவதற்கு ஆசிரியரின் பங்கும் பணியும் மிக முக்கியமானதாகும். ஆசிரியர் விரி சிந்தனையும் நல்லாற்றலும் சிறந்த அனுவமும் கொண்டிருக்கும் பட்சத்திலே தான், மாணவர்கள் இக்கற்பித்தல் முறையின் கீழான நன்மைகளை அடைய முடியும். இதற்காக ஆசிரியர் பல்வேறு வகிபாகங்களை நிறைவேற்ற வேண்டியவராக உள்ளார். அத்துடன் நல்ல வாண்மைத் தகமைகளைக் கொண்டவராகவும் இருத்தல் வேண்டும். இக்கருமத்தை நிறைவேற்றுவதில் பாடசாலையின் வளங்கள், பாடசாலை முகாமைத்துவம், மாணவர்களின் ஈடுபாடுகள் என்பவையும் மிக முக்கியமானவையாகக் காணப்படுகின்றன. அடிப்படை வசதிகள் காணப்படாத போது 5E மாதிரிக் கற்பித்தல் நடைமுறைச் சாத்தியமற்றதாகவே அமையும். இதன் மூலமான தொடர் செயற்பாட்டுக்கு வகுப்பறைக் கட்டமைப்பு உட்பட, வளங்களின் தேவையும் போதியதாக இருத்தல் வேண்டும். இது ஆசிரியர்களுக்கு ஒரு அறைகூவலாக அமைந்து விடும்.

கல்விச் செயலொழுங்குகளின் மூலம் எதிர்பார்க்கப் படுவது, மாணவர்களின் ஆளுமை விருத்தியை ஏற்படுத்துவதேயாகும். இதன் வெற்றி ஆசிரியர்களின் கற்றல் கற்பித்தலிலே தங்கியுள்ளது. உலகம் மிக வேகமாக மாற்றமடைந்து கொண்டு வருகின்றது. புதிய சூழல்கள் தோற்றம் பெறுகின்றன. இதற்கேற்ப ஆசிரியர்களின் வகிபாகங்களும் மாற்றமடைந்து கொண்டு வருகின்றன. கோளமயமாக்கல் நிலைமைகள், தொழில்நுட்ப முன்னேற்றங்கள் என்பவற்றுக்கமைய ஆசிரியர்களிடத்தில் புதிய அறிகை விருத்தியும் தொழில்நுட்பக் கருவிகளைக் கையாள்வதில் பயிற்சியும் எண்ணக்கருக்களின் தெளிவான பார்வையும் என தன்னில் மாற்ற நிலைகளைப் புகுத்த வேண்டியவர்களாக ஆசிரியர்கள் உள்ளனர். சுயநெறிப்பாடு, தற்புலக்காட்சியை மேம்படுத்தல், சுயபடிமத்தை உயர்த்துதல், வாண்மை நிலை நெகிழ்ச்சியை ஏற்படுத்தல், சர்வதேச மட்ட இடமாற்றத்திற்கும் நிலை மாற்றத்திற்கும் ஏற்றவாறு வாண்மைத் திறன்களை வளர்த்தல் முதலியவற்றை நோக்கிய ஒன்றிணைந்த நடவடிக்கை களை முன்னெடுத்தல் முதலி யவை சமகாலக் கல்வித் தேவைக் குரியவையாக விளங்குகின்றன. இத்தகைய அம்சங்களை உள்வாங்கிய நல்லாசிரியருக்குரிய வகிபாகமே மாணவர்களின் ஆளுமை விருத்தியை முன்னெடுப்பதில் உதவும்.

இந்நிலையில் ஆசிரியர்களின் வகிபாகங்கள் எவ்வாறு மாற்றமடைந்து வந்துள்ளன என்பதைப் பார்க்கலாம். அதனை ஆங்கிலத்தில் 3T மாதிரி எனக் குறிப்பிடுவர். அவை வருமாறு

1. கடத்தல் வகிபாகம்
   (Transmission)
2. கொடுக்கல் வாங்கல் வகிபாகம்
   (Transaction)
3. நிலைமாற்று வகிபாகம்
   (Transformation)

கடத்தல் வகிபாகத்தில் ஆசிரியர் தன்னிடமுள்ள அறிவுத் தொகுதியை மாணவர்களுக்கு கடத்தும் செயற்பாட்டையே செய்கின்றார். இங்கு, ஆசிரியர்- எல்லாம் தெரிந்தவராகவும் மாணவர்கள் ஒன்றும் தெரியாதவர்கள் என்ற அடிப்படையில் செயற்படுவர். இது ஆசிரியர் மைய வகிபாகமாகக் காணப்படும். மாணவர்கள் பற்றி எந்தக் கவனமும் செலுத்துவதில்லை. மாணவர்கள் இயங்குவதற்கான சந்தர்ப்பம் குறைவாகவே இருக்கும். இதில் மாணவரின் ஆளுமை தொடர்பில் எந்தக் கவனமும் செலுத்துவதில்லை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொடுக்கல் வாங்கல் வகிபாகத்தில் மாணவர்களின் பங்குபற்றல் ஓரளவு இருப்பினும், அது முழுமைப்படுத்தப்பட்டதாக இல்லை. கடத்தல் வகிபாகத்தையும் விட சிறப்பானது. இங்கு இருவழித் தொடர்பாடல் இருப்பினும் மாணவர்களின் தனிப்பட்ட ஆளுமை விருத்தி தொடர்பில் கவனம் செலுத்துவது குறைவு.

இன்று ஆசிரியர்களின் வகிபாகம் மாணவர்களின் தனிப்பட்ட ஆளுமை விருத்தி தொடர்பில் மாற்றமுற்று வந்திருக்கின்றன. அந்த வகையில் நிலைமாற்று வகிபாகம் என்பது முதன்மைப்படுத்தப்படுகின்றது. இதில் ஆசிரியர் ஓர் வளவாளராகவே (Resource Person) செயற்படுவார். மாற்றத்திற்கான ஒரு முகவராகவும் செயற்படுவார். ஆசிரியர் ஒரு வளவாளர் என்ற அடிப்படையில் மாணவனுக்குத் தேவைப்படும் இடத்தில் மாத்திரமே தலையிடுவார். ஒன்றன்பின் ஒன்றாக வினாக்களை வினவியவாறு தொடர்ந்தும் உதவி புரிகின்ற வசதி செய்பவர் (Facilitator) வகிபாகத்தை விட, வேறுபட்ட வளவாளர் வகிபாகத்தை வெற்றிகரமாக ஆற்றுவதற்கு ஆசிரியர் ஆயத்தமாதல் வேண்டும். இந்நிலைமாற்று வகிபாகத்தில் பின்வரும் அம்சங்கள் முக்கியமானவையாகக் காணப்படும்.

1. மாணவர் மையமானது
2. தேர்ச்சிமைய அணுகுமுறை
3. செயற்பாட்டு அடிப்படையிலான கற்றல்

இங்கு அமைப்பியல் வாத அணுகுமுறை கையாளப்படும். இங்கு கற்பித்தலை விட மாணவரது கற்றலே முக்கியமானது. ஆசிரியரது பணி கற்றலை மையமாகக் கொண்டதாக இருக்கும். இதற்காக ஆசிரியர் பிள்ளைகள் தாமாக கற்பதற்கும், கற்றலுக்குக் கற்பதற்கும் (Learning to Learn) ஏற்ற சூழலை ஏற்படுத்துவார். ஒவ்வொரு செயற்பாட்டிலும் ஈடுபட்டிருக்கையில் அம்மாணவர்களிடையே சஞ்சரித்து அருகில் சென்று அவதானித்து சமயோசிதமாக தலையிட்டு, முன்முகவூட்டலும் பின்னூட்டல் வழங்குவதும் ஆசிரியரின் பொறுப்பாகும். எப்போதும் மாணவரின் பின்னே இருந்து அவர்களை ஒட்டிக்கொண்டிருப்பதை விட மாணவர்களுக்கு ஓரளவு சுயாதீனம் வழங்கி, அவர்களின் உத்தேசக் குறிக்கோளை அடைவதை உறுதிப்படுத்தி மாணவர்களின் ஆளுமை விருத்திக்குப் பங்காற்ற வேண்டியுள்ளது. ஆனால் நடைமுறையில் ஆசிரியர் தன்னை இத்தகைய தன்மைக்குப் பொருத்தமானவராக ஆக்கிக் கொள்வதென்பது ஒரு அறைகூவலாகவே உள்ளது. இதற்கான பயிற்சி எவ்வளவு தூரம் ஆசிரியர்களுக்கு வழங்கப்பட்டுள்ளது என்பது இன்றைய நிலையில் முக்கிய கேள்வியே. இதற்குப் போதிய பயிற்சிகளும் போதிய அனுபவமும் இருக்கும் போதே சாத்தியமானதாக இருக்கும். மரபு வழியான ஆசிரியர்கள் இதற்குப் பொருத்தமானவர்களாக மாறும் போதே இதில் வெற்றி பெறலாம்.

ஆக்கபூர்வமான கற்றல் சூழலுக்கு இன்றியமையாத பல பண்புகள் உள்ளன. மாணவரது கவனத்தை ஈர்த்துக் கொள்வதற்கும் தேடியாய்வுக்கும் கண்டறிகைக்கும் மாணவரை வழிப்படுத்தத்தக்க அறைகூவல்கள், கற்றல் சாதனங்கள், கட்டமைப்புக்கள் என்பன இவற்றுள் முக்கியமானவை. இவ்வாறான சூழலானது, ஒத்துழைத்துக் கற்றலுக்கும் தாம் கண்டறிந்த விடயங்களை ஏனையோருக்கு விளக்குவதற்கும் தனதும் ஏனையோரதும் கருத்துக்களை விரிவுபடுத்துவதற்கும் மாணவர்களுக்கு வாய்ப்பளிப்பதாக 5E கற்பித்தல் முறை அமைந்துள்ளது. குறித்த சூழ்நிலையில் அடைந்த குறிக்கோள்கள், சகபாடிகள் தனித்தனியாகவும் குழுநிலையிலும் அடைந்தவற்றை மதிப்பிடும் வாய்ப்பும் மாணவர்களுக்குக் கிடைக்கும். மாணவனது நிலையில் இருந்து அவன் அவனாகவே அவனது விருப்பிற்கு அமைய கற்க வாய்ப்பளிப்பதனூடாக தனியாளின் ஆளுமை விருத்தியும் அதன் மூலமாக சிறந்த எதிர்காலத்தையும் பிள்ளைக்கு வழங்கலாம். இத்தகையதொரு செயற்பாட்டை முன்னெடுப்பதில் ஆசிரியரின் வகிபாகம் மிகச் சிக்கலானதும் அர்ப்பணிப்புடனானதும் ஆகும்.

தேர்ச்சியை அடிப்படையாகக் கொண்டு தேர்ச்சியை அடைவதற்காகவே ஆசிரியர் கற்றல் கற்பித்தல் செயற்பாட்டை திட்டமிடுகின்றார். தெரிவு செய்த தேர்ச்சி மட்டத்திற்குரிய விடய உள்ளடக்கமானது அதன் வரையறைகளை உள்ளடக்கியதாக தீர்மானிக்கப்படும். இதுவே பாட உள்ளடக்கத்தின் பால் மாணவரை இட்டுச் செல்லும். அதற்காக செலவாகும் நேரம் தேவையான தரவிருத்தி உள்ளீடுகள், அடையவேண்டிய தேர்ச்சிகளை மாணவர்கள் அடைந்துள்ளனரா? எனக் காட்டும் நியதிகள் என்பனவும் இங்கு தீர்மானிக்கப்பட வேண்டும். எனவே தான் ஆசிரியர்கள் முறையான திட்டமிடல் மூலமாகவே உரிய எதிர்பார்ப்பை அடைய முடியும். இதற்காக ஆசிரியர் திட்டமிடலாளர் என்ற வகிபாகத்தை செப்பமுற செய்தல் வேண்டும். நல்லதொரு திட்டமிடலாளராலே தான், நல்லதொரு சமூகத்தை உருவாக்க முடியும்.

ஆகவே பிள்ளைகளின் ஆளுமை விருத்தி என்பது, பன்முக நோக்குக் கொண்டது. இவை அனைத்தையும் நன்கு புரிந்து கொண்டவராகவும், தேர்ச்சி உள்ளவராகவும் ஆசிரியர் இருப்பதுடன், வகுப்பறையின் கற்றல் கற்பித்தல் சூழலில் பொருத்தமான பல்வேறு வகிபாகங்களை ஏற்று மாணவர்களது ஆளுமை விருத்தியை உறுதி செய்பவர்களாக மாறும் பொழுதே அதன் மூலம் வெற்றியடைந்த ஆசிரியத்துவம் வெளிக்கொணரப்படும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# கல்வித்தர அபிவிருத்தியில் பண்புசார் விருத்தி மதிப்பீட்டுமுறை

**M.M. ஹிர்பஹான்** (SLPS)
B.A., P.G.D.E. (Merit), D.C.Sc. (Merit), M.Ed.

ஒரு நாட்டின் அபிவிருத்தியில் கல்வி மிக முக்கிய இடத்தை வகிக்கின்றது. நாட்டினது செயற் திட்டங்களை தூர நோக்குடன் திட்டமிடும் வேளையில் நாட்டினது தேவைக்கேற்ப கல்வியையும் திட்டமிடவேண்டியுள்ளது. அத்துடன் அத்துறையை மதிப்பீடு செய்வதன் மூலமே எதிர்பார்த்த இலக்கை அடைய இயலும் என்பதை இன்று பல நாடுகள் உணர்ந்துள்ளன.

இந்த நோக்கில் பாடசாலை என்ற கட்டமைப்புக்குள் ஒரு தொடர் மதிப்பீட்டுச் செயற்பாடு மிக அவசியம் என்று உனரப்பட்டுள்ளது. உள்ளீடுகள் எவ்வளவுதான் கல்விக்காக கொட்டப்பட்டாலும் அதற்குரிய வெளியீட்டினைப் பெற மதிப்பீட்டுச் செயற் திட்டம் அவசியமாகும். காரணம் ஒரு நிறுவனத்தின் இலக்கை நோக்கி அங்கு கடமையாற்றும் பணியாளர்களை நகர்த்திச் சென்று இலக்கை அடைவதற்கான செயற்பாட்டை உள்ளக மதிப்பீடு செய்கின்றது.

காலத்துக்குக் காலம் இது தொடர்பான செயற்பாடுகள் நடைமுறைப்படுத்தப்பட்டு வந்துள்ளன. எனினும் அவை காலத்திற்கு ஏற்ப மாற்றமடைந்தே வந்துள்ளன. பரீட்சித்தல் (Inspection) மிக ஆரம்பத்தில் வட்டாரக் கல்வி அதிகாரிகள் (Circuit Education Inspection) இருந்த காலத்தில் இம்முறை நடைபெற்றது. அவர் வருடத்துக்கொருமுறை வருடாந்த அறிக்கைப்படிவத்தை (Annual Return Form) இதற்காகப் பாவிக்கப்பட்டது. இம்முறை மிகவும் அதிகாரம் மிக்கவையாகக் காணப்பட்டமையால் காலப்போக்கில் இம்முறை மாற்றமடைந்தது. இதற்குப்பதிலாக மேற்பார்வை (Supervision) முறை அமுலுக்கு வந்தது.

அதாவது அரிதான வளம், நேரம் என்பவற்றைக்கொண்டு நிறுவனம் எதிர்பார்க்கும் நோக்கத்தை வினைத்திறனுடனும், விளைதிறனுடனும் அடைவதற்கான செயற்பாடே மேற்பார்வை எனப்படுகின்றது.

**பாடசாலை மேற்பார்வையின் குறிக்கோள் அல்லது பயன்கள்**

1. ஆசிரியர்களின் வேலைப் பழுவைக் குறைத்தல்
2. பின்னூட்டல் வழங்கல்.
3. தலைமைத்துவத்தைப் பேணுதலும், கற்பித்தலும்.
4. உள்ளக மூலவளங்களின் உச்சப்பயனைப் பெறுதல்.
5. மதிப்பீட்டைப் பயனுள்ளதாக்குதல்
6. தாபனரீதியான திட்டங்களை கண்காணித்தல்.
7. ஆசிரியர்களுக்கும், அதிபர்களுக்கும் தொழில் வளர்ச்சிக்கு உதவுதல்.
8. கற்றல் கற்பித்தல் முயற்சிகளை முன்னேற்றுதல்.
9. பாடசாலையில் நல்ல சூழலைப் பேணுதல்.
10. ஆசிரியர் தமது உள்ளார்ந்த திறமைகளை வெளிக் கொணர்தலும், வளர்த்தலும்.


மேற்பார்வையாளர்கள் பின்வரும் பண்புகளைக் கொண்டிருக்க வேண்டும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

- ஓர் மூலவளவாளர்
- இனிய நண்பர்.
- சிறந்த செவிமடுப்பாளர்
- நடுநிலைமையாளர்
- பங்கேற்பவர்
- பின்னூட்டலை வழங்குபவர்
- புத்தாக்கத்தின் மீது உடன்பாடானவர்
- அதிகார பலத்தை பிரயோகிக்காதவர்
- சமுதாய விழுமியங்களை மதிப்பவர்.
- தொழில் காட்டுப்பாட்டை மதிப்பவர்.
- நல்ல ஆலோசகர்.
- அன்பான விமர்சகர்.
- சிறந்த அவதானி.
- ஏனையோரை மதிப்பவர்.
- இரகசியம் பேணுபவர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மற்றுமொரு முறையாக ஆசிரியர்களின் செயற் திட்டங்களை மேற்பார்வை செய்யவும், ஒழுங்குபடுத்தவும் செயற்திறன் கணிப்பீடு (Perfomance Appraisal) நடைமுறைக்கு வந்தது. இதில் ஆசிரியரின் கற்றல்-கற்பித்தல் செயற்பாடுகள், தானாக முன்வந்து செய்யும் செயற்பாடுகள் என்பன மதிப்பீடு செய்யப்படுகிறது.




1. கற்றல் - கற்பித்தற் செயற்பாடுகள்.
   - I. வகுப்பறை மதிப்பீடு.
   - II. மாணவர் அடைவு மட்டம்.
     - அ. பாடவிதானச் செயற்பாடுகள்
     - ஆ. இணைப் பாடவிதானச் செயற்பாடுகள்.

1. கற்றல் - கற்பித்தற் செயற்பாடு.

**வகுப்பறை மதிப்பீடு.**

வகுப்பறை மதிப்பீட்டில் பரிசீலிக்க வேண்டிய ஆவணங்கள்.

- வகுப்பறை மதிப்பீட்டுப் படிவம்.
- மாணவர் தினவரவு இடாப்பு.
- பாடப் பதிவுப் புத்தகம்.
- பாட வேலைத்திட்டம்.
- பாடக் குறிப்புகள்
- பாட அலகு முன்னேற்ற அட்டவணை.
- பாடசாலை மட்டக் கணிப்பீடு.
- தொடர் கணிப்பீடு. (தரம் 01–05)
- அத்தியவசியக் கற்றல் தேர்ச்சிகள். (தரம் 01–05)
- மாணவர் பயிற்சிக் கொப்பிகள்.
- செயலட்டைகள்.
- நிறைவேறிய பணிகள் பதிவுப் புத்தகம்.

மாணவர் அடைவு மட்டம்

**அ. பாடவிதானச் செயற்பாடுகள்.**

பரிசீலிக்கப் படவேண்டிய விடயங்கள்

- பாடசாலை மட்டக் கணிப்பீடு.
- தொடர் கணிப்பீடு. (தரம் 01–05 )
- அத்தியவசியக் கற்றல் தேர்ச்சிகள் (தரம் 01–05)
- பெறுபேற்றாய்வு.
- தவணைப் பரீட்சைப் பெறுபேற்றாய்வு.
- பொதுப் பரீட்சைப் பெறுபேற்றாய்வு.

**ஆ. இணைப் பாடவிதானச் செயற்பாடுகள்.**

- தமிழ் மொழி தினம்
- ஆங்கில மொழி தினம்
- சிங்கள மொழி தினம்
- மீலாத் விழா
- கணித விநாடி வினாப் போட்டி
- கணித நாடகப் போட்டி
- விஞ்ஞான விநாடி வினாப் போட்டி
- சமூக விஞ்ஞானப் போட்டி
- இரசாயன விநாடி வினாப் போட்டி
- தகவல் தொழிநுட்ப விநாடி வினாப் போட்டி
- சித்திரப் போட்டி
- கட்டுரைப் போட்டி
- சிறுவர் அழகியல் தினப் போட்டி
- 100 சதுர கணித்தற் போட்டி போன்றவற்றை குறிப்பிடலாம்.

2. சுயமாகப் பொறுப்பேற்ற வேலைகள்.
   - வெளிவாரி மதிப்பீட்டிற்கான பணிகள்.
   - இணைப் பாடவிதானச் செயற்பாடுகள்.
   - வருடாந்த அமுலாக்கல் திட்டப் பணிகள்.
   - நிர்வாகப் பணிகள்.
   - பிற பணிகள்.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மேற்கூறப்பட்ட விடயங்கள் மதிப்பீடு செய்யப்பட்டு ஒரு ஆசிரியரினுடைய செயலாற்றுகைத் தரம் கணிப்பிடப்படும். அவர் பெற்றுக்கொள்ளும் புள்ளிகளுக்கேற்ப அவருடைய தரம் பின்வருமாறு நிர்ணயிக்கப்படும்.

ஆசிரியர் செலாற்றுகைத் தரச்சுட்டி (Teacher Performance Indicator)

- எதிர்பார்த்த மட்டத்தை விட அதிகம். (76–100)
- எதிர்பார்த்த மட்டத்தை அடைந்துள்ளது. (51–75)
- விருத்தி செய்ய வேண்டிய மட்டத்திலுள்ளது. (26–50)
- மிக விருத்தி செய்ய வேண்டிய மட்டத்திலுள்ளது. (00–25)



இன்று பல கல்விச் சிந்தனையாளர்களின் தாக்கத்தினால் அதிகாரம் செய்தல் தவிர்க்கப்பட்டு உதவி செய்தல் அல்லது உதவி மேற்பார்வை நிலைக்கு மாறியுள்ளது. இந்தப் பின்னனியில் பண்புசார் விருத்தி என்ற எண்ணக்கரு வலுப்பெற்று இன்று இம்முறை பின்பற்றப்படுகின்றது. இதில் மதிப்பீட்டாளர் ஆலோசகர் (Guide) வசதி செய்பவர் (Facilitator) உதவியாளர் (Mentor) என்ற நடிபங்கையே மேற்பார்வைக் குழு எடுக்கவேண்டி உள்ளமை குறிப்பிடத்தக்கது.

கல்வி தரத்தை உறுதிப்படுத்தலில் (Quality Assurance) மிக முக்கிய நோக்காகப் பண்பு சார் அபிவிருத்தி கொள்ளப்படுகின்றது. இந் நிகழ்ச்சித் திட்டம் கல்வி அமைச்சு மட்டத்தில் அறிமுகப்படுத்தப்பட்டு, மாகாண மட்டம், வலயமட்டம், கோட்டமட்டம், பாடசாலை மட்டம் என மதிப்பீட்டுத் திட்டம் தயாரிக்கப்பட்டு நடைமுறைப்படுத்தப்படுகின்றது.

பாடசாலையின் அனைத்து பௌதீக, மனித வளங்களும் செயற்பாடுகளும் கல்வியின் நோக்கத்தினை நிறைவேற்றும் வண்ணம் சேவை பெறுனருக்கு தரமான சேவையினை வழங்கும் பொருட்டு பயன்படுத்தப்படல் வேண்டும். அவ்வாறு பயன்படுத்தப் படுகின்றதா என்பதை தேடிப்பார்ப்பதே இம்மதிப்பீட்டின் நோக்கமாகும். பாடசாலையின் பண்புத் தரங்களை தீர்மானிப்பதற்காக இப்பண்புத் தரங்களின் சுட்டிகளைப் பயன்படுத்துவதுடன், இச்சுட்டிகளை மதிப்பீட்டுக் கருவியாக மட்டுமன்றி பாடசாலைகளில் இருக்கவேண்டிய தரங்களை அறியவும் பயன்படுத்தப்படுகின்றது. இங்கு குறிப்பிடப்பட்டுள்ள நியதிகள் சுட்டிகள் மற்றும் பண்புத்தரங்களுக்கேற்ப நடவடிக்கை மேற்கொள்வதன் மூலம் பாடசாலையின் சுய அபிவிருத்திச் செயற்பாடுகளை தொடர்ச்சியாக நடைமுறைப்படுத்தலாம். அவ்வாறே பாடசாலையின் உள்ளக நடவடிக்கைகளையும் மதிப்பீடு செய்யலாம். அதுமாத்திரமல்லாமல் வெளிவாரி மதிப்பீட்டுக்கு தங்களை தயார்படுத்திக் கொள்வதற்கான ஒரு செயற்பாடக உள்வாரி மதிப்பீடு அமைவதால் பாடசாலையின் பண்புத்தரம் பேணப்படுவதற்கு துணைநிற்கின்றது.

பண்புத் தரச் சுட்டிகளின் அடிப்படையில் புள்ளிகளை கணிப்பிடுதல் இச் செயற் திட்டத்தின் சிறப்பம்சமாகும். பன்முகரீதியாக பரவலாக எல்லா விடயங்களையும் உள்வாங்கி மதிப்பீடு செய்யும் இம்முறை பாடசாலையை முழுமையாகப் பார்க்க முயலுகின்றது. ஆரம்பத்தில் ஏழு பண்புத்தரங்களை அடிப்படையாகக் கொண்டு மதிப்பீடு மேற்கொள்ளப்பட்டாலும் தற்பொழுது அறிவை அடிப்படையாகக் கொண்ட சமுதாயத்திற்கு மாணவர் அபிவிருத்தி என்ற பண்பு தரம் சேர்க்கப்பட்டு உள்வாரி, வெளிவாரி மதிப்பீடு மேற்கொள்ளப்படுகின்றது.

பாடசாலையானது நோக்கம் ,வளங்கள், செயற்பாடுகள் எனப் பல்வேறு அம்சங்களைக் கொண்டதொரு கூட்டு நிறுவனமாகும். இந்த அம்சங்கள் அனைத்தும் ஒன்றுடன் ஒன்று பின்னிப் பிணைந்து காணப்படுகின்றன. இருப்பினும் மதிப்பீட்டை இலகு படுத்தும்வகையில் பின்வருமாறு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வகைப்படுத்தப்பட்டுள்ளது.

| தொ. இல | தரங்கள் | தரங்களின் எண்ணிக்கை | சுட்டிகளின் எண்ணிக்கை | உச்சப் புள்ளிகள |
|---|---|---|---|---|
| 01 | பொது முகாமைத்துவம் | 01 | 22 | 110 |
| 02 | பௌதீக, மனித வள முகாமைத்துவம | 01 | 30 | 150 |
| 03 | முறையான கலைத்திட்ட முகாமை | 02 | 29 | 145 |
| 04 | இணைப்பாடவிதான முகாமைத்துவம் | 01 | 14 | 70 |
| 05 | மாணவர் அடைவ மட்டம் | 02 | 42 | 210 |
| 06 | மாணவர் நலன்புரிச் சேவை | 01 | 26 | 130 |
| 07 | பாடசாலையும் சமூகமும் | 01 | 17 | 85 |
| 08 | அறிவை அடிப்படையாக கொண்ட சமூகத்திற்காக மாணவர் அபிவிருத்தி | 03 | 40 | 200 |
| கூட்டுத் தொகை | | 12 | 220 | 1100 |

| உள்ளக மதிப்பீடு | புள்ளிகள் | வெளிவாரி மதிப்பீடு | புள்ளிகள் |
|---|---|---|---|
| பரந்தளவிலான அமுலாக்கம் - W | 05 | அதி உயர் தரம் - E | 05 |
| பகுதியளவிலான அமுலாக்கம் - P | 1 – 4 | தரத்தினை அண்மித்துள்ளது - M | 3 – 4 |
| நடைமுறைப் படுத்தப்படவில்லை - N | புள்ளிகள் இல்லை | துரத்தினை அண்மிக்கவில்லை - D | 1 - 2 |

W – Widely Implemented
E – Excellent
P – Partly Implemented
M – Meets the Standard
N – No Marks
D – Does not meet the Standard

**பண்புத்தர மதிப்பீட்டின் அனுகூலங்கள்.**

- பாடசாலையின் சகல உள்ளக மதிப்பீட்டு செயல்முறைகளையும் தேசிய தரக் கோட்பாட்டுக் கமைய சுயமாக ஆற்றிக்கொள்வதுடன் அம்மதிப்பீட்டினை அடிப்படையாகக்கொண்ட தகவல் முறைமை ஒன்றினை கட்டி எழுப்புதல்.
- உரிய பண்புத்தர அடிப்படையில் செயற்படும்போது அதிபர், ஆசிரியர் உள்ளிட்ட



சகல ஆளணியினரும் தொழில் தேர்ச்சி விருத்தியடைவர்

- வினைத்திறன் மிக்க முகமைத்துவமும் சேவையும் விருத்தியுறுவதால் வேலை செய்யும் ஆற்றல் அதிகரிக்கும்.
- பௌதீக வளங்களின் உச்சப் பயனைப் பெறல்
- கல்வித் துறையின் சகல பிரிவுகளும் உரிய பண்புத் தரத்துடன் செயலாற்றுவதன் மூலம் கல்வித் துறையில் கூட்டு முயற்சியும் அர்ப்பணிப்பும் அதிகரிக்கும்.
- சகல பாடசாலைகளும் சிறப்புற ஒழுங்குபடுத்தப்பட்ட சீரான முறைகளைக் கடைப்பிடிப்பதனால் பாடசாலை முறைமையில் பண்புத்தரம் உறுதி செய்யப்படும்.

கல்வித்தர உறுதிப்பாட்டின் அடுத்த முக்கிய விடயம் மேற்படி பரிசீலிக்கப்பட்ட விடயங்களை அறிக்கை தயாரித்து பாடசாலைகளுக்கு சமர்பித்தல் இதன் மற்றுமொரு அம்சம் ஆலோசனை வழங்குதல் , பின்னூட்டல், வழிகாட்டல் போன்றன செய்யப்பட வேண்டும். இதற்கு கோட்டமட்ட , வலயமட்ட , மாகாணமட்ட அதிகாரிகளின் இறுக்கமான மேற்பார்வையும் அர்பணிப்புமிக்க செயற்பாடும் இன்றியமையாததாகும். எவ்வாறெனினும் இத்தர உறுதிச் செயற்பாட்டை ஒரு நல்ல அதிபர் முறையாகப் பயன்படுத்திக் கொள்ள வாய்ப்பு உள்ளது. பண்புசார் விருத்தி மேம்படுத்த பல பன்முகப்பார்வையை இதன் மூலம் ஆசிரியர்களிடையே விரிவாக்க இயலும். இதன் மூலம் தரமான சமூகத்திற்கு தரமான கல்வியை வழங்கமுடியும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# பொருதாரமும் கல்வியும்

## கல்வியில் அரசாங்க முதலீடு

**சிங்கள மூலம்: சுதந்திரமான கல்விக்கான நடுநிலையான அமைப்பு**

**தமிழில்: A.A. அசீஸ்** (R.N)

கல்விக்காக ஒதுக்கப்படும் அரச முதலீடுகள் பற்றி தற்போது சமூகத்தினுள் பரவலாக பேசப்படுகின்றமை ஒரு வகையில் நாடு எனும் அடிப்படையில் மகிழ்வுற வேண்டிய விடயமாகும். விஷேடமாக தற்போது பணிப்பகிஷ்கரிப்பில் ஈடுபட்டுள்ள நம் நாட்டுப் பல்கலைக்கழக விரிவுரையாளர்களின் ஒரு வலுவான கோரிக்கையாக அமைவது கல்விக்காக ஒதுக்கப்படும் நிதி மொத்தத் தேசிய உற்பத்தியின் (GDP) அடிப்படையில் போதியதாக இல்லாமையினால் உடனடியாக அதனை அதிகரிக்க வேண்டும் என்பதாகும்.

வரலாற்றில் பெரும்பாலான தொழிற்பிரச்சினைகள் தமது தொழில்சார் உரிமைகளுக்கும் வரப்பிரச்சாதங்களுக்குமமை மந்ததையே இதுவரை கண்ணுற்றோம். எனினும் சர்வதேச ரீதியாக நோக்கும்போது அது மாற்றமடைந்த வண்ணமுள்ளது. தொழிலாளர்கள் போராட வேண்டியது, வேலை நிறுத்தம் செய்ய வேண்டியது தமது தொழில் உரிமைகளுக்காகவும், வரப்பிரசாதங்களுக்காகவும் மட்டுமல்ல. அதற்கப்பால் சென்று போராட வேண்டும் என்பதையும் சுட்டி நிற்கிறது. அவ்வாறான நேர்நிலை (Positive) படிமுறைகள் இரண்டை மாத்திரம் இங்கு சுருக்கமாக நோக்குவோம்.

க.பொ.த. உயர்தர மாணவர்களின் z- score தொடர்பாக ஆசிரிய தொழிற் சங்கங்களின் ஈடுபாடு, போராட்டம் என்பன ஆச்சரியமாய்ப் (அதிசயமாய்) புகழ வேண்டியது. அவர்களின் தலையீடுகள், போராட்டங்கள் எதிர்கால சந்ததியினரை இலக்காகக் கொண்டவை. இது நேர்நிலையானதும் ஏனைய தொழிற்சங்க நடவடிக்கைகளுக்கு சிறந்த பாடம் புகட்டலுமாகும். தற்போது ஆரம்பித்துள்ள பல்கலைக்கழக விரிவுரையாளர்களின் பகிஷ்கரிப்பிலும் அடைவுச் சின்னமாக நாம் காண்பது அவர்கள் தொழில் உரிமைகளை வென்றெடுப்பதுடன் மேலும் அதற்கப்பாற் சென்று தேசிய விருத்திக்கு அவசியமான வேண்டுகோள்களையும் தனது போராட்டத்துடன் இணைத்துக் கொள்ளல் வேண்டும். விஷேடமாக முழுக் கல்விக்கும் செலவிடப்படும் அரச முதலீட்டை அதிகரிக்கக்கோரி வல்லுனர்களுக்கு அழுத்தம் கொடுத்தல் மிகவும் போற்றப்பட வேண்டிய ஒன்றாகும். மொத்ததேசிய உற்பத்தியிலிருந்து கல்விக்காக ஒதுக்கப்படும் சதவீத அடிப்படையிலான நிதி ஒதுக்கீடு அதிகரிக்கப்படல் வேண்டும். அதற்காக குரல் கொடுத்தலும் மூளைசாலிகளின், கல்வி கற்றோரின், ஆற்றலுடையோரின் மக்கள் சார் உரிமையாகும்.



இப்பின்னணியிலிருந்து கல்விக்காக ஒதுக்கப்படும் அரசநிதி பற்றிய நடுநிலையான அல்லது பக்கச்சார்பற்ற ஆய்வு இக்கட்டுரையினூடு பிரசுரிக்கப்படுவதுடன் அது நாட்டின் மூளைசாலிகள், கற்றவர்கள், கல்வியிலாளர்கள் கொள்கை வகுப்போர் (policy makers) ஆகிய அனைவரினது கவனத்தையீர்க்க வேண்டும். பரவலாகப் பேசப்படல் வேண்டும்.

இலங்கையில் கல்வி, பூரண அரச ஈடுபாட்டுடன் நலன்புரிக் கொள்கைத் திட்டத்திற்கமைய தொழிற்படுவதொன்றாகும். சுயாதீனக் கல்விக் கொள்கைகளை அடிப்படையாகக் கொண்டியங்கும் இலங்கைக் கல்வியென்பது இலாபமீட்டும் தொகுதியன்று, எதிர்கால முதலீடாக முன்னெடுக்கப்படும் தொழிற்பாடாகும். சுயாதீன கல்விக் கொள்கை போல பள்ளிக்கூடங்கள் அரசுடைமையாக்கப்பட்டு கல்வியானது அரச பொறுப்பில் ஏற்கப்பட்டது. சுயாதீன இலவசக் கல்வி நாட்டின் அனைத்துப் பிரஜைகளுக்கும் எந்தவித பேதங்களுமின்றி கிடைக்க வேண்டிய தூய உரிமையுண்டு. அது இலங்கையில் அரச சட்டக்கோவைக்கமையவும், தேசிய, சர்வதேச கல்விக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொள்கைகள் மற்றும் பிரகடனங்களினூடாக மேலும் உறுதி செய்யப்பட்டுள்ளது. மறுபக்கமாக நோக்குமிடத்து அரசின் நலன்புரி அத்திவாரத்தின்மீது செயற்படும் நிகழ்ச்சித் திட்டங்களின் நேரடி நன்மை பெறுவோராக அமைய வேண்டியது நாட்டின் வரி செலுத்துபவர்களாகும். அப்படியாயின் நாட்டின் வரி செலுத்துபவர்களினால் இயங்கும் கல்வி போன்ற துறைகளின் நேரடி விளைவு அவர்களை அடைய வேண்டியிருப்பினும் தற்போது செயற்படும் முறையில் உண்மையாக நன்மை கிடைக்க வேண்டியவர்களுக்கு குறைவாகவும், சமூகத்தின் குறிப்பிட்ட வகுப்பினருக்கு அதியுயர் விளைவுகள் சென்றடைவது நிகழ்ந்த வண்ணமுள்ளது. அது ஒரு வகையில் நேர்மை நெறிக்கு (Equity) சவாலாக அமையக் கூடும்.




இந்த அடிப்படையில் நோக்கும்போது கல்விக்காக செலவிடப்படும் அரச முதலீடு நேர்மைநெறி மற்றும் வினைத்திறன் உறுதியாகப் பேணப்படும் வகையில் நிறைவேற்றப்படல் வேண்டும். சுதந்திரமடைந்ததன் பின் ஒவ்வொரு அரசும் கல்வியில் சமவாய்ப்பை ஏற்படுத்துவதற்கு நடவடிக்கையெடுத்துள்ளது.

**அட்டவணை -01**

| வருடம் | கல்விக்கான ஒதுக்கீடு மொத்த தேசிய உற்பத்தியின் சதவீதமாக | கல்விக்கான செலவினம் மொத்த அரச செலவினத்தின் சதவீதமாக |
|---|---|---|
| 1950 | 2.50 | 14.60 |
| 1960 | 4.40 | 14.90 |
| 1970 | 3.53 | 14.41 |
| 2003 | 2.15 | 9.37 |
| 2004 | 2.03 | 8.90 |
| 2005 | 2.59 | 9.20 |
| 2006 | 2.67 | 9.80 |
| 2007 | 2.59 | 7.89 |
| 2008 | 2.27 | 7.46 |
| 2009 | 2.08 | 6.77 |
| 2010 | 1.86 | 7.30 |

**அட்டவணை -02**

| நாடு | கல்விக்கான முதலீடு மொ.தே உற்பத்தியின் சதவீதம் | கல்விக்கான செலவினம் மொத்த அரச செலவின் சதவீதமாம் |
|---|---|---|
| இலங்கை | 1.86 | 7.30 |
| மலேசியா | 4.70 | 25.20 |
| தாய்லாந்து | 4.00 | 20.90 |
| இந்தியா | 3.20 | 10.20 |
| பங்களாதேஷ் | 2.40 | 14.00 |
| நேபாளம் | 3.80 | 14.90 |

விஷேடமாக உட்பிரவேசம் தொடர்பாகவும், வளமாக்கல் தொடர்பாகவும், கல்வியின் தரம் தொடர்பாகவும், மேலும் மேம்படுத்த வேண்டிய துறைகள் இன்னும் கல்வித் தொகுதியினுள் காண முடியும். அந்நிலைமை பாடசாலைத் துறையைப் போன்று பல்கலைக்கழக கல்வித் துறையிலும் பொதுவான நிலைமையாகும். கல்விக்கான அரச முதலீடுகள் பற்றிய தரவுகள் அட்டவணை (1) இல் தரப்பட்டுள்ளன.

இதனடிப்படையில் நோக்கும்போது கல்விக்காக செலவிடப்படும் அரச முதலீடு மொத்தத் தேசிய உற்பத்தியின் சதவீதமாக மற்றும் மொத்த அரச செலவினத்தின் சதவீதமாக நோக்கும்போது வருடாந்தம் குறைவடைந்து செல்வதைக் காண முடியும். இந்நிலையை மேலே தரப்பட்ட வரைபு 1, 2 ஐ காணும்போது நன்றாகப் புலப்படும்.

மேற்படி வரைபுகளை நோக்கும்போது, கல்விக்காக செலவிடப்படும் அரச முதலீடுகளின் தன்மை தெளிவாவதுடன் இத்தகவல் சேகரிப்பில் பாடசாலைக் கல்வி, உயர்கல்வி, பல்கலைக்கழகக் கல்வி மற்றும் தொழிநுட்ப கைத்தொழிற் பயிற்சி நிலையம் ஆகிய அனைத்திற்குமான முதலீடுகள் கூட்டிணைக்கப்பட்டுள்ளன. மேலும் நுட்பமாக நோக்கும்போது, பாடசாலைக் கல்வி, பல்கலைக்கழக, உயர்கல்வி, தொழிநுட்ப மற்றும் கைத்தொழில் பயிற்சித் துறைகளை வேறு வேறாக எடுத்துப் பார்க்கும்போது இம்முதலீடு மிகச் சிறிய தொகையை எடுக்கும். அந்நிலைமை கல்வி சார்பாக இடப்படும் முதலீட்டை மொத்த அரச செலவினத்தின் சதவீதமாக நோக்கும்போதும் இந்நிலைமை பொது இயல்பாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விஷேடமாக இலங்கை ரூபாயின் பெறுமதி வீழ்ச்சி ஊடாக நிதியின் செயற்சக்தி குறைவடைந்துள்ளது. அதனடிப்படையில் இம் முதலீடுகளூடாக நடைபெறும் பணிகளின் பெறுமானம் தொடர்பாகவும் பிரச்சினைகள் மேலெழும்புகின்றன. இந்நிலைமை நேரடியாக கல்வியின் தரத்தில் தாக்கம் விளைவிக்கின்றது.

இலங்கையின் தற்போதைய அரச முதலீடு ஏனைய நாடுகளுடன் ஒப்பிடும்போது திருப்தியளிக்கக்கூடிய நிலையிலில்லை. அதன் நிலை அட்டவணை 2 தரும் தரவுகளை நோக்கும்போது தெளிவடையும்.


இங்கு தரப்பட்டிருக்கும் நாடுகளைப் பற்றிய அறிக்கைக்கு நடுத்தரமான பொருளாதார வளர்ச்சி வேகம் கொண்ட நாடுகள் அதே போல் விரைவாக அபிவிருத்தியையும் நாடுகளை மேலும் ஒன்று சேர்ப்போமாயின் அதீத வேறுபாட்டைக் காண முடியாது.

வலய ரீதியாக இலங்கை கல்விக்காக குறைந்த முதலீட்டை மேற்கொள்வினும் ஒவ்வொரு பெற்றோரும் தமது பிள்ளைச் செல்வங்களுக்காக செலவிடும் தனிப்பட்ட முதலீடு மிகப் பெரியதாகும். அதேபோல் இலங்கையர் பெரும்பாலானோர் கல்வியில் கண்ணுங் கருத்துமாய் நம்பிக்கை வைத்து செயற்படுவதனால் இது வரையில் பாரிய கல்வி சார் வளர்ச்சி ஏற்பட்டுள்ளது. ஒரு விதத்தில் குறைந்த அரச முதலீட்டில் அதிக இலாபமீட்டும் கல்வித் தொகுதியாக சர்வதேச இலக்கியத்துடன் ஒன்றிணைந்துள்ளது. அர்ப்பணிப்பு இருப்பினும் அது கணக்கெடுப்பில் உள்வாங்கப்படவில்லை.


எவ்வாறெனினும் குறைந்த முதலீடு காரணமாக எதிர்பார்க்கும் விதத்தில் கல்வியை வழங்க தடைகளேற்படுவதுண்டு. அது மாணவர்களின் (பாடசாலை மற்றும் பல்கலைக்கழகம்) கற்றலில் மேம்பாட்டிற்கு நேரடியான தாக்கம் விளைவிக்கும். பாடசாலைகளுக்கு, பல்கலைக்கழகங்களுக்கு, தொழிநுட்பக் கல்லூரிகளுக்கு தேவையான வளங்களை தேவையான நேரத்தில் பெற்றுக் கொடுக்க முடியாமல் போவதினூடாக வளப்படுத்தலில் தீவிர அசமநிலை ஏற்படுவது தவிர்க்க முடியாதது. அடிப்படை வசதிகள், ஏனைய பௌதீக உட்கட்டமைப்பு வசதிகள் அதே போல் மனித வளங்களை வழங்குவதற்கும் தேவையான மூலதனம் இருத்தல் வேண்டும். குறைந்த முதலீட்டினூடாக கல்வியின் தரம் மற்றும் தேவைப்படும் அளவு தீவிரமாக அறைகூவல்களுக்குட்படுதல் தவிர்க்க முடியாதவை.

இந்நிலைமையை மேலும் ஆய்ந்தறிந்து துணுக்குகளை முன்வைக்க முடியும். அதே போல் அதன் விளைவுகளையும் வேறாக கலந்துரையாடல் வேண்டும். எப்படியேனும் கல்விக்கான அரச முதலீடு தொடர்பாக மேலும் ஆய்ந்தறிந்து குறிப்பிட்டளவில் அதிகரித்துக் கொள்ள நடவடிக்கையெடுப்பது உடனடியாக நிறைவேற்றப்பட வேண்டிய தொன்றாக ஆகிவிட்டது.

**வரைபு - 3**
**கல்விக்கான ஒதுக்கீடு மொத்த தேசிய கல்விக்கான செலவினம் சதவீதமாக**




**வரைபு - 4**
**உற்பத்தியின் சதவீதமாக மொத்த அரச செலவினத்தின்**






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பியாஜேயின் அறிகை நோக்கும் கற்றல் தொழிற்பாடும்

சிங்களத்தில் - **Prof. Daya Rohana Athukorala**
University of Colombo
தமிழில் - **Mr. A.A. Azees**

அறிவாற்றற் கட்டமைப்புகள் பிறப்பிலிருந்து, 18-20 வயது ஆகும் வரை ஒழுங்கு முறையில் தொடர்ச்சியாக மேம்பாட்டுடன் வளர்ச்சியடைவதாக ஜீன் பியாஜே தெரிவிக்கிறார். தொடர்ச்சியாக நிகழ்கின்ற, ஒவ்வொரு கட்டங்களில் வேறுபட்டுத் தென்படுகின்ற, ஒன்றாக இணைக்கக்கூடிய, அறிவாற்றற் திறமைகளை உள்ளடக்கியதாக அறிகை, அறிவியல் மேம்பாட்டை பல கட்டங்களாக வகுக்க முடியும். இவ்விஷேட முக்கிய காரணிகளைக் ஒன்றிணைத்து அறிகை மேம்பாட்டுச் செயன்முறை பிரதான நான்கு அவத்தைகளும் பல உப பிரிவுகளாகவும் ஜீன் பியாஜே வகுத்துள்ளார். அவ் அவஸ்தைகளில் காணப்படும் இயல்புகளை அறிந்து கொள்ளல் மிக முக்கியமானதாகும். ஒவ்வொரு பருவத்திற்குமுரிய பிள்ளையினால் விளங்கிக் கொள்ள முடியுமான உலகையும் அறிவாற்றற் செயன்முறைகளையும் எதுவென அறிந்து கொள்ளும்போது அதன் பிரகாரம் கற்பித்தல் தொழிற்பாடுகளை ஆசிரியரால் வடிவமைக்க முடியும். கற்றல்- கற்பித்தல் செயன்முறையை கருத்தாழம் மிக்கதாகவும் சுவையானதாகவும் தொழிற்படுத்துவதற்கு இது பற்றிய அறிவு ஆசிரியருக்கு மிகவும் பயனளிக்கும். இதனால் அம் மேம்பாட்டு அவத்தைகள் பற்றி விரிவாக கலந்துரையாடுவது மிகவும் பயனுடையதாகும்.

பியாஜே காண்பிக்கும் பிரகாரம், அறிகை மேம்பாட்டை பிரதானமாக நான்கு அவத்தைகளாக வகுக்க முடியும்.

1. புலனியக்கப் பருவம் - Sensory motor stage கால சிந்தனைக்கு முந்திய பருவம்
2. முன் இயக்குகைப் பருவம் - Pre – operational stage கால சிந்தனைப் பருவம்
3. திட்டவட்டமான இயக்குகைப் பருவம் - Concrere operational stage நியம சிந்தனைப் பருவம்
4. முறைமை இயக்குகைப் பருவம் - Formal operational stage

(நியம கலைச்சொல் அகராதியிலிருந்து பெறப்பட்டது. பார்க்க – உசாத்துணைகள்)

நாம் அனைவரும் இப்பருவங்கள் நான்கையும் இவ் ஒழுங்கு முறைக்கமைய கடந்து செல்வதாக பியாஜே விளக்குகின்றார். இப்பருவ ஒழுங்கு முறை மாற்றமுறுபவை அல்ல, மாற்றமுறாதவை. இப்பருவங்களை கற்கும்போது அடிப்படை வேறுபாடுகள் காணப்படினும் இலகுவாக விளங்குவதைக் கருத்திற் கொண்டு வயதுடன் (வருடம்) தொடர்பு படுத்தி ஆராயப்படும். ஒவ்வொரு பருவத்துக்குமுரிய வேறுபட்டுத் தென்படும் விஷேட இயல்புகளை அட்டவணையை நோக்குவதன் மூலம் தெளிவாக்கிக் கொள்ள முடியும். எனினும் நினைவில் வைத்திருக்க வேண்டியது கால வயதிற்கும் அறிகை மேம்பாட்டுப் பருவங்களிடையேயும் மாற்றமடையாத தொடர்புகள் எதுவும் இல்லை என்பதாகும். இவ்வாறு வயதுடன் தரப்பட்டிருப்பது நிழல் உருவொன்றை மனதிற் கொள்வதற்கு மாத்திரமே. தான் கற்பிக்கும் பிள்ளையின் வயதைத் தெரிந்தவுடன் அப்பிள்ளை எந்த அறிகை மேம்பாட்டுப் பருவத்தில் உள்ளதென்பதைக் கண்டறிய அது போதிய வழிகாட்டியல்ல. 16 அல்லது 17 வயதுடைய ஒரு பிள்ளை கூட முறைமை இயக்குகைப் பருவத்தை அடைந்திருக்கின்றதா என்பதை உறுதிப்படுத்திக் கூறல் கடினமான விடயம். பியாஜேயின் அறிகை விருத்திக் கொள்கையை மேற்கூறிய விளக்கத்துடன் சேர்த்து விளங்கிக் கொள்ளல் வேண்டும்.

இவ்வாறு அண்ணளவாக வயதுடன் மேம்பாடடையும் அறிகைத் தொழிற்பாடு பியாஜேயினால் முன்வைக்கப் பட்டுள்ளது. அறிகை விருத்திப் பருவங்களின் அடிப்படை இயல்புகளைத் தரும் அட்டவணையின் மூலம் ஒவ்வொருவரினதும் அறிகை விருத்திப் பருவத்தை அறிய முடியுமாயினும் உயர் அறிகை விருத்தியை உடையவர்களும் தாழ் அறிகை விருத்தி நிலையிலுள்ள நடத்தைகளைக் காண்பிக்க முடியும். ஒவ்வொரு பருவமும் அதற்கு முன்னரான பருவத்தை விட சிக்கல் தன்மை வாய்ந்த நிலையை ஒவ்வொருவரிலும் ஏற்படுத்தும் இதனால் குறிப்பிட்ட வயதில் பிள்ளையினால் முடியுமான தொழிற்பாடுகள் யாவையென அறிதல், செய்ய முடியாத தொழிற்பாடுகள் யாவையென அறிதலிலும் பார்க்க சிறந்தது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



இவ்வாறு யாதேனும் வகைப்படுத்தலுக்கமைய பருவங்களாக வகுத்து ஆராயப்படினும் இப் பருவங்களிடையே நிரந்தரமான தொடர்பு காணப்படுவதையும் மறந்து விடக் கூடாது.

அப்பருவங்கள் பல்வேறு வழிகளில் ஒன்றுடனொன்று இணைபவை. தழுவல் செயற்பாட்டின் போது முற்பருவங்களில் வளர்ந்த சிந்தனைப் படிமங்கள், புதிய சிந்தனைப் படிமங்களுடன் இணைந்து ஒன்றாக ஒருங்கிணைந்து செயற்படும். எனினும் உயர் நிலை அறிகைப் படிகளிலுள்ள ஒருவர் சிலவேளை தேவையேற்படுமிடத்து தாழ்நிலை அறிகைப் படியில் செயற்பட்ட விதமாக பிரச்சினை தீர்க்க முற்படுவதைக் காணலாம். உதாரணமாக உயர் அறிவாற்றற் தளத்திலுள்ள நீங்கள் கூட இவ்வாரம் முடிவடைய இன்னும் எத்தனை நாட்கள் உள்ளதென்பதைக் கணிக்க விரல் எண்ணுவதைக் குறிப்பிடலாம். இதனால் வளர்ச்சிப் பருவங்களில் கிடையான மற்றும் நெடுகோட்டுத் தொடர்புகள் திரும்பத் திரும்ப ஒன்றாக செயற்படுவதைக் குறிப்பிட முடியும்.

குறிப்பிட்ட பருவங்களில் பிள்ளைகளின் ஆற்றல்கள் எத்தகையது என்பதை விரிவாகத் தெரிந்திருத்தல் ஆசிரியர்களுக்கு மிகவும் பயனளிக்கும். ஆகவே அப்பருவங்களைப் பற்றி முக்கியமான விடயங்களை வேறாக கலந்துரையாடல் உகந்தது.

**புலனியக்கப் பருவம்:-**

பிறப்பிலிருந்து 18-24 மாதங்கள் வரையான பருவம் புலனியக்கப் பருவம் என குறிப்பிடப்படும். பிள்ளை உலகுடன் தொடர்புகளை ஏற்படுத்தி உலகை அறிந்திட, உலகுடன் தொடர்புபட ஆரம்பிக்கும் கால கட்டமாகும்.

அறிகை விருத்திப் அடிப்படை இயல்புகள்

| பருவம் | அடிப்படை இயல்புகள் |
|---|---|
| 1. புலனியக்க பருவம் பிறப்பிலிருந்து 18-24 மாதங்கள் | • தனக்கும் பொருட்களுக்குமிடையேயான வேறுபாட்டை விளங்கிக் கொள்ளல்.<br>• பொருளின் இருக்கையை விளங்குதல். பொருளொன்றை ஒழித்து வைக்கும்போது அது இல்லாமலாவதில்லை என்பதை அறிதல்.<br>• தெறிவினைத் தொழிற்பாடுகள் ஆரம்பித்தல் யாதேனும் வரையொன்றை இலக்கு ஒன்றை நோக்கி செயற்படும். |
| 2. முன் இயக்குகைப் பருவம் 2-7 வயது வரை | • போதிய மொழி விருத்தி ஏற்படும்.<br>• குறியீட்டு ரீதியில் சிந்திக்கும் திறன் பெறுதல்.<br>• ஒரு திசைக்குட்பட்டு, தருக்க வழியில் சிந்திக்க முடியும்.<br>• ஏனையவர்களின் பார்வைக் கோணத்தில் பார்க்க முடியாது. இன்னும் தன்வயச் சிந்தனையை மையமாகக் கொண்டிருத்தல். வகைப்படுத்தலில் அடிப்படைத் திறமைகளைக் காட்டல். ஒரு காரணியைக் கொண்டு வகைப்படுத்தல். |
| 3. திட்டவட்டமான இயக்குகைப் பருவம் 7-11 வயது வரை | • புலனுறுப்புகளினால் புலனுணர்வு பெறப்படும் திட்டவட்டமாக முன்வைக்கப்பட்ட பிரச்சினைகளை தருக்க நிலையில் தீர்க்க முடிதல்.<br>• எண்ணிக்கை (7வயது), திணிவு (7வயது) நிறை (9 வயது) பற்றிய காப்பு நிலை (Conservative Concept) எண்ணக்கருக்களை விளங்க முடிதல்.<br>• வகைப்படுத்தல், ஒழுங்குபடுத்தல், முறையே வைத்தல், ஒன்றுடனொன்று தொடர்புபடுத்த முடியும்.<br>• மீளும் தன்மை (Reversability) காணப்படும் (பின்னோக்கி செய்து பார்க்கும் ஆற்றல்) |
| 4. முறைமை இயக்குகைப் பருவம் 11- 18 வயது வரை | • குழம்பிய பிரச்சினைகளைக் கூட யாதேனும் தருக்க நிலை வழங்கில் தீர்க்க முடியும்.<br>• சிந்தனை மேலும் மேலும் விஞ்ஞான பூர்வமாக<br>• சமூகப் பிரச்சினைகள் தொடர்பாக ஈடுபாடு கொள்ளல்.<br>• தனது ஒன்றுணர்வை அல்லது அடையாளத்தை (தனித்துவம் வாய்ந்த) கட்டியெழுப்புதல். (Identity) |

குழந்தை பிறந்தவுடன் அதனால் சில தெறிவினைகளை மாத்திரமே செயற்படுத்த முடியும். குறிப்பிட்ட தூண்டி கிடைக்கப் பெற்றவுடன் தெறிவினை தொழிற்படும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உறிஞ்சுதல், விழுங்குதல், உணர்தல், பார்த்தல் ஆகியன அடிப்படை தெறிவினைகளாக முதலில் தொழிற்படும். இத் தெறிவினைகளின் விளைவாக குழந்தை வெளிஉலக நிகழ்வுகளுக்கு துலங்கல் தரும். உறுப்புகளினால் பெறப்படும் புலன்களுக்கேற்ப அதன் அறிகை ஆற்றல் ஒழுங்கே விருத்தி பெறும். முதிர்ச்சியும் தொழிற்பாடுகளும் (அதாவது இயக்கச் செயற்பாடுகள்) குழந்தைப் பருவத்தில் அறிவாற்றல் விருத்திக்கு மிக முக்கியம். வெளிச் சூழலுடன் தொழிற்பாடுகள் அதிகரிப்பதுடன் அத்தொழிற்பாடுகளுக்கான அமைப்புகள் (திரளமைப்புகள் - schema) உள்ளத்தில் தோற்றம் பெறும். திரளமைப்பு விருத்தியுடன் அறிவாற்றல் திறமைகள் மேம்பாடடையும்.

இப்பருவத்தில் அறிகை மேம்பாட்டில் புலனுறுப்புச் செயற்பாடுகளும், (sensorg) இயக்கச் (motor) செயற்பாடுகளும் பிரதானமாக இடம்பெறுவதால் இப்பருவம் புலனியக்கப் பருவம் என பெயரிடப்பட்டுள்ளது. அதனால் இந்த காலப்பகுதிக்குரிய நுண்மதி "பிரயோக நுண்மதி" என அழைக்கப்படும். இப்பருவத்தில் குழந்தை பெற்றுக் கொள்ளும் அடிப்படை அறிவாற்றற் திறமைகள் பல பின்வருமாறு.

1) புலனுணர்வுகளுக்கும் இயக்கச் செயற்பாடுகளுக்கு மிடையே தொடர்புகள் உருவாதல்.
2) பொருட்களின் நிலையான தன்மை (பொருள் நிலைத் துவம்) பற்றிய விளக்கம் ஏற்படல்.
3) இலக்கு – குறிக்கோள்களை மையமாகக் கொண்ட செயற்பாடுகளில் ஈடுபடல்.
4) தான் வாழும் வெளியைப் பற்றி விளக்கம் பெறல்.
5) மொழிப் பயன்பாடு பற்றிய ஆற்றல் கிடைக்கப் பெறல் என்பனவாகும்.

புலனுணர்வுகளுக்கும் - இயக்கத் தொழிற்பாடுகளுக்கும் தொடர்பு ஏற்படும் பருவமாகும். ஆரம்பத்தில் கையில் பட்டத்தைப் பிடிக்கும், வாயில் பட்டதை உறிஞ்சும், கண்ணில் தெரிவதைப் பார்க்கும். இவ்வாறு புலனுறுப்புகளுடன் தொடர்புபடுபவைகளுக்கு துலங்கல் காண்பிக்கும். இவ் உறுப்புகளுடன் பொருட்கள் தொடருறும்போது துலங்கல் வெளிப்படும் போது மனதில் அதற்கான திரளமைப்புகள் (scheme) உருவாகும். அத்திரளமைப்பு காரணமாக குறிப்பிட்ட செயலை மீண்டும் மீண்டும் செய்ய முடியும். சுவையானவற்றை சுவையற்றவற்றிலிருந்து வேறுபடுத்த முடியும். விரல் வாயினுள் சென்றபோது உறிஞ்சுதல் ஆரம்பத்தில் நிகழ்ந்தாலும் பின்னர் விரலை வாயிலெடுத்து உறிஞ்சும். பால் போத்தலை அண்மையில் வைக்கும் போது அதனைப் பார்த்து, கையிலெடுத்து வாயில் வைத்து உறிஞ்சும். இவ் ஆற்றல் வளர்ச்சியடையும்போது பல எளிய திரளமைப்புகள் ஒன்றிணைந்து சிக்கலான அமைப்புகள் உருவாகியிருக்கும். இவ்வாறு தொழிற்பாடுகளை செய்தல், அதன் மூலம் திரளமைப்புகள் வளர்தல், அதற்கமைய மீண்டும் மீண்டும் புதிய தொழிற்பாடுகளைச் செய்தல் என முறையே நுண்மதி வளர்ச்சி ஏற்படும்.

இப்பருவத்தில் குழந்தை பெறும் மற்றைய ஆற்றல் பொருள் நிலைத்துவம் (object permanence) பற்றிய அறிவாகும். தான் புலக்காட்சி பெறினும் இல்லாவிடினும் பொருட்கள் சூழலில் இருப்பதாக உணர்ந்து கொள்ளல் பொருள் நிலைத்துவமாகும். குழந்தைக்கு 7-9 மாதங்களாகும் போது இத்தெளிவு ஏற்படும். அது வரையில் பொருட்கள் காணக்கிடைத்தல், இல்லாமலாதல், மனித உறவுகளை காணக்கிடைத்தல், இல்லாமலாதல் என வெவ்வேறு வழிகளில் பொருட்களின் நிலையான தன்மையைப் பற்றிய தெளிவு காணப்படமாட்டாது. தான் காணாத போது அப்பொருள் இல்லை என குழந்தை நினைக்கும். விளையாட்டுப் பொருளொன்றை அல்லது பால் போத்தலை அதற்குக் காண்பித்து அப்புறப்படுத்தினாலும், அதனை மீண்டும் தேடாது எனினும் ஒன்பது (9) மாதங்களாகும்போது வீழ்ந்திருக்கும் பந்து அல்லது மறைந்திருக்கும் விளையாட்டுப் பொருளைத் தேடுவதில் முயற்சியெடுக்கும். அவை கிடைக்காவிடின் தேடியழும். அப்பொருள் தனக்குக் கிடைக்கா விடினும் எங்கோ இருப்பதாக உணரும் ஆற்றல் விருத்தியடைந்திருக்கும்.

தருக்க நிலையான, நோக்குடைச் செயற்பாடுகளின் (Goal directed actions) மீது ஈடுபாடு காட்டல் புலனியக்கப் பருவத்தில் ஏற்படும் மற்றுமொரு ஆற்றலாகும். விளையாட்டுப் பொருட்களை இட்டு மூடக்கூடிய மூடியைக் கொண்ட பிளாத்திக்குப் பாத்திரமொன்று குழந்தைக்குக் கிடைக்குமாயின் அது அதனுடன் விலையாகும். (47/=)

எனினும் 12-14 மாதங்களாகும் போது மேலும் பொருட்களுடன் விளையாடிப் பழக்கப்பட்டிருக்கும் போது அந்த பிளாத்திக்குப் பாத்திரத்தை வழங்கும்போது அது படிமுறை படிமுறையாக விளையாட்டில் ஈடுபட்டு (color) நிறமான பொருட்களை வெளியிலெடுக்கும். முயன்று தவறிக் (Trial & Error) கற்றல் மூலம் அந்த ஆற்றலைப் பெறும். அது முதலில் மூடியைத் திறக்கும். பாத்திரத்தை மேல் கீழாக்கிப் பார்க்கும். பொருட்களை வெளியில் எடுக்க அதனைக் குலுக்கும். அவை ஒவ்வொன்றாக விழுவதைப் பார்த்துக் கொண்டிருக்கும். இச்செயன்முறை, முறையே மீண்டும் மீண்டும் செய்வதற்கு அதற்கு ஆற்றல் கிடைத்துள்ளது. "முதிர்வு, தொழிற்படுதல், என்பவற்றின் மூலம் குழந்தையிடமும் காணப்பட்ட எளிய அறிகைத் திரளமைப்புகள் ஒன்றிணைந்து, விருத்தியடைந்து நுண்மதி படிப்படியாக வளர்ச்சியடைந்திருப்பது இதன் மூலம் தெளிவாகின்றது." குழந்தை இவ்வாறு பலமுறை தொழிற்படுவதன் மூலம் மீண்டும் அப்பொருட்களை பாத்திரத்தினுள் இடுவதற்கும் தொடங்கும். அவற்றை உள்ளே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இட்டு சரியான முறையில் நிமிர்த்தி மூடியையும் மூடும். இவ்வாறு மீளும் தன்மை (Reversibility) பெறல் புலனியக்கப் பருவத்தால் பெறப்படும் மற்றுமொரு ஆற்றலாகும். மீளும் தன்மையான செயற்பாடுகளில் ஈடுபடினும் அச்செயற்பாட்டை மனதளவில் சிந்தித்து செயற்படுத்துமளவிற்கு அந்த அறிகைத் திரளமைப்பு இன்னும் வளர்ச்சி பெறவில்லை.

தான் வாழும் வெளியை அறிதலும் இக்காலத்தில் நிகழும். உட்காருதல், தவளுதல் (Crawl), நடத்தல் போன்ற இயக்கத் தொழிற்பாடுகளால் அது உலகையும் வெளியையும் அறிந்து கொள்ளும். குழந்தை நடக்கும் பருவத்தை அடைந்த பின் உலகை சரியான முறையில் நோக்கும். வளர்ந்தோர் காணும் உலகைக் காண்பது அப்போதாகும். முதன் மாதங்களில் மேல்நோக்கி (upright) மாத்திரம் பார்ப்பதனால் வெளியை தெளிவாக விளங்கிக் கொள்ளாது.

புலனியக்கப் பருவம் நிறைவடையும்போது சுற்றுச்சூழல், வெளி என்பன பற்றிய போதிய தெளிவைப் பெறும். இவ்வாறு உண்மையான உலகுடன் அனுபவம் பெற்று புதிய திரளமைப்புகளை உருவாக்கிக் கொள்ளும். உலகு பற்றிய அடிப்படை அறிவு இப்பருவத்திலேயே உறுதிப்படுத்தப்படுகிறது.

புலனியக்கப் பருவத்தில் மொழியைக் கையாளும் ஆற்றலையும் பெறும். தான் செவிமடுக்கும் சொற்களையும் அதன் மூலம் தரப்படும் செய்திகளையும் அறிந்து கொள்ளும் மொழிக்கையாள்கை ஆற்றல் பிற்கால நுண்மதி (புத்திக் கூர்மை) வளர்ச்சியில் பெரும் பங்காற்றும்.

இவ்வாறு புலனியக்கப் பருவத்தில் குழந்தைகளின் அறிவாற்றல் மேம்பாடடையும் ஒழுங்கை அறிந்து கொள்வதன் மூலம், அவ் ஆற்றல்களை மேம்படுத்த துணை வழங்க முடியும். வயதுடன் அதிகரிக்கும் உறுப்புகளின் முதிர்விற்கேற்பவும் செயற்பாடுகளில் ஈடுபட குழந்தையினால் முடியும். முதிர்வு ஏற்படும் காலத்தை துரிதப்படுத்துவது முடியுமானதன்று. அது தேவைப்பட்டதுமல்ல. கையினால் அசைக்கக்கூடிய, காலினால் உதைக்கக்கூடிய (sound) ஒலி எழுப்பும் விளையாட்டுப் பொருட்களை வழங்குவதும், அவற்றுடன் செயற்பட, விளையாடிட சந்தர்ப்பம் வழங்குவதும் மிக முக்கியம். இவ்வாறான சுயாதீனமான தொழிற்பாடுகள் மூலம் குழந்தை, வெளி பற்றிய, பொருட்களின் நிலைத்துவம் பற்றிய தெளிவைப் பெறும். அத்துடன் குழந்தையுடன் அன்பாய்க் கதைத்தல், திருப்தியான நிலையில் வளர்த்தல், தாயின் உடல் வெப்பம், பாசம், இதமான அரவணைப்புக் கிடைக்குமாறு பேணிக்கொள்வதன் மூலம் புலனியக்கப்பருவ அறிவாற்றல் விருத்திச் செயன்முறைக்கு பெற்றோரினால் ஆதரவு நல்க முடியும்.

சுருக்கமாக

1. Sensony motor skills
2. Object permanence
3. Goal directed actions
4. Reversibility of thought
5. Space Identity
6. Language Development

**முன் இயக்குகைப் பருவம்:**

**புலனியக்கப் பருவத்தைத் தொடர்ந்து வரும் இப்பரும் அண்ணளவாக 2-7வயது வரை காணப்படும். புலனியக்கப் பருவத்தில் வளர்ந்த அடிப்படைத் திறமைகள் மற்றும் தளத்தின்மீது இப்பருவத்திற்குரிய நுண்மதி வளர்ச்சி ஏற்படும். புலனியக்கப் பருவத்தில் சில எளிய அறிகைத் திரளமைப்புகள் மாத்திரமே விருத்தியடைந்திருக்கும்.**

சில சில செயற்பாடுகளைத் திட்டமிட்டு, செயற்படுத்துவதற்கு உளரீதியாக "இயக்குகை" (Operation) நிகழ்த்தும் ஆற்றலிருத்தல் வேண்டும். இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட பண்புக்கூறுகள் அல்லது நிகழ்வுகளை உளரீதியாக ஒன்றிணைத்து தீர்மானம் எடுப்பதற்கும் அதன் மீளும் தன்மையை (Reversibility) பரீட்சிப்பதற்குமான ஆற்றல் இயக்குகை (Operation) எனும் சொற்பிரயோகத்தின் அர்த்தமாகும்.

2-7 வயதிடையே அவ் ஆற்றல்கள் படிப்படியாக வளர்ச்சியுறும். இதன் காரணமாக இது முன் இயக்குகைப் பருவம் என அழைக்கப்படுகின்றது. இயக்குகைகள் மூலம் சிந்தனையைப் பெறும் முதற் படிமுறை செயல் உள்ளமைவாக்கமாகும். (Inter relization) என பியாஜே தெரிவிக்கிறார். புலனியக்கப் பருவம் முடிவுறும்போது குழந்தையினால் பல இயக்குகைகளை மேற்கொள்ள முடியும். இவ் இயக்குகைகள் வெறுமனே செயற்பாடுகளுக்கு மாத்திரம் வரையறுக்கப்பட்டிருக்கும் வரை அச்செயல்கள் தொடர்ந்து இடம்பெறுவது என்பதை எதிர்வு கூறவும், எண்ணங்கள் தோன்றுவதற்கும் வாய்ப்பில்லை. இவ் அறிகைத் தொழிற்பாடுகள் பற்றிய திரளமைப்புகள் குறியீட்டு ரீதியில், உளரீதியாக, உருவாக்கிக் கொள்ள முடிவதன் காரணமாக செயற்பாடுகள் மாற்றமடைந்து சிந்தனையை நோக்கி நகரும் ஆரம்பப் படியாக அமையும். இதன்படி குறியீட்டாக்கம் நடைபெறுதலுக்கும், அவற்றைப் பயன்படுத்த வேண்டிய ஆற்றல், சொற்கள், உளப்படிமங்கள், சமிக்ஞை ஆகியனவற்றை உபயோகிக்க முடிதல் முன் இயக்குகைப் பருவத்தில் கிடைக்கப் பெறும் பிரதானமானதொரு திறமையாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மொழிக் கையாள்கைத் திறமை இப்பருவத்திற்கான நுண்மதி வளர்ச்சியில் உதவும் காரணியாகும். குழந்தைகள் செயற்பாடுகளைப் பின்பற்றுவதன் மூலம் ஆரம்பத்தில் குறியீட்டுப் பயன்பாட்டை மேற்கொள்வர். சொற்பிரயோகங்கள் மூலம் தனது கருத்துக்களை சரியாகக் கூற முடியாதவிடத்து குழந்தைகள் அக்கருத்துக்களை செயல் மூலம் செய்து காட்டுவர்.

பின்பற்றுகை மூலம் செயல்களைப் புரிய முடிதலும் மொழிக் கையாள்கை ஆற்றலும் இப்பருவ நுண்மதி வளர்ச்சியில் துணை புரியும் பிரதான காரணிகளாகும். 2-4 வயதாகும் போது குழந்தைகள் தனது சொற்களஞ்சியத்தில் 200- 2000 வரையான சொற்களை அறியுமளவிற்கு வளர்த்திருக்கும்.

முன் இயக்குகைப் பருவம் ஒழுங்காக வளர்ச்சியடைய பொருட்களையும் செயற்பாடுகளையும் பற்றிய குறியீட்டுச் சிந்தனை ஆற்றல் விருத்தி பெறும். எனினும் இன்னும் குழந்தையினால் ஒரு திசையில் மாத்திரமே சிந்திக்க முடியும். இவ்வாறு ஒரு திசையில் சிந்திக்கும் பண்பை பின்வரும் விளையாட்டின் மூலம் தெளிவு பெறலாம். தேவைப்படும் பொருட்கள்

- விளையாட்டுப் பொருட்கள் சில (ஒவ்வொரு வகையில் இரண்டு விதம்)
- அவற்றைச் செலுத்துவதற்கு காகிதத்தில் வெட்டப்பட்ட இரு பாதைகள் அதாவது இரு கடதாசி நாடாக்கள்

குழந்தையிடம் இவற்றில் ஒரு பாதையும் பொருட்களில் சிலவும் வழங்கப்படும். தொடர்ந்து பரீட்சகரினால் பாதை வைக்கப்பட்டு அதன் மீது ஓர் ஒழுங்கில் பொருட்கள் வைக்கப்படும். இவ்வாறு பாதையில் அதே ஒழுங்கில் பொருட்களை வைக்கும்படி பணிக்கும்போது சரியாக வைக்கப்படுமாயின் அது ஒரு திசையில் சிந்திக்கும் தருக்க நிலையை தெளிவு பெற்றதாய் உணரப்படும்.

குழந்தையில் மீட்சிச் சிந்தனை (Reversibility) விருத்தியுற்றிருக்கிறதா என்பதை அறிவதன் மூலம் முன் எண்ணக்கருப் பருவத்தை அடைந்திருக்கின்றதா என்பதைப் பரிசோதிக்க முடியும். காகிதப் பாதையில் பரீட்சகரினால் விளையாட்டுப் பொருட்கள் வைக்கப்படும். தற்போது பரீட்சகரினால் செய்யப்பட்டதை எதிர்ப்பக்கமாக அதாவது கடைசியிலிருந்து ஆரம்பத்திற்கு எனும் ஒழுங்கில் வைக்குமாறு பணிக்கப்படும். முன் எண்ணக்கருப் பருவத்திற்குரிய குழந்தை அதனை சரியாக ஆரம்பித்து சற்றுத் தூரம் சரியாகச் செய்யும். எனினும் இறுதியில் மீண்டும் மீட்சி ஒழுங்கு முறைக்குப் பதிலாக முதலில் செய்த ஒழுங்கையே கடைப்பிடிக்கும். இவ் உதாரணத்தைப் பார்க்க.

குழந்தை இவ் ஒழுங்கைக் குலைத்துக் கொள்ளும். காரணம் இது போன்ற காரியமொன்றைச் செய்வதற்கு பூரண தொகுதியை மனதில் காட்சி கொண்டு மீட்சி முறையில் சிந்திக்கும் ஆற்றல் இருப்பின் மாத்திரமே குழந்தையினால் முடியும். முன் இயக்குகைப் பருவத்தில் குழந்தையில் அவ் ஆற்றல் வளராது.

மீளும் தன்மைக்கான சிந்தனை வளருவதற்கு மாறாத்தன்மை காப்பு (Conservation) எனும் எண்ணக்கரு விருத்தி பெற்றிருத்தல் வேண்டும். மாறாத் தன்மை எண்ணக்கரு என்பது, பொருளொன்றின் அல்லது திரவமொன்றின் அளவுப் பெறுமானத்தை மாற்றாமல், அதன் உருவை அல்லது அமைவிடத்தை மாற்றும்போது அப்பதார்த்தத்தின் திணிவு அல்லது பெறுமானம் மாற்றமுறாது என்பதாகும். இது தொகை காப்பு எனவும் அழைக்கப்படும். மாறாத் தன்மைக்கான எண்ணக்கரு விருத்தியடைந்து காணப்படுமாயின் உருவம், ஒழுங்கு அல்லது அமைவிடம் என்பவற்றை எவ்விதம் மாற்றியமைப்பினும் அதன் பெறுமானத்தை சரியாகக் கூற குழந்தையினால் முடியும். உதாரணமாக தாளொன்றை பல சிறு துண்டுகளாக கிழிக்கப்படினும் முன்னர் காணப்பட்ட அதே பரப்பளவுடைய தாள் அதில் அடங்கியிருப்பதாக நீர் அறிவீர். அச்சிறு துண்டுகளை மீண்டும் சரியாக இணைப்போமாயின் ஆரம்ப உருவம் கிடைக்கப் பெறும். இவ்வாறு மீளும் தன்மையை உபயோகித்து மீண்டும் சிறு கடதாசித் துண்டுகளின் மூலம் முழுக் கடதாசியை அமைத்துக் கொள்ள முடியும்.

பியாஜேயினால் நீர்ப்பாத்திரம், களி உருண்டைகள் என்பவற்றைக் கொண்டு இவ்வாறான பல பரிசோதனைகள் செய்யப்பட்டன. அவர் ஐந்து (5) வயதுடைய பிள்ளையொன்றிடம் அகன்ற, தட்டையான இரு பாத்திரங்களைக் காண்பித்து அவற்றில் சமனான அளவுகளில் நீர் நிரப்பினார். இப்பாத்திரங்களிலுள்ள நீர் ஒரே அளவானதா என பிள்ளையிடம் வினவியபோது ஆம் என பதிலளித்தது. பின்னர் அவற்றுள் ஒரு பாத்திரத்திலுள்ள நீரை, ஒடுங்கிய, உயர்ந்த குவளையொன்றினுள் ஊற்றப்பட்டது. தற்போது ஒடுங்கிய குவளையிலும், அகன்ற பாத்திரத்திலும் இருக்கும் நீரின் அளவுகள் சமனானதா என வினவப்பட்டபோது, ஒடுங்கிய குவளையில் அதிக நீர் இருப்பதாக பிள்ளை விடையளித்தது. அதற்கான காரணம் குவளையில் நீரின் மட்டம் உயரமாக இருப்பதே காரணமாகும். இங்கு பிள்ளையானது முதற் பாத்திரத்திலுள்ள அதேயளவு நீர் குவளைக்கு மாற்றப்பட்டதை ஏற்றுக் கொள்கிறது. தனித்துவம் (Identity) அடிப்படைத் தெளிவு காணப்படுகிறது. எனினும் அளவின் தனித்துவத் தன்மையை (மாறாக் கனவளவு) விளங்கிக் கொள்ளும் ஆற்றலில்லை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவ்வாறு விடையளிப்பதற்கான காரணம் குழந்தை வேறுபட்டுத் தென்படும் புலக்காட்சிக்கு உட்படுதலாகும். ஒரு முறையில் ஒரு காரணி மீது மாத்திரம் தனது கவனம் செல்லலாகும். அப்பாத்திரம் உயரத்தால் அதிகரித்தாலும், அகலத்தில் குறைந்தது எனும் இரு காரணிகளையும் சிந்திப்பதற்கு ஆற்றலில்லை. ஒரே தடவையில் இரு காரணிகளை ஒன்றாக நோக்கி முடிவெடுக்கும் ஆற்றல் முன் இயக்குகைப் பருவத்தில் குறைவாகும். உயரம், அகலம் எனும் இரு பரிமாணங்களையும் ஒன்றிணைத்து மனதளவில் மாத்திரம் ஒப்பிட்டு தீர்மானமெடுக்க முடியாதென்பது இதன் மூலம் தெளிவாகின்றது.

முன் இயக்குகைப் பருவத்தில் குழந்தை தான் "நடுவ" (egocentric) இயல்புகளைக் காட்டுவதாக பியாஜே தெரிவிக்கிறார். ஏனையவர்கள் சிந்திக்கும் பாணியில் சிந்திப்பதற்கு, ஏனையோர் உலகை நோக்கும் பாணியில், உலகை நோக்குவதற்கு இப்பருவப் பிள்ளைகளிடம் ஆற்றலிராது. தன் நடுவம் என்பது சுயநலம் என்பதல்ல. அதன் அர்த்தம், மற்றைய அனைத்துப் பிள்ளைகளும் தான் காணும், சிந்திக்கும், உணரும் போக்கிலேயே காணல், சிந்தித்தல் உணர்தலைக் கொண்டிருப்பதாக நினைத்தலாகும். யன்னலினூடாக வெளியே பார்க்கும் பிள்ளைக்குத் தென்படுபவை, யன்னலிற்கு பிற்காட்டி நிற்கும் எமக்கும் தென்படுவதாக அது நினைக்கும்.

அதே போன்று தனக்கு ஏற்படும் உணர்வுகள் பிறரிலும் ஏற்பட வேண்டுமென நினைக்கும். முன்பள்ளியில் தான் கண்ட, கேட்ட விடயங்களை தனது தாயும் கண்ணுற்றிருப்பதாக அது நம்பிக்கை கொள்ளும். அதற்கமைய பிள்ளை வினவும் வினாக்களுக்கு தாயினால் விடையளிக்க முடியாமல் போகுமிடத்து மன உளைச்சலுக்கு ஆளாகும்.

இதனால் தனக்கு முன்னோக்கி நிற்கும்போது உமது வலதுகை பிள்ளையின் வலது கைப்பக்கமாக அமையாது என்பதை விளங்கும் ஆற்றலில்லை. மேசையில் சாப்பிடும்போது தனது இரு புறமும் தன்னுடன் உணவருந்துபவர்கள் பிழையான கையினால் உணவருந்துவதாக நினைக்கும். பிள்ளையின் மொழியிலும் தன் நடுவத்தைக் காண முடியும். அயலவர்கள் செவி தாழ்த்தா நிலையிலும் பிள்ளை தொடர்ந்து பேசிக் கொண்டிருப்பது இதன் காரணமாகவே நிகழ்கின்றது. பிள்ளை தனித்திருக்கும் போதும், குழுவாயிருக்கும் போதும் இதனைக் காண முடியும். ஆளிடைத் தொடர்பாடல் தகுந்த முறையில் நிகழாதிருப்பினும், ஏனையோர் செவி தாழ்த்தாவிடினும், இப்பருவப் பிள்ளைகள் தொடர்ச்சியாக கதைத்துக் கொண்டிருப்பது இத் "தன் நடுவம்" காரணமாக நிகழும். மொழி மேம்பாட்டில் தன் நடுவப் பேச்சு (monologue) தன் நடுவப் பேச்சுக்களின் தொல்பு (Collection of monologue) என்பன இப்பருவத்தில் நிகழும்.

எனினும் அண்மைக்கால ஆய்வுகளில், தன்நடுவ நிலையை காண்பிக்காத இப்பருவத்திற்குரிய பிள்ளைகள் இருப்பதும் கண்டறியப்பட்டுள்ளது. இரண்டு வயதுடைய (2) பிள்ளைகள் கதைப்பதை விட நான்கு (4) வயதில் பிள்ளைகள் தன் நடுவ நிலையிலிருந்து விடுபட்டு கதைக்கும், கருமமாற்றும் சந்தர்ப்பங்கள் முன் பள்ளிகளில் காணக் கிடைத்ததாக பிற்கால ஆய்வுகள் தெரிவிக்கின்றன.

இதன்படி, ஒரு வகைப்பட்ட நுண்மதி சார் மாற்றம் நிகழும் ஒரு பருவமாக, முன் இயக்குகைப் பருவம் குறிப்பிடப்படுகிறது. இப்பருவத்தை முன் எண்ணக்கருப் பருவம் (Pre conceptual stage) (2-4 வயது வரை), உள்ளுணர்வுப் பருவம் (Intuitive stage) உய்த்துணரும் பருவம் (4-7 வயது வரை) என இரு உபபிரிவுகளாக பிரித்து ஆராய முடியும். ஒரே சோதனையை முன் இயக்குகைப் பருவப் பிள்ளைகள் பலருடன் பரீட்சித்துப் பார்க்கும்போது அவ் அவ் எண்ணக்கருக்கள் படிமுறையாக வயதுடன் விருத்தி பெறும் விதமும், எண்ணக்கரு அடைவு ஏற்படும் விதம் என்பவற்றை தெளிவாக்கிக் கொள்ள முடியும். காப்பு எண்ணக்கரு உருவாகும் அண்ணளவான பருவங்கள் மூன்று இருப்பதாக பியாஜே குறிப்பிடுகிறார்.

(1) 4-6 வயது வரை:

காப்பு எனும் எண்ணக்கரு எங்கும் காணக் கிடைக்காது. இப்பருவப் பிள்ளைகள் பெறுமானம் வேறுபடுவதாக அடிக்கடி கூறும். எனினும் நிலையான உணர்வு காணப்படாது.

(2) 6-7 வயது வரையான மாற்றமுறும் காலம் காப்பு எண்ணக்கரு சிறிது சிறிதாக வளரும்.

(3) 7-8 வயது வரை- காப்பு எண்ணக்கரு பற்றிய போதிய தெளிவுண்டு.

இவ்வாறு முன் இயக்குகைப் பருவம், உளரீதியாக சில செயற்பாடுகளை மேற்கொள்ள ஆற்றல் கிடைக்கும் மாற்றத்திற்கான பருவமாகும். இப்பருவத்தில் நுண்மதி விருத்திச் செயன்முறையில் முதிர்வு பிரதான காரணியாகும். நரம்புத் தொகுதியும், மூளைக் கலங்களும் முறையாக விருத்தியடைவதுடன் வலிமை பெறும். பல்வேறுபட்ட தொழிற்பாடுகள், மாதிரிகை பின்பற்றல் மற்றும் பொருள், உபகரணப் பாவனையுடனான விளையாட்டுக்களில் ஈடுபடுவதன் மூலம் நுண்ணறிவு விருத்திச் செயன்முறை மிகவும் மேம்பாடடையும். மொழி ஆற்றல் விருத்தி பெறுவதுடன் நுண்ணறிவு வளர்ச்சியில் கடுமையான மேம்பாடு நிகழும். பெற்றோருடன் கதைத்துப் பேசுதல், சகபாடிகளுடன் கதைத்துப் பேசுதல் மொழி விருத்திக்கும் அதன் மூலம் நுண்ணறிவு விருத்திக்கும் உபகாரம் புரியும் காரணிகளாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முன்பள்ளிகளிலும், ஆரம்ப நிலைப் பாடசாலைகளிலும் முன் இயக்குகைப் பருவ மாணவர்களுடன் நடவடிக்கைகளில் ஈடுபட உமக்கு சந்தர்ப்பம் ஏற்படும். அப்பிள்ளைகளின் நுண்ணறிவு வளர்ச்சி மட்டத்தை விளங்கி, அதற்கமைய கற்பித்தல் முறைகள், பயன்படுத்தும் உபகரணங்கள் என்பவற்றை பொருத்தப்பாடுடையதாக தெரிவு செய்து கொள்ளல் வேண்டும். இப்பருவத்தில் கற்றல் செயன்முறை விஷேட பயிற்சி பெற்ற, பிள்ளை மனதின் தொழிற்பாட்டை நன்குணர்ந்த, கருணைமிகு, சுறுசுறுப்பான இயக்கப்பாடுடைய, தாய் போன்றதொரு ஆசிரியையின் தலைமையில் நிகழுமாயின் சாலச் சிறந்தது.

தொடரும்........

# பாடசாலைகளில் பிள்ளைகளை சேர்த்தல்

## தரம் 1 க்கான அனுமதி

*அனுமதி வருடம் ஜனவரி 31 ஆந் திகதி ஐந்து வயதை பூர்த்தி செய்யும் பிள்ளை தரம் 1இல் அனுமதிக்கப்பட வேண்டும்.*

*முதலாம் தரத்துக்கான அனுமதியில் பெற்றோரின் இருப்பிடத்திலிருந்து பாடசாலைக்கான தூரம் முதன்மை விடயமாக கருத வேண்டும்.*

*மேற்படி அடிப்படையில் ஒரு வகுப்பில் அதிக பட்சமாக 35 மாணவர்கள் அனுமதிக்கப்படவேண்டும்.*

*முதலாம் தரத்துக்கு அனுமதிக்கும் தேவைக்காக பிள்ளைகள் எவ்வித சோதனை அல்லது மதிப்பீட்டுக்கு உட்படுத்தக்கூடாது.*

*பாடசாலைகளுக்கு பிள்ளைகளை அனுமதித்தல் தேசிய அளவில் விவாதிக்கப்பட வேண்டியதொரு எழுவினாவாகக் காணப்படுகிறது. பிரபல பாடசாலைகள் எனக்கருதப்படும் பாடசாலைகளில் தமது பிள்ளைகளை அனுமதிப்பதற்காக பெற்றோர்கள் பலர் தம்மாலான சகல உபாயங்களையும் மேற்கொள்வது ஒரு பிரச்சினையாக உள்ளது. தற்போது நடைமுறையிலுள்ள அனுமதித்திட்டத்தின்படி பெற்றோரினது வதிவிடம் பெரும் பங்கு வகிப்பதால் தமது வதிவிடத்தை உறுதிப்படுத்த வஞ்சகமான முறைகளைப் பயன்படுத்த முயற்சிக்கின்றனர். பிள்ளைகள் இப்பாடசாலைகளுக்கு அருகில் இருப்பதாகப் பொய்கூற பயிற்றப்படுவதுடன் சில சொத்துக்கள் மிக அதிகமான விலைகளுக்கு கைமாற்றப்படுகின்றன. இவற்றில்சில போலியான கைமாறல்களாகவுள்ளன.*

*இத்தகைய போட்டிச்சம்பவங்களின் பின்னரும் பெரும்பாலான பெற்றோர்கள் தமது விருப்புக்குரிய பாடசாலைகளில் பிள்ளைகளை சேர்க்க தவறிவிடுகின்றனர். இத்தகைய செல்வாக்கின் காரணமாக வகுப்புக்களில் உள்ள மாணவர்கள் தொகை கட்டுப்படுத்த முடியாத அளவுக்கு அதிகரித்துள்ளதுடன் சில வகுப்புக்களில் 50 இலும் கூடுதலாகவுள்ளது. பெரிய வகுப்புக்களில் செயற்பாடு சார்ந்த மாணவமையக் கலைத்திட்டங்களை செயற்படுத்துவது சாத்தியமானதல்ல. மாணவர் தெரிவிற்காக இம்மட்டத்தில் எத்தகைய கணிப்பீட்டு நியதிகளையும் கொண்டிருப்பது விரும்பத்தக்கதன்று. உயர்வகுப்புக்களில் கணிப்பீட்டின் ஊடாக காணப்படும் உயர் புள்ளியை மாணவர் தெரிவிற்காகப் பயன்படுத்தலாம்.*

*இப்பிரச்சினையைப் பற்றிக் கருத்துக்கள் வழங்கப் பல ஆணைக்குழுக்கள் நியமிக்கப்பட்டு அவை பல்வேறு பரிந்துரைகளையும் முன்வைத்துள்ளன. இவற்றுள் சில பிரபல பாடசாலைகள் ஆரம்பப் பிரிவுகளை மூடுமாறும் எழுமாற்று மாதிரி தெரிவுச் செயன்முறையை பின்பற்றுமாறும் விதந்துரைத்துள்ளன. எனினும் இச்சகல நகர்வுகளையும் மிகுந்த செல்வாக்குள்ள பழைய மாணவர்கள் சீர்குலைத்து விடுகின்றனர்.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உள்ளடக்கல் கல்வி

## பின்தங்கியோருக்கான கல்வியும் வள ஏற்பாடும்

உள்ளடக்கல் கல்வி என்ற எண்ணக்கருவானது சகல பிள்ளைகளையும் பிரதான பாடசாலை நீரோட்டத்தினுள் கொண்டுவருவதைக் குறிக்கும். இதன் அண்மைக்கால உந்துதல் என்னவெனில் இது விசேட கல்வித்தேவைகளிலும் பார்க்க பரந்ததாக உள்ளது என்பதாகும். உள்ளடக்கல் என்பது பாடசாலைகளில் பங்குபெறுவதற்கான சிறுவரது உரிமை பற்றியதாகும். மாணவரது இயலளவு, பால்நிலை, மொழி, அந்தஸ்து, குடும்ப வருமானம், அங்கவீனம், நிறம், மதம் அல்லது இனம் போன்ற எக்காரணம் கொண்டும் பாடசாலையிலிருந்து பிள்ளைகளை ஒதுக்கிவைப்பதனை இது நிராகரிக்கின்றது. உள்ளடக்கல் கல்வியானது, சமவாய்ப்பு என்ற அடிப்படையில் ஒவ்வொரு பிள்ளையும் கல்வியில் பங்குபற்றுவதற்கான உரிமையினையும் சகல மாணவர்களும் கற்கவும் கல்வியிலிருந்து நன்மை பெறவும் உறுதிசெய்கின்றது.

ஆகவே உள்ளடக்கல் கல்வி எண்ணக்கரு, சாதாரண பாடசாலைகளில் குறைபாடுடைய பிள்ளைகளை உள்வாங்குவதுடன் தொடர்புபட்ட போதிலும், பரந்த நோக்கில் கல்வியுரிமை மறுக்கப்பட்டவர்களும் கல்வியின் பிரதான நீரோட்டத்திலிருந்து ஒதுக்கப்படும் ஆபத்தில் உள்ளோருக்கும் வழிகாட்டலை வழங்குகிறது.

சிறந்த பல நலனோம்பல்களுடன் இலவசக் கல்வி அளிக்கப்பட்ட போதிலும் தற்போது பலவீனமான குழுக்கள் இடம்பெறுவதில் எல்லோருக்கும் கட்டாயக் கல்வி என்ற இலக்கு அடிப்படையில் உள்ளது. இத்தகையோர் பின்வரும் பிரிவுகளுள் அடங்குவர்.

1. பொருளாதாரரீதியாக பின்தங்கிய சிறுவர்கள்
2. உடற்குறைபாடுடைய சிறுவர்கள்
3. இடம்பெயர்ந்த சிறுவர்கள்
4. பெருந்தோட்டத் துறையில் உள்ள சிறுவர்கள்
5. தெருவோரச் சிறுவர்கள்
6. நிறுவன பராமரிப்பிலுள்ள சிறுவர்கள்

இலங்கையில் வறுமைத்தன்மையானது ஒப்பீட்டளவில் உயர்வாக உள்ளது. தற்போது நாடளாவிய ரீதியில் 50% க்கும் அதிகமானோர் தேசிய வறுமைக் கோட்டிற்கு கீழ் உள்ளனர். பாடசாலைகளில் காணப்படும் குறைவான சேர்வுக்கும் வறுமை பிரதான காரணமாக அமைகின்றது. அத்துடன், பெருந்தோட்டங்கள், பின்தங்கிய கிராமிய பகுதிகளில் காணப்படும் பொருளாதார ரீதியாக நலிவடைந்தோர், ஏழ்மை குடும்பங்களில் இருந்து வரும் பிள்ளைகள் 9 வருட பாடசாலைக் கல்வியை நிறைவு செய்வதற்கும் தடையாக உள்ளது. அடைவுக் குறைவு, பின்தங்கிய சமுதாயங்களிலுள்ள பிள்ளைகளின் இடைவிலகல் என்பன அவர்களைப் பிற்காலங்களில் வளர்ந்தோர் என்ற வகையில் கௌரவமான மற்றும் நிலையான தொழில்களைப் பெறுவதனின்றும் தடுப்பதுடன் வறுமை என்னும் நச்சுவட்டத்தில் வைத்துள்ளது.

பார்வைக் குறைபாடு, கேட்டல் குறைபாடு, உடற்குறைபாடு மற்றும் மந்த புத்தியுள்ள சிறுவர்கள், பேச முடியாதோர், நடத்தைப் பிரச்சினைகளைக் கொண்டவர்கள், நீண்டகால நோயால் பீடிக்கப்பட்டவர்கள், ஒட்டிசம் (autism) மற்றும் பலவித குறைபாடுகளைக் கொண்ட சிறுவர்கள் ஆற்றல் குறைபாடுடையோராகக் கருதப்படுகின்றனர்.

பாடசாலைகளிலும் பாடசாலைக்கு வெளியிலும் உள்ள இத்தகையோரது எண்ணிக்கை தொடர்பாக பல்வேறு மூலங்களால் முன்வைக்கப்படும் தரவுகளிலுள்ள வேறுபாடுகள் சந்தேகங்களுக்கு இடமாக உள்ளன. ஆற்றல் குறைபாடுடைய பிள்ளைகளுக்கு கற்பிக்கவென பல்வேறு உபாயங்களை இலங்கை மேற்கொண்டு வருகிறது. அவை வதிவிட, நாட் பாடசாலைகளுடன் ஒன்றிணைத்தல் மற்றும் உள்ளடக்கல் கல்வி போன்றவற்றைக் குறிக்கும். பாடசாலை செல்லும் வயதிலுள்ளோரில் ஏறக்குறைய 21% விசேட கல்வித் தேவையுடையோராக மதிப்பிடப்பட்டுள்ளனர். கட்டாயக் கல்வி வயதிலுள்ள இத்தகைய சகல பிள்ளைகளுக்கும் 2015 அளவில் கல்வியை வழங்குவதற்கான ஆலோசனை முன்வைக்கப்பட்டுள்ளது.

சாதாரண மற்றும் அவசர நிலைமைகளின் கீழ், பிள்ளைகள் இடம் பெயர்கின்றனர் இத்தகைய நிலைமைகள் நாட்டில் சர்வசாதாரணமான நிகழ்வாகிவிட்டது. இயற்கை அனர்த்தங்கள், மற்றும் மனிதனால் உருவாக்கப்படும் இடர்களான அபிவிருத்திச் செயற்றிட்டங்கள், யுத்தங்கள், ஆயுதப் பிணக்குகள், துணைப் பாடசாலைகளால் ஏற்படும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



அச்சுறுத்தல் என்பவற்றினால் தமது சொந்த இடங்கள், வீடுகளில் இருந்து இடம்பெயர்கின்றனர். பாடசாலைகள் மூடப்படுதல், தூரம் மற்றும் கஷ்ரமான தரைத்தோற்றம் போன்ற காரணங்களால் பிள்ளைகளின் கல்விரீதியான இடப்பெயர்வு ஏற்படலாம். காரணம் எதுவானாலும் அநேகமானவர்கள் இடம்பெயர்தலின் விளைவாக சிறுவர்களின் கல்வி முற்றாகவோ, பகுதியாகவோ பாதிப்புக்குள்ளாகிறது.

பெருந்தோட்ட சமுதாயம் பின்தங்கியதொரு பிரிவாகக் கருதப்பட்டாலும், எழுத்தறிவு வீதம், பாடசாலைச் சேர்வு வீதம், கட்டாயக் கல்வி வட்டத்தில் பெண்பிள்ளைகளின் பங்குபற்றுகை, பெருந்தோட்ட இளைஞர்கள், யுவதிகள் ஆசிரியராக நியமனம் பெறுதல் ஆசிரியர் கல்லூரி, கல்வியியல் கல்லூரி உருவாக்கம் போன்றவை காரணமாக இச்சமுதாயத்தில் கல்வி தொடர்பாக அண்மைக் காலங்களில் சில முன்னேற்றம் அவதானிக்கப்பட்டுள்ளது. எனினும், குறைந்த எழுத்தறிவு வீதங்கள், கல்விசார் அடைவுளில் பின்தங்கியுள்ள ஏனைய துறைகளுடன் ஒப்பிடும்போது இலவசக் கல்வியின் நன்மைகள் பெருந்தோட்டத் துறையினரை சென்றடையவில்லை எனலாம். இங்கு மிக அதிகளவில் பாடசாலைக்குச் செல்லாமை, உயர்வான இடைவிலகல் குறிப்பாக தரம் 9 இற்குப் பின்னர் உயர்வாகக் காணப்படல், மிக அதிகளவில் உயர்கல்வியை புறக்கணிக்கும் தன்மைகள் காணப்படுகின்றன. கடந்த காலங்களில் ஓரளவு ஆசிரிய நியமனம் வழங்கப்பட்ட போதிலும் இத்துறையில் ஆசிரியர்கள், சேவைக்கால ஆசிரிய ஆலோசகர்கள், மற்றும் SLEAS உத்தியோகத்தர்களது பற்றாக்குறை இன்னமும் ஒரு பிரச்சினையாக உள்ளது.

தெருவோரப் பிள்ளைகள் என்னும் தொகுதி இன்று உலகளாவிய ஒரு தோற்றப்பாடாகி உள்ளது. கிராமங்களில் இருந்து தொழில் பெறும் பொருட்டு பிரதான நகரங்களுக்கு வருகின்ற சமூகக் குழுவொன்றாக உள்ள தெருவோரப் பிள்ளைகள் பொருளாதார ரீதியாகவும், ஒழுக்கரீதியாகவும் ஆன்மீகரீதியாகவும் பின்தங்கிய உபகலாசாரமாக உருவெடுத்துள்ளனர். இத்தகைய அநேக சிறுவர்கள் சேரிப்புறங்களில் இருந்து வருவதுடன், தீவிரமாக வறுமை, புறக்கணிப்பு, ஆன்மீக வெறுமை, போஷாக்கின்மை, உடல் நலக்கேடான வாழ்வு நிலைமைகளுடனும் தொற்று நோய்களுடனும் காணப்படுகின்றனர். கல்வி உரிமை உட்பட, சிறுவர் உரிமையில் அநேகமானவை, சில வேளைகளில் அடையாளப்படுத்துவதற்கான அடிப்படை உரிமை மறுக்கப்படடவர்களாவும் பிறப்புச் சான்றிதழ் இன்றியும் காணப்படுகின்றனர். இவர்களுள் அநேகமானவர்களுக்கு தங்குமிடம் இல்லாததன் காரணமாக, தீய சக்திகளிடம் சிக்குவதுடன் இவர்கள் வாழும் சூழலில் தீய சமூக நடத்தைகளுக்கும் உள்ளாகின்றனர்.

நிறுவனங்களின் பொறுப்பில் உள்ள சிறுவர்கள், குடும்பங்களினால் வழங்கப்படும் அன்பு, கருணை, அரவணைப்பு என்பவற்றைப் பெறமுடியாதவர்களாகக் காணப்படுவதுடன், பெற்றோர் பராமரிப்பு, குடும்ப நெருக்கடிகள், சில வேளைகளில் விளையாடுதல், கல்வி, ஓய்வு என்பவற்றிற்கான உரிமை மறுக்கப்பட்ட சமூகமாக விளங்குகின்றனர். மாறாக சிலவேளைகளில் பராமரிப்பாளர்கள் கொடுமையானவர்களாக காணப்படும் போது, இத்தகைய சிறார்கள் துஷ்பிரயோகத்திற்கு உட்படுவதுடன் கடுமையாகவும் நடாத்தப்படுகின்றனர். சிறுவர் நன்னடத்தை மற்றும் பராமரிப்பு சேவைகள் திணைக்களம், பாதுகாக்க வேண்டிய திருத்தப்படவேண்டிய இருவகையான சிறார்களை இனங்கண்டுள்ளது. நிறுவனங்களில் பராமரிக்கப்படும் சிறுவர்கள் அநாதை, துணையற்ற, கைவிடப்பட்ட சிறார்களாக உள்ளனர். சிலர் ஊனமுற்றவர்களாகவும் அனர்த்தங்களின் போது கைவிடப்பட்டவர்களாகவோ பாதிக்கப்பட்டவர்களாகவோ உள்ளனர். இவர்களுள் அநேகமானோர், அபாயகரமான அல்லது துயரமான நிலைமைகளைக் கடந்தவர்களாவார். இவர்கள் சமூகமயமாக்கலுக்கு உள்ளாவதற்கும் திறமையானவர்களாக மாறுவதற்கும் விசேட கவனிப்பும், பராமரிப்பும், வழிகாட்டலும் அவசியமாகும்.

#### பொருளாதார ரீதியாகப் பின்தங்கிய பிள்ளைகள்

1. வறுமைக் குழுக்களிலுள்ள பெற்றோர்களது குறைந்த பொருளாதார வளமற்ற தன்மை அவர்களது பிள்ளைகளைப் பாடசாலைகளில் சேர்ப்பதைத் தடுப்பதுடன் வருமானம் பெறுவதற்காகப் பிள்ளை களைத் தொழிலில் ஈடுபடுத்தல், பிச்சையெடுத்தல், பாலியல் என்பவற்றில் ஈடுபடுத்துகிறது.
2. பின்தங்கிய பாடசாலைகளின் அமைவிடங்களில் காணப்படும் மக்களில் அநேகர் வறியவராக



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உள்ளதுடன் அடிப்படை வசதிகள் கூட இல்லாமல் பாதிப்புக்கு உட்பட்டுள்ளனர்.

3. வறிய சிறுவர்கள் படிக்கும் அநேகமான பின்தங்கிய பாடசாலைகளில் ஆசிரியர் பற்றாக்குறை நிலவுகிறது.


4. தேவையானவர்களுக்கும் வறியவர்களுக்கும் சேவையாற்றுதலை மதிக்கும் சேவை மனப்பாங்கு ஆசிரியர் மத்தியில் குறைவு

**வள ஏற்பாடுகள்**

1. வறுமைக்கோட்டுக்குக் கீழே உள்ள பெற்றோர்களின் பிள்ளைகள் அனைவரும் ஆரம்பக் கல்வியின் தொடக்கத்திலிருந்தே பங்குபற்றக் கூடிய வகையில் அவர்களுக்கு வறியோர் மானியம் வழங்கப்பட வேண்டும்.
2. பெரும்பாலும் வறிய பிள்ளைகள் கற்கின்ற சகல பின்தங்கிய மற்றும் கவனிக்கப்படாத பாடசாலைகள் யாவும் முன்னுரிமை அடிப்படையில் போதிய வளங்கள் வழங்கப்பட்டு மேம்படுத்தப்பட வேண்டும்.
3. ஊக்குவிப்பு அல்லது சேவை நிபந்தனை என்ற அடிப்படையில் ஆசிரியர்கள் குறிப்பிட்ட காலம் பின்தங்கிய பாடசாலைகளில் பணிபுரியக் கூடிய வகையில் ஆசிரியர் இடமாற்றத்திட்டம் நியாயமும் நீதியும் நிறைந்த வகையில் அமுலாககப்பட வேண்டும்.
4. தேவையானவர்களுக்கு தொழில்சார் சேவையை வழங்குவதற்கு சார்பான மனப்பாங்கினை ஆசிரியர்கள் விருத்தி செய்து கொள்ள வேண்டும் என சகல ஆசிரியர் கல்வி நிகழ்ச்சித் திட்டங்களும் அழுத்தியுரைக்க வேண்டும்.

**வலது குறைந்த பிள்ளைகள்**

1. விசேட கல்விக் கொள்கைகள், நிகழ்ச்சித் திட்டங்களை எதிர்மாறாகப் பாதிக்கும் பிரதான காரணியாக சரியான தகவல்கள் இன்மை உள்ளது.
2. உள்ளடக்கல் கல்வியானது ஆற்றல் குறை பாடுடையவர்களை கோட்பாட்டு ரீதியாக ஒன்றிணைப்பதிலிருந்தும் வேறுபடுகிறது. இன்று பிள்ளை பாடசாலையில் பங்குபற்றுவதற்கான சிறுவர் உரிமையாகவும் தனிமைப்படுத்தல் அல்லது தவிர்த்தலை மறுத்து அவர்களை ஏற்றுக்கொள்வதும் பாடசாலையின் கடமையாகவும் உள்ளது.



7. முறைசார் பாடசாலைகளில் 2% ஆன பிள்ளைகள் சேர்க்கப்படுவதில்லை. எல்லோருக்கும் கல்வி எனும் இலக்கினை அடைந்து கொள்ளும் வகையில் இவர்களை உள்ளடக்குவது அவசியமாக இருந்தபோதிலும் கடுமையான ஆற்றல் குறைபாடுகள், பின்தங்கிய பகுதிகளில் வசித்தல் காரணமாக இது நடைபெறவதில்லை.

8. கடுமையான ஆற்றல் குறைபாடுடையவர்களைச் சேர்ப்பதை உறுதிசெய்யும் நிறுவன முறையொன்று இல்லாமையின் காரணமாக விசேட கல்வியைப் பெறும் மட்டம் திருப்திகரமானதாக அமைய வில்லை

**வள ஏற்பாடுகள்**

1. விசேட கல்வி பற்றிய துல்லியமான தரவு, தகவல் தளம் விருத்தி செய்யப்படவேண்டும். அத்துடன் விசேட தேவைகள் உள்ள பிள்ளைகளை இனங்காணக் கூடியதாக ஆய்வுகள் கிரமமாக நடத்தப்பட வேண்டும்.

2. வலதுகுறைந்த பிள்ளைகளை சேர்த்துக் கொள்வதற்கு தெரிவுசெய்யப்பட்ட பாடசாலைகளின் பௌதீக அமைப்பு அவர்களது நகர்வுகளுக்கு ஏற்றவிதத்தில் மேம்படுத்தப்படவேண்டும். அத்துடன் அப்பாட சாலைகளில் உளச்சமூகச் சூழலும் பொருத்தமாக விருத்திசெய்யப்படவேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

3. விசேட கல்வி தொடர்பான போதுமான ஆசிரியர்கள் தொழில் ரீதியாக உருவாக்கப்பட வேண்டும். அத்துடன் சகல ஆசிரியர் கல்வி நிகழ்ச்சித் திட்டங்களிலும் விசேட கல்வி ஒரு கூறாக சேர்த்துக் கொள்ளப்படவேண்டும்.

4. சாதாரண வகுப்பறை கற்றல்-கற்பித்தல் சூழலில் ஒன்றிணைக்கப்படமுடியாத வலது குறைந்த பிள்ளைகளுக்கு தேவைப்படும் விசேட கல்வி ஆசிரியர்களின் எண்ணிக்கையை தேசிய ரீதியில் மதிப்பீடு செய்ய கல்வி அமைச்சு திட்டமிடல் அலகு நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும்.



5. தங்குமிட வசதி கொண்ட பாடசாலைகளில் கூடிய வரையில் வலதுகுறைந்த பிள்ளைகளுக்கு இடவசதி வழங்கப்படவேண்டும். ஒரு கோட்டத்தில் ஒரு பாடசாலையேனும் இவ்வாறான பிள்ளைகளுக்கு வதிவிட வசதிகள் கொண்டதாக விருத்திசெய்யப்பட வேண்டும்.

6. பாடசாலை முறைமையிலும் ஏனைய விசேட நிறுவனங்களிலும் வலது குறைந்த பிள்ளைகளுக்கு இருக்கக் கூடிய கல்வி வளங்கள் பற்றி இத்தகைய பிள்ளைகளின் பெற்றார்கள் அறிந்திருப்பதை பாடசாலை வரவு கமிட்டி உறுதிப்படுத்திக் கொள்ள வேண்டும்.

### இடம்பெயர்ந்த பிள்ளைகள்

1. இயற்கையான, மற்றும் மனிதனால் உருவாக்கப்படும் அனர்த்தங்களின் போது குறிப்பாகப் பெரும் எண்ணிக்கையானோர் பாதிப்புறும் வேளைகளில் சிறுவர்களது கல்வி தொடர்பான நிலைமைகளுக்கு துலங்கக் கூடியதாக அதிகாரவமைப்புக்களின் சட்ட ஏற்பாடுகள், கொள்கைகள் காணப்படவில்லை.

2. இடம்பெயர்ந்த நிலைமைகளில் உள்ள சிறுவர்களுக்காக விருத்திசெய்யப்பட்ட நிகழ்ச்சித்திட்டங்களை அமுலாக்கும் ஊழியர்களுக்கு வழிகாட்டல் வழங்குவதற்கு தேர்ச்சிபெற்ற வாண்மையாளர்கள் இல்லை.

### வள ஏற்பாடுகள்

1. கல்வியின் தொடர்ச்சியில் ஏற்படக் கூடிய இடைவெளியைத் தவிர்க்கக் கூடியதாக பேரழிவு நிலைமைகளுக்கு பலியான பிள்ளைகள் தமது கல்வியைத் தொடர்வதற்கு வழிவகுக்கும் நிகழ்ச்சித் திட்டங்கள் உருவாக்கப்படவேண்டும்.

2. இடம்பெயர்ந்த பிள்ளைகளின் கல்விசார் நிகழ்ச்சித்திட்டங்களை வடிவமைத்து நடைமுறைப் படுத்தக் கூடியதாக பேரழிவு சூழ்நிலைகளில் நிகழ்ச்சித்திட்டங்களை நடத்தும் ஆளணியினரை வழிகாட்டக் கூடியதாக தொழில் தேர்ச்சி கொண்ட நிபுணர்கள் குழாம் விருத்தி செய்யப்பட வேண்டும்.

### பெருந்தோட்டத் துறையில் உள்ள பிள்ளைகள்

1. வறுமை காரணமாகவும், சிறுவர்கள் வசிக்கும் பகுதிகளில் சிறந்த பாடசாலைகள் இல்லாமையினாலும் பாடசாலை செல்வதைத் தவிர்த்தல்

2. பெருந்தோட்டத் துறையில் காணப்படும் உயர்வான இடைவிலகல்

### பெருந்தோட்டத்துறை வளஏற்பாடுகள்

1. சிரேஷ்ட இடைநிலை மட்டத்தில் கூடிய கல்வி வாய்ப்புக்களை வழங்கும் நோக்குடன் பல்வேறு பட்ட பாடநெறிகளைக்கொண்ட பாடசாலைகள் பல உருவாக்கப்படவேண்டும்.

2. விளைதிறன் மிக்க கண்காணிப்பு மற்றும் மேற்பார்வையை உறுதிப்படுத்தக்கூடிய வகையில் வெற்றிடமாக உள்ள மேற்பார்வை மற்றும் நிர்வாக பதவிகளுக்கு தகைமையுள்ள அதிகாரிகள் நியமிக்கப்படவேண்டும்.

3. மேற்பார்வை மற்றும் முகாமைத் திறன்களுள்ள ஆளணியின் பற்றாக்குறை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**தெருவோரப் பிள்ளைகள்**

1. தீர்மானம் மேற்கொள்வதற்கு தெருவோரச் சிறுவர்கள் பற்றிய சரியான தரவு, தகவல்கள் இல்லாமல் இருத்தல்

2. வறுமையான வீட்டுச் சூழலும் குடும்ப நிலைமைகளும் குடும்ப உய்விற்காகச் சிறுவர் களிடமிருந்து வருமானத்தை எதிர்பார்க்கின்றன



**வள ஏற்பாடுகள்**

1. இப்பிரச்சினையின் உண்மை நிலையை கணிப்பிடக் கூடிய தாக தெருவோரப் பிள்ளைகள் பற்றிய தரவுகள் திரட்டப்பட வேண்டும்.

2. வருமானத்தை அதிகரித்தல் உள்ளிட்ட பெற்றார் கல்வி நிகழ்ச்சித்திட்டங்கள் விருத்தி செய்யப்பட்டு அமுல்படுத்தப்படவேண்டும்.

3. பாடசாலை அதிபர்கள் மற்றும் ஆசிரியர்கள் தெருவோரப்பிள்ளைகளின் நிலமைகள் பற்றிய உணர்திறனைப் பெற்றுக் கொள்ளக்கூடியதாக தொழில்சார் அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டங்களில் பொருத்தான கூறுகள் சேர்த்துக்கொள்ளப்பட வேண்டும்.

**நிறுவன பராமரிப்பில் உள்ள பிள்ளைகள்**

1. நிறுவன பராமரிப்பிலுள்ள அனைத்து சிறுவர்களும் அபாயகரமான அல்லது பிரச்சினையான பின்னணியைக் கொண்டவர்களாவர். இவர்களது கல்விசார் அடைவுகள் மிகவும் குறைவாக உள்ளன.

2. சிறுவர் தொண்டுக்காப்பகங்கள் இவர்களுக்கு சிநேக பூர்வ உளச் சமூக பராமரிப்பினையோ கற்றலுக்குச் சாதகமான சூழலொன்றையோ வழங்குவதில்லை.

3. இத்தகைய சிறுவர்கள் தனிமைச்சிக்கலை வெளிப்படுத்துகின்றனர். அநேக அதிபர்களும் ஆசிரியர்களும் இத்தகையவர்கள் தொடர்பாக எதிர்மறையான மனப்பாங்குகளைக் கொண்டுள்ளனர்.

4. இத்தகைய சிறுவர்களுக்குப் பொறுப்பான நன்னடத்தை அதிகாரிகள் ஆரம்பக் கல்விக்கு அப்பாலுள்ள கல்வி தொடர்பாக விருப்பற்ற தன்மையை வெளிக் காட்டுகின்றனர்.

**நிறுவனங்களில் பராமரிக்கப்படும் பிள்ளைகள் (வள ஏற்பாடு)**

1. “பிள்ளைகள் தொண்டர் இல்லங்களுக்கு போதிய பௌதீக வளங்கள் வழங்கப்பட வேண்டும்.”

3. பராமரிப்பாளர்கள் உரிய ஆளுமை மற்றும் தொழில்சார் சோதனைகளின் அடிப்படைகளிலேயே நியமிக்கப்படவேண்டும்

4. தொண்டர் இல்லங்களில் வழிகாட்டல் ஆலோசனை கூறல் மற்றும் பிள்ளைகளைக் கையாளுதல் தொடர்பான திறன்கள் சேவைக்கால செழுமைப்படுத்தல் நிகழ்ச்சித் திட்டங்கள் ஊடாக பராமரிப்பு அதிகாரிகள் (Probation officers) மற்றும் பரமரிப்பாளர்களினால் விருத்தி செய்யப்படவேண்டும்

5. நிறுவனங்களின் பராமரிப்பில் உள்ள பிள்ளைகளின் கல்வி விருத்திக்காக ஏனைய உரித்தாளர்களின் ஒத்துழைப்புடன் கல்வி அமைச்சு மற்றும் சமூக சேவைகள் அமைச்சு ஆகியவற்றின் தலைமையில் ஒரு ஒத்துழைப்பு சட்டகம் விருத்தி செய்யப்பட வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# எழுத்தாளனும் எழுத்தாற்றலும்

**சொ. அமிர்தலிங்கம்**
*ஆளுநரின் செயலாளர்*
*கிழக்கு மாகாணம்*

மக்கள் மனதில் ஊடுருவிப் பதிவதற்காகக் கருத்தை எடுத்தியம்ப, அதற்குக் கருவியாக எழுத்தை ஆள்கின்ற எழுத்தாளனுக்குப் பொறுப்பும், குறிக்கோளும் இன்றியமையாதவையாகும். எழுத்தாளன் என்னும் சொல் பெயர்ச் சொல்லாகும். எழுத்தை ஆள்கின்றவனைக் குறிக்கும் சொல்லாகும். தனது கருத்துக்களை எழுத்தாற்றல் மூலம் உலகுக்குக் கொண்டுவரும் எழுத்தாளன் எழுத்துக்களைச் சரிவர ஆள வேண்டும். இல் வாழ்விற்கு இல்லாண்மை அவசியமோ, நிலத்தை ஆள்வதற்கு, உயிர் வாழ்வதற்கு பயிர்ச்செய்கை எவ்வளவு அவசியமோ எழுத்தை ஆள்பவனுக்கு எழுத்தாற்றல் அவசியமாகும். செய்யக்கூடிய, நிகழக்கூடிய நிகழ்வுகளைச் சரிவர எடுத்தாண்டு நுகர்வோர், வாசகர்கள் பயன்பெற வழி வகுக்கவேண்டும். செய்யமுடியாத காரியத்தைச் செய்ய முயலக்கூடாது. ஊசித்துவாரத்தில் நூலைப் புகுத்த முடியுமேயொழிய கயிற்றை நுழைக்க முடியாது. எடுத்தியம்ப வேண்டிய கருத்தைச் சரிவர எழுத்தாற்றல் மூலம் வாசகர் மட்டத்தில் அவர்கள் பயனடைய வழியேற்படுத்த வேண்டும்.

ஒரு கணக்காளனைக் கூட எழுத்தாளன் எனக் கூறலாம். ஏனெனில் அவன் கணக்கு எழுதுகிறான். எழுத்துக்கள், சொற்கள் என்பனவற்றைப் பயன்படுத்தி எழுகின்றான். எழுதப் பயன்படுத்தும் எழுதுகோல்கள், எழுதப்பட்ட சாதனங்கள் இருக்கத் தான் செய்கின்றன. இப்படியாக இவற்றை ஆளும் எல்லோரும் எழுத்தாற்றல் உடையவர்கள் என்று கூறமுடியாது. பிறர் கவனத்தை ஈர்க்கக்கூடிய கருத்துக்களைச் சரிவரப் பயன்படுத்துபவர்களே எழுத்தாளர்கள். இவர்கள் இன்னொரு விதத்தில் படைப்பாளர்கள் என்று அழைக்கப்படுகின்றார்கள். எழுத்தின் மூலம் தங்கள் கருத்தைப் படைக்கின்றார்கள்.

ஆளத் தெரிந்தால்தான் எண்ணத்தை ஆளலாம். எண்ணத்தை ஆளத்தெரிந்திருந்தால் சொல்லையும் எழுத்தையும் ஆளலாம். எண்ணத்தை ஆளத் தெரியாவிட்டால் எழுத்தை ஆளமுடியாது. புதிய பல உண்மைகளை உயர்ந்தவற்றை மனித சமூகத்திற்குப் பகிர்ந்தளிக்க வேண்டும். மனித வாழ்வு வளர்ந்துகொண்டே செல்கின்றது. இதனால் எண்ணங்கள், செயல்கள் யாவும் வளர்கின்றன. தான் பெற்ற உணர்வை வையகத்திற்கு உணர்த்தும் எழுத்தாளன் வரவேற்கப்படவேண்டியவன்.

எனவே எப்பொழுதும் எழுத்தாளனின் குறிக்கோள் உண்மையைத் தழுவியதாக, அறத்தை, தர்மத்தை நிலைநாட்டி உயர்வை அடைய உதவ வேண்டும். இதற்கு எமக்கு உண்மையைப் பெறுவது. உண்மையைச் சொல்வது முக்கியம். மேலும் உண்மையைப் பேணிப் பாதுகாக்கவும் வேண்டும். துன்பம் கண்டு துடிக்கும் இதயம் எழுத்தாளனுக்கு அவசியம் வேண்டும். துயர் துடைக்கும் மனப்போக்கு இருக்கவேண்டும் வால்மீகி முனிவர் இராமாயணத்தை எழுதும்போது அன்றில் பறவைகள் இரண்டில் ஒன்று மாண்டபோது மற்றதன் துன்பத்தைக் கண்டு உள்ளம் உருகியே எழுதினார். எனவே துன்பம் கண்டு துடித்த வால்மீகி துயர் துடைக்க இராமாயணத்தைப் படைத்தார். துன்பம், துயரம் ஏற்படும்போது எழுத்தாளனும் உணர்ச்சிவசப்பட்டு மக்கள் மத்தியிலே ஈடுபாட்டை ஏற்படுத்துகின்றான்.

இன்று உலகிலே கற்பனை இலக்கியங்களைப் படைப்பவர்கள் எழுத்தாளர்கள் என்ற பெயருடன் சிறப்படையக் காணலாம். சிறுகதை, நாவல், கவிதை, நாடகம் ஆகியவற்றில் கற்பனை, இலக்கியம் மிகுந்து காணப்பட்டு சிறந்த இலக்கியங்களாத் திகழ்கின்றன. இதற்குக் காரணம் அவர்களின் எழுத்தாற்றலாகும். கற்பனையைக் கூட தத்ரூபமாக உயிரோவியமாக எழுத்தாற்றல் மூலம் எடுத்தாள்கின்றான் எழுத்தாளன். இதனால் இவனது எழுத்துக்கள் நுகர்வோர் மத்தியில் பெரு மதிப்புக்கு உள்ளாகின்றன. எழுத்தாளன் தனது எழுத்தாற்றலை வெளிப்படுத்துகின்றான். இதன் மூலம் பலர் போற்றும் பாத்திரதாரியாகின்றான்.

எழுத்தாற்றலுக்குத் தேவையான தகுதிகள் அவனிடம் உண்டு. உலகத்தைக் கூர்ந்து கவனித்துப் பார்க்கக்கூடிய கண்கள், சிறிய உண்மையை ஊடுருவிக் காணும் நோக்கு, எண்ணங்களைத் தேவையாக்கி மனதில் வளர்க்கும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தன்மை என்பன அவனுக்கு ஏற்பட வேண்டும். முன்னர் அகத்திணை, புறத்திணை செய்யுள்கள், சிறு காப்பியங்கள், பெருங்காப்பியங்கள் என்பன தோன்றி வளர்ந்தனபோல இன்று சிறுகதைகள், நாவல்கள், தொடர்கதைகள் என்பன தோன்றி வளர்ந்துள்ளன. முன்னைய சமூகத்திலும் பார்க்க இன்றைய சமூகத்திற்கு மிக்க பயன்தரத்தக்க வகையில் இன்றைய எழுத்தாற்றல் காணப்படுகின்றது. இது எமக்கு கிடைத்த உரைநடை இலக்கியத்தின் வெற்றியாகும். மேலும் இலக்கியத் தன்மையில் எளிமையைக் காணக் கூடியதாகவுள்ளது இலக்கியப் படைப்பானது உண்மையையும், அறத்தையும் உயர்ந்த குறிக்கோளையும் கொண்டு திகழ வேண்டும். ஆனால் இன்றைய பல கதைகள், நாவல்கள், நாடகங்கள் என்பன பொய்யான கற்பனையைக் கொண்டனவாக அமைகின்றன. எனினும் புனைந்துரை இலக்கியத்தைக் கொண்டும் உண்மையையும், அறத்தையும், குறிக்கோளையும் அடையமுடியும். எழுத்தாற்றல் உள்ளவன் எதையும் சாதிக்கலாம். ஊக்கத்தை அடையலாம். கூர்மையற்ற கத்தியை தட்டையாக இருக்கும் சாணக்கல்லில் தீட்டினால் தான் கூர்மை ஏற்படும். எனவே புனைந்துரைகளால் நாவல், கதை, நாடகம் ஆகியவற்றைக் கொண்டுதான் எழுத்தாளன் உண்மையை, அறத்தை ஒளிபெறச் செய்கின்றான்.

எமது எழுத்தாற்றலுக்கு தடைகள் உள்ளன. நாம் எல்லோரும் எதையாவது எழுதிவிட வேண்டுமென ஆசைப்படுவது, பத்திரிகை ஆசிரியர்கள் எல்லோரையும் எல்லாவற்றையும் எழுதிவிடச் செய்யவேண்டம் என ஆசைப்படுவது என்பன எழுத்தாற்றலைத் தடைசெய்கின்றன. நல்லவற்றை எழுதும்போது பாராட்டி மதிக்கும் வாசகர்களின் இலக்கிய தரம் வளர வேண்டும். இன்று தமிழ் பத்திரிகைகள் பலவற்றில் வியாபார நோக்கத்திற்காகப் பிரசுரிக்கும் பழக்கமுள்ளது. ஆனால் தமிழ் பத்திரிகை உலகில் எழுத்தாற்றல், தரம், உண்மை, குறிக்கோள் என்பனவற்றிற்கு முக்கியத்துவம் அளித்து பிரசுரிக்க வேண்டும். உயர் தமிழ் பண்பாட்டினை வளர்க்கவேண்டும். சமூகத்தினை புதிய நல் வழிக்கு மாற்றிச் செல்லும் தன்மையானது வளரவேண்டும்.

சீத்தலைச் சாத்தனார் என்னும் புலவர் பெருமான் தான் படித்த ஏடுகளிலே பிழைகளைக் கண்ட பொழுதெல்லாம் எழுத்தாணியால் தன் தலையில் தானே குத்திக் காயப்படுத்தினார். அடிக்கடி குத்தியதால் அவரது தலையில் சீழ் படிந்திருந்தது. அதனாற்றான் அவரது பெயர் சீத்தலைச் சாத்தினாராயிற்று. இவர் திருக்குறளைப் படித்தபின் தலையிலே இருந்த சீழ் மாறிற்று. எனவே எழுத்தாளர்கள் பிழைகளின்றி சரியாக எழுதவேண்டும். திருக்குறள்போல் என்றும் அழியாத செல்வத்தை அளிக்க முற்படவேண்டும்.

எல்லா இலக்கிய வடிவங்களைப் போலவே கவிதையும் ஒரு எழுத்துப் படைப்பு. ஆனால் மொழியின் அடிப்படையில் பார்க்கும்போது, மற்றவடிவங்களை விட ஆபூர்வமானது. மேலானது. கவிதை மொழியின் உச்சமான வெளிப்பாடு. மொழியின் அத்தனை காரங்களையம் தன்னுள் வாங்கிக்கொண்டு வெளிப்படுத்துகிற ஒரு வடிவமாகும். அனாவசிய வார்த்தைகளுக்கோ அலங்காரங்களுக்கோ கவிதையில் இடமில்லை. சிறுகதை எழுத்தாளர் ஆசிரியரின் இடத்திலிருந்து வாசகர்களுக்குச் சொல்லித்தர முடியும். மற்ற இலக்கிய வடிவங்களிலும் இது சாத்தியமானது. ஆனால் கவிதையில் இது சாத்தியமில்லை. இங்கே வாசகனும் கவிஞனும் ஒரே தரத்தில் இயங்குகின்றனர்.

மகாகவி பாரதியார் "எழுதுகோல் தெய்வம் இந்த எழுத்துத் தெய்வம்" என்று எழுத்தாற்றலுக்கும், எழுத்துக்கும் கடவுளுக்குமுள்ள அவ்வளவு பெருமையை எடுத்தியம்பியுள்ளார். இலக்கியம், இலக்கியத்திற்காக படைக்கபட வேண்டுமேயொழிய வியாபாரத்திற்காக ஆசாபாசங்களுடன் படைக்கப்படக் கூடாது. கதை, நாவல், நாடகம் சிறுகதை, கட்டுரை, கவிதை என்பன நேர்முகமாகவோ, புனைந்துரை மூலமாகவோ சத்தியத்தைக் காப்பாற்ற வேண்டும். இன்பத்தைப் பயக்கவேண்டும். சாதாரண மக்களை வழி நடத்தும் பொறுப்பு எழுத்தாளர்களுக்குண்டு. எனவே எழுத்தாற்றலில் தமிழ்ப் பண்பையும் குறிக்கோளையும் மறந்துவிடாமல் எழுத வேண்டும். எம்மிடம் எழுத்தாற்றலின்றி, எழுத்தை ஆளத் தெரியாதுவிடின் எழுத்தாளன் எனக் கூறிப் பயன் இல்லை. எனவே எழுத்தையும், கருத்தையும் ஆளத் தெரிந்தவர்கள் வாசகர்கள் நுகர்வோரை ஆள முடியும் என்பது உண்மை.

எழுத்தாளனானவன் வாழ்ந்து பார்த்த வாழ்க்கையினையும், செவி வழிச் செய்திகளையும் வெறும் பதிவாக மட்டுமன்றி அதன் உள்ளார்ந்த தரிசனங்களை மக்களுக்கு உணர்த்த வேண்டும். சாதாரண மக்களை வழிநடத்தும் பொறுப்பு எழுத்தாளர்களைச் சார்ந்தது. எதிலும் அறத்தோடுவரும் இன்பத்தை நாம் ஏற்றாக வேண்டும்.

"அறத்தான் வருவதே இன்பம். மற்றெல்லாம்
புறத்தே புகழும் இல"

என்பது வள்ளுவப் பெருந்தகையின் திருக்குறளில் கூறப்பட்டள்ளது. எனவே எழுத்தாளராகிய நாம் எழுத்தாற்றலை, பொறுப்புக் கெட்டுவிடாமல் எழுத வேண்டும். எமது கலைப் பண்புகளால் வாசகர்கள், நுகர்வோர் பயன்பெறும் முறையில் எழுதவேண்டும். எமது தமிழ் வளர, தமிழ் மணம்பரப்ப எழுத்தாற்றல் படைத்த எழுத்தாளர்களே தேவை. எழுத்தாற்றலுள்ள



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எழுத்தாளர்களே இறந்தகால, நிகழ்கால, எதிர்காலத் தமிழின் பாதுகாவலர்கள்.

எழுத்தாற்றலால் மன்னன் ஆட்சியை ஒழித்து மக்கள் ஆட்சியை ஏற்படுத்திய ஒருவரின் வரலாறு பின்வருமாறு:

**பிரான்காய்ஸ் -மாரியி அரோயெட் (வால்டேர்) (1694-1778)**

எழுத்தின்மூலம் புரட்சியை உண்டாக்கி வலிமை பொருந்திய மன்னன் ஆட்சியை ஒழித்து மக்கள் ஆட்சியைத் தோற்றுவித்த பெரியார் வால்டேர். 1791ம் ஆண்டு பிரான்சில் ஏற்பட்ட மக்கள் புரட்சியில் மன்னன் ஆட்சி வீழ்த்தப்பட்டு மக்கள் ஆட்சி ஏற்பட வழியமைத்த எழுத்தாளன் பிரான்காய்ஸ் மாரியி அரோயெட் என்பவரே. இவரது புனை பெயர் தான் வால்டேர். 1694ம் ஆண்டு நவம்பர் 21ந் திகதி பாரிஸ் நகரில் அரோய்ட் என்பவருக்கு மகனாகப் பிறந்தார். ஏழுவயதில் தாயை இழந்து தந்தையால் வளர்க்கப்பட்டார். 17வயதில் தனமனதில் தோன்றியவற்றை எழுத்தில் உருவாக்கினார். மகன் எழுத்தாளனாக வருவதை விரும்பாத தந்தை மகனை சட்ட அலுவலகமொன்றில் பயிற்சிக்கு விட்டார். மகன் அதனை விரும்பாது, ஈடுபாடு கொள்ளாது இருந்தான். தகப்பனின் இம்முயற்சி தோல்வி அடைந்தது. எழுத்தில் ஈடுபட்ட இவர் பத்து ஆண்டுகள் எழுதி பிரான்சின் சிறந்த எழுத்தாளரானார். மக்களின் உரிமைகளை வலியுறுத்திப் பல நூல்கள் எழுதினார். அரசின் அடக்கு முறை, பிரபுக்களின் ஆதிக்கம், மதத் தலைவர்களின் சுரண்டல் போன்றவற்றை எதிர்த்தார். “எதை யார் சொல்னாலும் அப்படியே ஒப்புக்கொள்ளாதே சிந்தித்துப் பார்த்து நீயே முடிவு செய் “ என எழுதினார். அரச தவறுகளையும், தவறான நீதிமன்ற தீர்ப்புக்களையும் கண்டித்தார். அரசு இவரது நூல்களுக்குத் தடைவிதித்தது. பிரான்ஸ் மன்னர் லூயி பரம்பரையும், பிரபுக்களும் இவரை எதிர்த்தனர். ஓராண்டு பாஸ்டீல் சிறையிலும் இட்டனர். சிறையிலிருந்து விடுதலையானதும் உரிமை வேட்கையுடன் உரிமை உணர்வை ஊட்டினார். அநீதியான சட்டங்களுக்கு எதிராக வெகுண்டெழுந்தார்.

ஒருமுறை பிரான்ஸ் நாட்டில் புகழ்பெற்ற நடிகை நோய்வாய்ப்பட்டு இருந்தாள். அருகில் பாதிரியார் ஒருவர் நடிகையிடம் “அவளது தொழில் வெட்கப்படக்கூடிய தொழில்” என ஒப்புக்கொள்ளுமாறு கட்டாயப்படுத்தினார். இதற்கு அவள் இணங்க மறுக்கவே அவளுக்குச் செய்யவேண்டிய இறுதிக் கால மரணச்சடங்கைச் செய்யவில்லை. மதச் சடங்கின்றி அவள் உயிர்நீத்தாள். அவளது பிணத்தை காவலர் குப்பைகொட்டுமிடத்தில் போட்டு சுண்ணாம்புத்தூளைத் தூவினர். இப்படியாக பிணம் கேவலப்படுத்தப்பட்டது இந்த பாதிரியாரின் செயலைக் கண்டித்ததனால் வால்டேர் மீண்டும் சிறையில் அடைக்கப்பட்டார். பின் இங்கிலாந்து சென்று புகழுடன் திகழ்ந்தார். மீண்டும் 1729ம் ஆண்டு பிரான்ஸ் திரும்பினார். தமது எண்ணங்களையும், குறிக்கோளையும் எழுத்தின்மூலம் வெளியிட்டார். நாடகங்கள், கவிதைகள், புதினங்கள், கட்டுரைகள் எழுதினார். இவரது நூல்கள் 99 தொகுதிகள் கொண்டன. பலருக்கு கடிதங்கள் எழுதினார். கடிதங்கள் 8000 எழுதியிருப்பார். இவரது நூல்கள் பிரான்ஸ் அரசினால் எரிக்கப்பட்டன. 1749ல் பிராஷ்ய நாட்டு அரசர் பிரடரிக்கின் அழைப்பை ஏற்று பிரஷ்யா சென்றார். 1755ல் ஜெனிவா சென்றார். பின் 1778ல் பரிஸ் வந்தார். அங்கு அவர் உயிர்பிரிந்தது. இவர் இறந்த 3 ஆண்டுகளின் பின் மாபெரும் புரட்சி பிரான்சில் ஏற்பட்டு வால்டேர் ஏற்றிவைத்த உரிமைச்சுடர் மன்னர், பிரபுக்கள் ஆதிக்கத்தை ஒழித்தது. அரச பரம்பரை அழிந்தது வால்டேரின் எழுத்துக்கள் அடிமைத்தனத்தை எதிர்த்துப் போரிட வழிவகுத்தது, இவரது எழுத்துக்களே. இப்படியாக நாட்டையே கதிகலக்கிய எழுத்தாற்றலை நாமும் சரிவரப் பயன்படுத்தி பயன்பெறவேண்டும்.

**பிரட்ரிக் பாஸி (1822 – 1912)**

பிரான்ஸிலே பிறந்து சட்டக் கல்வியைப் பயின்றார் பாஸி. பின்னர் லிகிதராகவும் நிருபராகவும் எழுத்தாளராகவும் காலத்தைக் கழித்த இவர் பொருளாதார விரிவுரையாளராகக் கடமையாற்றினார். அந்தக் காலத்தில் பிரான்சு, இங்கிலாந்து, துருக்கி ஆகிய மூன்று நாட்டுப் படைகள் ஒன்று சேர்ந்து ரஷ்யாவை தோல்வியுறச் செய்த “கிரிமியன் போர்” அவரது மனதைப் பாதித்தது. போரைத் தவிர்த்தால் மனிதகுலத்திற்கு நன்மை ஏற்படும் என உணர்ந்தார். சமாதானத்திற்காக தனது எழுத்தைப் பிரயோகித்தார். பல கட்டுரைகள் எழுதினார். 1867 ஆம் ஆண்டு சமாதானம் குறித்து தனது கருத்துக்களை ஒரு கடிதமாக பாரிஸ் நகரப் பத்திரிகையில் வெளியிட்டார். சமாதானச் சங்கம் உருவாக்க வேண்டுமென வேண்டினார். இதனால்தான் பிரெஞ்சு சமாதான இயக்கம் ஆரம்பிக்கப்பட்டது. அதன் செயலாளராக பாஸி தேர்ந்தெடுக்கப்பட்டார்.1870இல் பிரான்சு, ஜேர்மன் நாடுகளுக்கிடையே ஏற்பட்ட யுத்தத்தை தவிர்க்க பல கட்டுரைகள் எழுதினார்.இறுதியில் இரு நாடுகளும் இவரை ஒழிக்க முற்பட்டனர். இதனால் ஒழிந்து வாழ்ந்தார். பின்னர் பிரெஞ்சு சட்டமன்ற உறுப்பினரானார். இவரது தீவிரமான முயற்சியினால் அமெரிக்காவுக்கும் பிரான்சுக்கும் இடையில் சமாதான உடன்படிக்கை ஏற்பட்டது. இதற்கு இவரது ஏழுத்தாற்றலும் பேச்சாற்றலும் வழிகோலின. சமாதானத்தை வலியுறுத்தி பத்திரிகையொன்றையும் வெளியிட்டார். 1889இல் பாரிஸில் சமாதான இயக்க சர்வதேச சங்கங்களின் மாநாடு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நடைபெற்றது. பின்பு 1890இல் பாரிஸில் இரண்டாவது கூட்டம் நடைபெற்றது. 1891இல் நிரந்தர சர்வதேச சமாதான தலைமை நிலையத்தை உண்டாக்கினார். பாஸி உழைப்பும் எழுத்தாற்றலும் சமாதானமும் நடுநிலையும் மனிதகுலத்தின் மேன்மைக்கு அவசியம் என உலகுக்கு எடுத்துரைத்தார்.1901ஆம் ஆண்டு 79ஆம் வயதில் முதலாவது நோபல் பரிசு பெற்றார். நாடுகளுகிடையே ஏற்படும் பிரச்சினைகளைத் தீர்க்க சர்வதேச நீதிமன்றம் போன்ற அமைப்புக்களை ஏற்படுத்தி சமாதானத்தில் ஈடுபட்ட பாஸி 90 வயதில் மரணமானார். எழுத்தாற்றலாலே முதன் முதலாக நோர்வேயில் நோபல் பரிசு பெறவழிவகுத்தது எனலாம். முதலாவது நோபல் பரிசு செஞ்சிலுவை சங்கத்தை நிறுவிய சுவிற்சர்லாந்தைச் சேர்ந்த ஜின் ஹென்றிடுனாந்த் என்பவருக்கும் சர்வதேச சமாதான இயக்கத்தை நிறுவிய பிரான்சைச் சேர்ந்த பாஸிக்கும் 1901ல் வழங்கப்பட்டது. இருவருக்கும் நோபல் பரிசுபெற உதவியது எழுத்தாற்றலேயாகும். இப்படியாக உள்ளத்தில் பட்டதை எடுத்துரைப்பதும் உண்மையாகவும் நேர்மையாகவும் நடந்து கொள்வதும் எழுத்தாற்றல் மிக்கவர்களின் உந்துசக்தியாகும்.

**தோமஸ் இஸட்டீன்ஸ் எலியட் (கி.பி.1888-1965)**
**Thomas Stearns Elliot**

இவரின் தந்தையாரின் பெயர் ஹென்றி எலியட். தாயார் பெயர் சார்லி இசுட்டீர்ன்ஸ். 1888இல் இவர்களுக்கு மகனாக அமெரிக்காவில் எலியட் சென்லுயிஸ் என்னும் இடத்தில் அமெரிக்க மிசௌரி மாநிலத்தில் பிறந்தார். இவர் பின்னர் புகழ்பெற்ற ஆங்கில கவிஞராக. நாடக ஆசிரியராக, திறனாய்வாளராக திகழ்ந்தார். இவர் பள்ளிகல்வி முடிந்ததும் ஹவார்ட் பல்கலைக்கழகத்தில் தத்துவமும், சார்போன் பல்கலைக்கழகத்தில் பிரபஞ்சமும், இலக்கியமும் ஒக்ஸ்போட் பல்கலைக்கழகத்தில் கிரேக்க மொழியும் பயின்றார். இவர் பின்னர் இங்கிலாந்தில் குடியேறி ஆசிரியராக இரண்டாண்டுகளும் எழுத்தாளராக ஆறு ஆண்டுகளும் பணியாற்றினார். இவர் எழுத்தாளராகத் கிரைற்றிரியன் (The Retarion) என்னும் இதழின் ஆசிரியராகவும் பேபர் அன்ட்பேபர் (Faber & Faber) என்ற பதிப்பகத்தின் தலைவராகவும் பணியாற்றினார். இவர் பின் விவிலியன் ஏய்வுகட்டை 27ஆம் வயதில் மணமுடித்தார். அவர் நோய்வாய்பட்டு இறக்கவே தமது செயளாலராக இருந்த வலேரி பிளெட்சர் என்பவரை மணமுடித்தார். இவர் சிறந்த எழுத்தாளராக வீறுநடை போட்டார். வாசகர்களைக் கவர்ந்தார்.

இவரது எழுத்துவன்மையும், நாவன்மையும் புகழைத்தந்தன. ஏலியட் இலக்கியத்திற்கான நோபல் பரிசை 1948ஆம் ஆண்டிலும், இங்கிலாந்தின் "ஓடர் ஒப் மெரிட்" (Order of Merit) என்னும் சிறப்புப் பட்டத்தையும் பெற்றார். அவரது எழுத்தாற்றலைப் போற்றிய கொலம்பியா எடின்பர்கு, கேம்பிறிட்ஜ், ஹாவார்ட், யேல், பிரின்சுட்டன் போன்ற பல்கலைக்கழகங்கள் மதிப்பியல் முனைவர் பட்டம் வழங்கிக் கௌரவித்தன. எலியட்டின் கவிதைகள், கவிதை நாடகங்கள், திறனாய்வுக் கட்டுரைகள் புகழ்பெற்றவை. 1965இல் இவர் இவ்வுலகை நீத்தார். எலியட்டின் கவிதைகளுல் The Love Song of Alfred Prufork, Wasteland, The Hallow Men, Ash Wednesaay போன்றன புகழ்பெற்றவை. இவருடைய கவிதைகளின் எழுத்தான்மையில் யாப்பனமதி மொழிநடைத் திண்மையும் பொருட் செறிவும் மிக்கவை இவர் எழுதிய கவிதை நாடகங்களில் அங்கதம். நையாண்டி, இரட்டுற மொழிதல் என்பன காணப்படுகின்றன. The Rock என்னும் கவிதை நாடகம் ஒரு பாறையை மையமாகிக் கொண்டுள்ளது. Murder in the Cathedral என்ற நாடகம் கி.பி. 12ஆம் நூற்றாண்டில் காண்டர்டுபரி ஆலயத்தில் கொலை செய்யப்பட்ட பேராயர் Thomas Becket ஐ மையமாகக் கொண்டது. மேலும் The Family Reunion, The Cocktail Party, The Con dential Clerk, The Elder Statesman போன்றன இவரது சிறந்த கவிதை நாடகங்களாகும். புதிய எழுச்சியையும், சிந்தனைப் போக்கையும் உருவாக்கி எலியட் இருபதாம் நூற்றாண்டின் இலக்கிய உலகின் முன்னோடியாக இன்னும் திகழ்கிறார்.

எதற்கும் எழுத்தாளன் பின்வரும் தகைமைகளாகக் கொண்டிருத்தல் வேண்டும். (i) எது குறித்துதன் கருத்தினை வெளியிட விரும்புகிறானோ அது குறித்து அவன் சரியான பொருளறிவைக் கொண்டிருத்தல் வேண்டும். (ii) பொருளறிவு குறித்த அறிவு அவனிடத்தில் இருக்க வேண்டும். (iii) மற்றோருக்கு எழுத்தின் மூலம் சரியான அறிவைப் புகட்ட வேண்டும். கல்வி வல்லுநர்கள் செயற்படும் எழுத்தறிவை (Functional Literacy) வலியுறுத்துகின்றனர். வாழ்க்கைக்குப் பயன்படக்கூடிய காரியங்களைச் செய்ய உதவுவது செயற்படும் எழுத்தறிவாகும். எழுத்தறிவினால் எண்ணற்ற பயன்கள் தனிமனிதனுக்கும் சமுதாயத்துக்கும் ஏற்படும். ஒரு நாட்டின் முன்னேற்றத்தை அளவிடுவதற்கும் ஏற்படும். ஒரு நாட்டின் முன்னேற்றத்தை அளவிடுவதற்கு எழுத்தறிவு ஒரு அளவுகோளாகும். தம்மையும் தமது சுற்றுப் புறத்தையும் அறிந்து அதற்கு ஏற்ப செயற்பட எழுத்தறிவு இன்றியமையாததாகும். எழுத்தறிவினால் ஏற்படும் அறிவு வளர்ச்சித் திறன்கள் (Cognitive Skills) பொருளாதார முன்னேற்றத்திற்கு அடிப்படையாகும். எனவே எழுத்தின் மூலம் எமது சமூகத்தை நல்வழியில் இட்டுச் செல்லவேண்டும். இன்றைய எழுத்தாளர்கள் சமூக மாற்றத்திற்கான தளத்தில் நின்று எழுத வேண்டியது காலத்தின் தேவையும் கூட.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# கற்பித்தல் முறையியல்கள்

அபூபக்கர் நளீம்
வருகைதரு விரிவுரையாளர், இலங்கை திறந்த பல்கலைக்கழகம்



பண்டைய காலம் முதல் இன்றைய நவீன காலம்வரை பல்வேறு விதமான கற்பித்தல் நுட்பமுறைகள் வளர்ந்து வந்துள்ளன. கற்பித்தலைப் பொறுத்தவரையில் கற்பித்தல் நுட்ப முறைகள் மிகுந்த முக்கியத்துவம் பெறுகின்றன. கற்பித்தல் வெற்றிகரமாக அமைவதற்கு இதன் பங்கு அளப்பரியதாகும்.

பொதுவாக கற்பித்தல் நுட்ப முறைகளை

01. மாணவர் மையக் கற்பித்தல் முறைகள்.
02 ஆசிரியர் மையக் கற்பித்தல் முறைகள்.
03. தேர்ச்சி மையக் கற்பித்தல் முறைகள்.

என்று ஒருவிதத்தில் பிரித்துப் பார்க்கலாம்.இன்றைய காலகட்டத்தில் ஆசிரியர் மையக் கற்பித்தல் முறைமைகள் வலிதற்றதாகி மாணவர்மைய மற்றும் தேர்ச்சிமைய கற்பித்தல் முறைமைகளே அதிக முக்கியத்துவம் பெற்றுள்ளன.

பல கற்பித்தல் முறைகள் காணப்படுகின்றன. அவற்றில் முக்கிய சில முறைமைகளை ஒவ்வொன்றாக நோக்குவோம்.

**விரிவுரை முறை (Lecture method)**

மிகப்பழமை வாய்ந்த ஒரு கற்பித்தல் முறையே விரிவுரை முறைக் கற்பித்தல் முறையாகும்.இது ஒரு வகுப்பறையிலுள்ள மாணவர்கள் அனைவருக்கும் பொதுவாக கற்பிக்கும் முறையாகும்.ஆசிரியர் மைய கற்பித்தல் முறையாகவே இது காணப்படுகிறது.மாணவர்கள் அனைவரும் கேட்டுக்கொண்டிருக்க ஆசிரியர் எல்லா விடயங்களையும் விளக்கிக் கூறும் ஒரு முறையாக இதைக் காணலாம்.இன்றைய காலகட்டத்தில் இம்முறை பாரியளவு கற்பித்தலில் தவிர்க்கப்பட்டாலும் முற்றாக இதனை தவிர்த்து கொள்ள முடியாது.சில சந்தர்ப்பங்களில் இம்முறையின் பாவனையும் அவசியப்படுகிறது.

**கலந்துரையாடல் முறை (Discussion method)**

குறிப்பிட்ட ஒரு விடயம் தொடர்பாக பலரது கருத்துக்களும் அறியப்பட்டு விவாதிக்கப்பட்டு பொதுவான ஒரு தீர்மானத்திற்கு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வரும் முறையே இதுவாகும்.கலந்துரையாடல் முறையில் வினாவை முன்வைத்தல் தர்க்கத்தில் ஈடுபடல் விமர்சனம் செய்தல் நியாயப்படுத்துதல் தீர்மானித்தல் முடிவெடுத்தல் போன்றவை இடம்பெறும்.இம்முறையில் நடைமுறைக்குத் தேவையான தீர்மானங்கள் எடுக்கமுடியும்.

**குழுமுறை (Group method)**

வகுப்பறையிலுள்ள மாணவர்களை பாட உள்ளடக்கத்தின் பொருத்தப்பாட்டிற்கிணங்க பல்வேறு குழுக்களாகப் பிரித்து அவர்களுக்கு செயற்பாடுகளை வழங்குவதனூடாக கற்பிக்கும் முறையே இதுவாகும். ஆசிரியரின் அறிவுறுத்தலுக்கேற்ப குழுக்கள் செயற்பாட்டில் ஈடுபடுவர். அவ்வேளை ஆசிரியர் அதனை அவதானிப்பதுடன் குழுக்களுக்கு உதவுவதிலும் ஈடுபடுவார்.இறுதியாக ஒவ்வொரு குழுவும் தனித்தனியாக செய்து முடித்தவற்றை வகுப்பிலுள்ள அனைவருக்கும் அறியப்படுத்துவதற்காக குழுத்தலைவர்களின் மூலம் உரிய செயற்பாடு முன்வைக்கப்படும்.

**பிரச்சினை தீர்க்கும் முறை (Problem solving method)**

ஏதாவதொரு பிரச்சினையை முன்வைத்து எல்லோரும் இணைந்து அதற்கான தீர்வினைப் பெற முயன்று முடிவு பெறுதலே இம்முறையாகும்.பலரது கருத்துக்களையும் பரிமாறி இறுதியாக ஒரு முடிவுக்கு வரப்படும்.மாணவர்களது சிந்தனைவிருத்தி ஆக்கத்திறன் ஆகியவற்றின் வளர்ச்சிக்கு பிரச்சினை தீர்க்கும் முறை மூலம் பல சந்தர்ப்பங்களை ஏற்படுத்திக் கொடுக்கலாம்.இதன் மூலம் அன்றாட வாழ்வில் ஏற்படும் சில பிரச்சினைகளுக்குக் கூட இலகுவாக தீர்வு பெறக் கூடிய ஆற்றல் மாணவர்களிடம் வளரும்.

**வினவுதல் சிந்தனைக்கிளறல் முறை (Brain storming method)**

ஒரு வினாவை அல்லது ஒரு பிரச்சினையை முன்வைத்து மாணவர்கள் சிந்தனையைத் தூண்டிவிடும் முறையே இதுவாகும்.வினாவிற்கு விடைகள் வழங்கப்பட்டு ஆய்வு மேற்கொள்ளப்பட்டு பொருத்தமான முடிவுகள் இம்முறை மூலம் எடுக்கப்படும்.

**பாத்திரமேற்று நடிக்கும் முறை (Role play method)**

ஒரு நிகழ்வினை அல்லது ஒரு விடயத்தை ஒருவரது அல்லது பலரது நடத்தையை உணர்வுபூர்வமாக முன்வைக்கின்ற ஒரு முறையே இதுவாகும்.அதாவது ஒரு சம்பவத்தை அல்லது ஒருவரின் பாத்திரத்தை அதே போன்று முன்னாயத்தம் எதுவுமின்றி செய்வதன் மூலம் கற்றுக்கொள்ளும் முறையே இதுவாகும்.இதன்மூலம் ஒரு விடயத்தை பல கோணங்களில் நோக்கிப் பார்த்து முடிவெடுக்க முடியும்.

**செய்துகாட்டல் முறை (Demonstration method)**



குறிப்பிட்ட ஒரு விடயத்தை செய்து காட்டுவதன் மூலம் கற்பிக்கும் முறையே இதுவாகும்.எடுத்துக்காட்டாக ஏதாவதொரு கருவியை இயக்கிக் காட்டுவதை அல்லது ஒரு பொருளை தயாரித்துக் காட்டுவதை குறிப்பிடலாம். ஆசிரியர் குறிப்பிட்ட விடயத்தைச் செய்து காட்டும்போது அல்லது செய்துகாட்டிய பின்னர் மாணவர்களும் அதனைச் செய்து பார்க்க வேண்டும்.

**செயற்திட்ட முறை (Project method)**

ஏதாவதொரு செயற்திட்டத்தை வழங்கி அதனை செய்துமுடிக்க மாணவர்களுக்கு வழிகாட்டி அதனூடாக கற்றலை விருத்தி செய்யும் முறையே இதுவாகும்.உதாரணமாக பாடசாலை கட்டிடமொன்றில் இலங்கையிலுள்ள மாகாணங்களைப் பிரித்துக்காட்டும் வகையில் பெரியளவில் இலங்கைப் படமொன்றை வரையும் செயற்திட்டத்தைக் குறிப்பிடலாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**தனியாள் ஆய்வுமுறை விடய ஆய்வுமுறை (Case study method)**

ஏதாவதொரு நிகழ்வை அல்லது சந்தர்ப்பத்தை அல்லது பிரச்சினையை முன்வைத்து அதனை ஆழமாக விசாரணைக்குட்படுத்தும் முறையே இதுவாகும்.தனியாக அல்லது குழுவாக இதில் ஈடுபடலாம்.இதன்போது குறிப்பிட்ட நிகழ்வு அல்லது பிரச்சினையோடு தொடர்புபட்ட பல்வேறு தகவல்கள் ஒன்றுதிரட்டப்பட்டு பரந்தளவில் ஆய்வு மேற்கொள்ளப்படும்.

**கள ஆய்வுமுறை (Field study method)**

குறிப்பிட்ட இடத்திற்கு நேரடியாகச் சென்று எல்லாவற்றையும் அவதானித்து நேரடியாக தகவல்களைப் பெறுகின்ற ஒரு முறையே இதுவாகும்.உதாரணமாக ஏதாவதொரு தொழிற்சாலை அல்லது ஒரு காரியாலயம் அல்லது ஒரு சம்பவம் இடம்பெற்ற இடத்திற்கு நேரடியாகச் சென்று அதுபற்றிய தகவல்களை திரட்டுவதனூடாக கற்கும் முறையே இதுவாகும்.

**ஒப்படை வழங்கும் முறை (Assignment method)**

குறிப்பிட்ட ஒரு தலைப்பில் தகவல்களைத் திரட்டி அவ்விடயத்தை பல கோணங்களில் அணுகி அதனை தொகுப்பாக்கி வழங்க மாணவர்களை வழிப்படுத்தும் முறையே இதுவாகும்.ஒப்படைகளை மாணவர்களுக்கு தனித்தனியாகவும் வழங்கலாம்.குழுவாகவும் வழங்கலாம்.

**கண்டுபிடித்தல் முறை (Discovery method)**

மாணவர்கள் ஏதாவதொரு விடயத்தை தானாக கண்டுபிடிப்பதற்கு வழிகாட்டுவதே கண்டுபிடித்தல் முறையாகும்.இதன்மூலம் மாணவர்கள் புத்தாக்க செயற்பாடுகளில் ஈடுபட ஆர்வம் பெறுவதோடு அவர்களுடைய கண்டறியும் திறனும் வளர்ச்சியடையும்.

**முடிவுரை**

பல்வேறு கற்பித்தல் முறைமைகள் காணப்பட்டபோதிலும் எல்லா முறைமைகளையும் ஒரு பாடத்தில் பயன்படுத்த முடியாமலிருக்கும்.அதேவேளை பாடங்களின் தன்மையையும் வளங்களின் கிடைப்பனவையும் சூழலையும் கருத்திற் கொண்டு பொருத்தமான கற்றல் கற்பித்தல் முறைகளை தெரிவு செய்து கொள்வது ஆசிரியரிலேயே தங்கியுள்ளது.இதற்காக ஆசிரியர் கற்றல் கற்பித்தல் முறைகள் தொடர்பான ஆழமான அறிவினையும் பயிற்சியினையும் பெற்றுக் கொள்வது அவசியமாகும்.

கற்பித்தல் முறைகள் பல காணப்பட்டபோதிலும் பெரும்பாலான ஆசிரியர்கள் மரபுரீதியான ஒருசில கற்பித்தல் முறைகளையே அதிகம் பயன்படுத்துகின்றனர்.இந்நிலையிலிருந்து விடுபட்டு புதிய மாற்றங்களுக்கேற்ற வகையிலும் மாணவர்களின் கற்றலார்வத்தைத் தூண்டக்கூடிய வகையிலும் கற்பித்தல் முறைகளை பொருத்தமாக மாற்றிக் கையாள்வது ஆசிரியரின் வான்மை விருத்தியில் முக்கியமானதொரு அம்சமாகும்.

குறிப்பிட்டதொரு பாடவேளை முழுவதும் ஒரே விதமான கற்பித்தல் முறையினை பயன்படுத்துவது பொருத தமற்றதாகும்.இந்நிலைப்பாடு கற்றல் கற்பித்தலில் சலிப்பை ஏற்படுத்துவதோடு அதன் வினைத்திறனையும் குன்றச் செய்யும் எனவே ஒரு பாடவேளையில் பொருத்தமான வெவ்வேறு கற்பித்தல் முறைகளை மாற்றி மாற்றி பயன்படுத்துவது கற்றல் கற்பித்தலை வெற்றிகரமானதாக மாற்றும்.

**உசாத்துணைகள்**

01. கல்விபீடம்(இ.தி.ப)(2003) "கல்வித்தொழினுட்பம்-தொகுதி-i" இலங்கை திறந்த பல்கலைக்கழகம் நாவல நுகேகொட.

02. கல்விபீடம்(இ.தி.ப)(2003) "கல்வித்தொழினுட்பம்-தொகுதி-iiவிசேட முறைகள்" இலங்கை திறந்த பல்கலைக்கழகம் நாவல நுகேகொட.

03. பாலசுப்ரமணியம்.த (2008) "நவீன கற்றல் கற்பித்தல் முறையியல்கள்" குமரன் புத்தக இல்லம் கொழும்பு.

04. அப்துல் லத்தீப்.எம்.ஐ (2007) "பரிகார வாசிப்பு கற்பித்தல் நுட்பங்கள்" சுதைஸ் அன் பிரதர்ஸ் பாலமுனை.

05. பாலசுப்ரமணியம்.த(2003) "கற்பிக்கும் கலை புதிய பிரவேசங்கள்(வினைத்திறனான ஆசிரியத்திற்கு வழிகாட்டும் நூல்)"யாழ்ப்பாணம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கல்வித்துறை அபிவிருத்தி

## வரலாற்றுச் செல்நெறியும் எதிர்கால நெறிப்படுத்தல்களும்

கடந்த சில தசாப்தங்களில் எடுக்கப்பட்ட முயற்சிகள் திட்டமிடப்பட்ட தலையீடுகள் கல்வி முறைக்குப் புதியனவல்ல என எடுத்துக்காட்டப்பட்டுள்ளது.ஆயினும் சில முயற்சிகள்,விழிப்புணர்வு நிகழ்ச்சித்திட்டங்கள் போதாமை, நியாயமான முறையிலும் நீண்ட கால அடிப்படையிலும் வள ஒதுக்கீடுகளில் கவனம் செலுத்தாமை தொடர்ச்சியான பின்னூட்டலுடன் இணைந்துள்ள கண்காணிப்பு மற்றும் மதிப்பீட்டு நிகழ்ச்சித்திட்டங்களின் நலிவான தன்மை போன்ற காரணிகளால் ஓரளவு வெற்றியை பெற்றுள்ளன. இத்தகைய சூழ்நிலைகள் FSDFP யின் நீடித்து நிலவும் தன்மைக்கு அச்சுறுத்தலைத் தருகின்றன. அவற்றுள் சில அனுபவங்களை இங்கு காணலாம்.

இலங்கையின் கல்வி முறையானது ஆரம்ப மற்றும் இடைநிலைக்கல்வியில் பரவலான வாய்ப்புக்களை வழங்குவதில் கண்ட வெற்றிகளை குறைந்த வருமான _ நாடொன்று உயர்மட்டத்திலான மனித அபிவிருத்தியை அடைவதற்கு வாய்ப்பாக இருந்தன. 1990 களின் தொடக்கம் வரை இலங்கையானது சகல அபிவிருத்தி அடைந்து வரும் நாடுகளின் தலா வருமானம் தொடர்பில் அடிப்படைச் சமூக அபிவிருத்தி விளைவுகளை அனுபவித்தது. தொடர்ந்து வந்த பல தலைமுறைகளில் கல்வி, சுகாதாரம், சமூக சேவைகளில் வளங்களை முதலிடுதல் பற்றிய உபாயங்களுடனான கொள்கைத் தீர்மானங்களின் விளைவாக இத்தகைய அடைவுகள் ஏற்பட்டன. இலங்கையில் கொள்கை வகுப்போர் 1930 -1940 களில் கல்வி முறைமை பற்றிய அடிப்படைச் சட்டகத்தை வரைந்தவர்கள் முக்கியமான பொருளாதாரம் மற்றும் சமூக நன்மைகளை உற்பத்தி செய்வதற்குரிய உள்ளார்ந்த முதலீடாக மனித மூலதனம் அமையுமெனத் தமது காலத்திற்கு முன்பே உணர்ந்து கொண்டனர்.

கலாநிதி C.W.W. கன்னங்கரா அவர்களுடைய தலைமையில் 1945 இல் கல்வி பற்றிய விசேட குழு மேற்கொண்ட தீர்மானத்தை இலவச கல்வி உட்பட அன்றைய அரசாங்கத்தின் கல்விச் சீர்திருத்தத்திற்கான ஆரம்ப முயற்சியாக கருதலாம்.1948 இல் அரசியல் சுதந்திரத்தின் பின்னர் வெளியிடப்பட்ட கல்வி முகாமைத்துவ சீர்திருத்தம் தொகை சார்ந்த விரிவாக்கம் மற்றும் வேறாக்கம் என்பவற்றை கருத்திற் கொண்டிருந்துடன் அவை பாடசாலைகளின் தொகையும் மாணவர் தொகையும் அதிகரிக்கக் காரணமாக இருந்தன. 1961, 1966 இல் கல்வி நிருவாக அதிகாரங்களும், தீர்மானம் மேற்கொள்ளும் அதிகாரமும் மாவட்ட மட்டத்தில் பகிர்வு செய்யப்பட்டமை மாகாண சபைகளை உருவாக்குவதன் மூலம் 1987 இல் அரசியல் யாப்பு அதிகாரங்களை அதிகாரப் பரவலாக்கம் செய்வதற்கு முதற்படியாக அமைந்தது. எனினும், 1960 களிலும் 1970 களிலும் இடம்பெற்ற திட்டமிடல் நடவடிக்கைகள் மத்தியமயப்படுத்தப்பட்டதுடன் பிராந்தியங்களுக்குள் போதாமைகள் மற்றும் மாவட்டங்களுக்குள் சமத்துவமின்மை பற்றிய விமர்சனங்கள் முன்வைக்கப்பட்டன.

1970 களின் இறுதிவரையில் இலங்கையானது கல்வி வசதிகளின் விரிவாக்கமானது பெரும்பாலும் உள்நாட்டு வருமானத்திலேயே தங்கியிருந்தது. 1970 கள், 1980 களின் பின்னருள்ள தசாப்தங்களில் கல்வியிலான முதலீடு மொத்தத் தேசிய உற்பத்தியின் சதவீதமாகக் குறைந்தது. 1984 இல் முகாமைத்துவச் சீர்திருத்தங்கள் அறிமுகம் செய்யப்பட்டதுடன் அதன் முக்கிய கூறாக, கல்வித் திட்டமிடலை உப தேசிய மட்டத்திற்கும் அடிநிலை (grassroot) மட்டத்திற்கும் பரவலாக்கம் செய்தமை ஒரு முக்கியமான கூறாகும். இதுவே கல்வித் தராதரத்தினை மேம்படுத்தும் நோக்குடன் பாடசாலை மட்ட கல்வித் திட்டமிடலின் முதலாவது முக்கியமான பரவலாக்கும் முயற்சியாக அமைந்தது. பொதுமுகாமைத்துவம், மாவட்டம், கோட்டம் மற்றும் பாடசாலை மட்டங்களில் திட்டமிடல் பற்றிய பணிகளையும் தெளிவாக வரையறை செய்தது. பாடசாலையானது ஒழுங்கமைப்புக்கும் திட்டமிடலுக்குமான கூறாகக் கருதப்பட்டது.

**மேற்கூறிய சீர்திருத்தத்தின் நோக்கங்களாவன.**

01. கல்வி வாய்ப்புக்களில் சமத்துவத்தை மேம் படுத்தல்
02. பாடசாலைகளில் அமைப்புரீதியான மற்றும் கலைத்திட்ட மாற்றங்களை நடைமுறைப் படுத்துதல்
03. பாடசாலைச் செயற்பாடுகளில் பெற்றோரின் ஈடுபாட்டினை அதிகரித்தல்
04. அத்தியாவசியமான மாற்றங்களையும் புத்தாக்கங்களையும் வரையறுக்கப்பட்ட வளங்களுடன் முகாமைத்துவம் செய்தல்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாற்றங்கள் நான்கு மாவட்டங்களில் முன்னோடியாக மேற்கொள்ளப்பட்டன. இவ்வாறான முயற்சியின் மூலம் முழுமையான விளைவுகள் கிடைக்கப் பெறுவதற்கு நிறுவனங்கள் அத்தியாவசியமான மனித வளங்கள், தொழில்நுட்ப அறிவு, திறன்கள் மற்றும் நன்கு நிரற்படுத்தப்பட்ட கண்காணிப்பு மற்றும் மேற்பார்வை நிகழ்ச்சித் திட்டங்கள் பற்றித் தெளிவு படுத்தின. 1980களின் பிற்பகுதியில் உருவாக்கப்பட்ட மாகாணக் கல்வித் திணைக்களங்களின் பின்னர், ஒவ்வொரு மாகாணமும் ஒரு திட்டமிடற் பிரிவினைக் கொண்டிருந்ததுடன், மாகாண மட்டத்தில் பெருமளவில் திட்டமிடல் நடைமுறைகளுக்கும் வலுவூட்டியது. இத்தகைய ஒழுங்குமுறையிலும் கூட காணப்பட்ட எழுவினாக்களில் ஒன்று கண்காணிப்பு முறைமை போதாதிருந்தமையாகும். இது பிரதேச ரீதியிலான சமநிலையற்ற தன்மைகளை குறைப்பதனை இலக்காகக் கொண்டிருத்தல் வேண்டும். இதனை உபாயத்துடன் கூடிய தலைமைத்துவத்துடன் மட்டுமே பிரச்சினைகளைத் தீர்க்கும் அணுகுமுறைகள் மூலம் அடைதல் வேண்டும். தேசிய கல்வி ஆணைக்குழுவானது (1992) பரவலாக்கப்பட்ட திட்டமிடல் தீர்மானங்கள், பொருத்தமான தரவு சேகரித்தல், மற்றும் தேவைப் பகுப்பாய்வு, கல்வித் திட்டமிடலில் ஈடுபடுவோருக்குப் பயிற்சி, சரியான தொழிற்பிரிப்பு, திட்டங்களுக்கும் நடைமுறைகளுக்கும் இடையிலுள்ள குறைபாடுகளைக் குறைத்தல் ஆகிய விடயங்களில் கவனஞ் செலுத்த வேண்டியுள்ளதன் தேவையை வலியுறுத்தியுள்ளது.

அரசாங்கம் 1997 இல் கல்விச் சீர்திருத்தத்தினை அறிமுகம் செய்தபோது முறைமையை நடைமுறைப்படுத்தும் தமது மட்டங்களில் புதிய முயற்சிகளை ஒழுங்கான முறையில் மேற்கொள்ளக்கூடிய வாய்ப்புகள் இருந்தன. அச்சந்தர்ப்பத்தில் 1984 இல் நிலவிய இடையீடுகள் போலன்றி, ஆசிரியர்களின் தொழின்மைசார் அபிவிருத்தி மீது பெரிதும் கவனம் ஈர்க்கப்பட்டது. மேலும், அந்த நேரத்தில் முன்சேவைக்கும் தொடருறு ஆசிரியர் கல்விக்கும் கொடுக்கப்பட்ட முக்கியத்துவமானது முன்னேற்றங்களுக்கு உதவியது.

1981 இல் பாடசாலைக் கொத்தணி முறையும் அறிமுகம் செய்யப்பட்டது. 1990 களில் உருவாக்கப்பட்ட ஆரம்பக் கல்வித் திட்டமும் இடைநிலைக் கல்வித் திட்டமும் ஒழுங்கான முரைறயில் திட்டங்களை நடைமுறைப்படுத்துவதற்குப் பாடசாலைகளை வலுப்படுத்தும் நோக்கத்துடன் மேற்கொள்ளப்பட்ட பிரதான பணிகளில் சிலவாகும்.

தேசிய கல்வி ஆணைக்குழு பாடசாலைகளில் திட்டமிடலின் தேவையை சிபார்சு செய்வதுடன் விரிவான கல்வித் திட்டத்தினை வைத்திருப்பதன் தேவையுடன் பின்வரும் தேவைகளையும் எடுத்துக் காட்டுகிறது.

01. நியாயத் தன்மையையும் உன்னதத்தையும் மேம்படுத்துதல், பிணக்குகளால் பாதிக்கப்பட்ட பிரதேசங்களில் பாடசாலைகளைத் துரிதமாக அபிவிருத்தி செய்வதன் மூலம் மாகாணங்களிடையே உள்ள வேறுபாடுகளைக் குறைத்தல்

02. மாணவரின் பெறுபேறுகளைக் கணிப்பிடுதலும் தேவையான பிள்ளைகளுக்கு உதவுதலும்

03. தனிப்பட்ட வாழ்க்கை, ஆளிடைத் தொடர்புகள், பொருளாதார நடவடிக்கைகளும் சமூகமும் என்பவற்றின் விளைதிறன்மிக்க தொழிற்பாடுகளுக்குத் தேவையான முக்கிய திறன்களை விருத்தி செய்தல்

04. கலைத்திட்டத்தை நடைமுறைப்படுத்துவோர் மற்றும் கற்பவர்களின் ஆற்றல் கட்டியெழுப்பப்படுவதை ஒன்றிணைத்தல்

05. பாடசாலைகளில் பொருத்தமான வழிகாட்டல் மற்றும் ஆலோசனைகளை நிகழ்ச்சித் திட்டத்தினை நடைமுறைப்படுத்தும் திட்டங்களை ஆயத்தஞ் செய்தல்

    - ❖ கல்வி மற்றும் தனியாள் வழிகாட்டல்
    - ❖ தொழிலுக்கு வழிகாட்டல்

06. தேசிய தகவல் வலைப்பின்னல் ஒன்றின் மூலம் பாடசாலைகள் வலயக் காரியங்களுடனும் வலைப் பின்னலின் ஏனைய நிலைகளுடனும் இணைக்கப் படலாம்.

07. புதிதாக தகுதிபெற்ற ஆசிரியர்களின் திசைமுகப்படுத்தல் உட்பட பாடசாலைத் தளநிலை உத்தியோகத்தர் அபிவிருத்தியைக் கொண்டிருத்தல்

08. சிரேஸ்ட முகாமையாளர்கள் மற்றும் உயர்நிலை உறுப்பினர் மத்தியில் முகாமைத்துவத் திறன்களை விருத்தி செய்யும் முகாமைத்துவத் திட்டங்களை வைத்திருத்தல்

அவ்வாறே எதிர்காலக் கல்விக் கொள்கையானது பாடசாலைமட்டத் திட்டமிடலுக்கான தேவையை நன்கு வலியுறுத்துகிறது. ஏனெனில், தரமான கல்வியை வழங்குதலை வலுப்படுத்தும் மிகப்பொருத்தமான வழிமுறையாக இது அங்கீகரிக்கப்படுகிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தனி மனித அமைதியும் தன்னிலை விளக்கமும்

எல்லோருடைய இல்லத்திலும் பொருள் வளம் நிறைந்து பொங்கட்டும். உள்ளங்களில் அமைதி நிலவட்டும். அமைதி மனித இன வாழ்வில் நிறைவைத் தரும். தெய்விக இன்பம். ஒரு மதிப்புடைய வாழ்க்கைச் செல்வம் அமைதி. அதனால் தான் மக்களில் பெரும்பாலோர் அமைதியை விரும்புகின்றனர். பேரறிஞர்கள் அமைதிக்காகவே தங்கள் ஆற்றலை அர்ப்பணிக் கின்றனர்.

எனினும் இன்று நாம் காண்பதென்ன? உலகம் முழுவதும் உற்று நோக்குவோம். எங்குமே அமைதி குலைந்து காணப்படுகின்றது. தனிமனிதரிடத்தில், சமுதாயத்தின் ஊடே, உலக நாடுகளுக்கிடையே, எங்குமே நிலையான அமைதியில்லை. பிணக்கு, அச்சம், பகை, போர் இவை பெருகிக் கொண்டிருக்கின்றன.

இந்த நிலை நீடிக்கக் கூடாது. இது மாறித் தான் ஆகவேண்டும். மாற்றித்தான் ஆக வேண்டும். யார் மாற்றுவது? எப்படி மாற்றுவது? இவ்விரு வினாக்களில் யார் என்பதற்கு முதலில் விடை காண்போம். உலகை, மனித குலத்தை, நல்வழியில் நடத்திச் செல்ல வேண்டியது அறிஞர்கள் பொறுப்பு. சிந்தனையாளர்கள், எழுத்துலக மேதைகள், மதத் தலைவர்கள், ஆட்சித் தலைவர்கள், கல்விப் பொறுப்பாளர்கள், சமுதாய நலம் விளையும் செல்வந்தர்கள் · இவர்கள் எல்லோருமே மனித குலத்தின் நலம் காக்கும் தகுதி பெற்றவர்கள் பொறுப்பும் உடையவர்கள். உலகில் அமைதி நிலவ இப்பெரு மக்கள் தான் மக்களுக்கு வழி காட்ட வேண்டும்.

இரண்டாவது வினாவாகிய எப்படி என்பதற்கு விடை காண்போம். மனிதன் வாழ்வை நிறைவு செய்யும் துறைகள் இரண்டு. ஒன்று பொருள் துறை. மற்றது அருள் துறை. விஞ்ஞான வளர்ச்சி உலகில் பொருள் துறையை நிறைவு செய்து விட்டது. அருள் துறையில் தான் மனிதகுலம் பின்னடைந்து நிற்கின்றது. ஒவ்வொரு உயிரும் தெய்வத்தின் திருவிளையாட்டரங்கம் என்பதைப் பெரும்பாலோர் உணர்ந்து கொள்ளவில்லை. அதன் விளைவாக மனிதனே மனிதனுக்குத் துன்பங்களை விளைத்து வருகிறான். விஞ்ஞான மேன்மையால் பெருகும் பொருள்துறை வளர்ச்சி கூட, மனிதகுல சீரழிவிற்குத் திருப்பிவிடப் பெறுகின்றது. அணுக்குண்டு முதலிய கொடிய போர்க்கருவிகள் மனித இனத்தையே அழித்து விடுமோ என்று அஞ்ச வேண்டியுள்ளது. இந்த அழி சூழ்நிலைகளை மாற்றியாக வேண்டும். இதற்கு நிச்சயமான ஒரே வழி, அருள் துறையில் மனித குலம் போதிய வளர்ச்சி காண வேண்டும்.

அருள்துறையென்றால் இறைநிலை தெளிந்த அறிவின் வாழ்க்கை முறைப் பண்பாடு ஆகும். மனிதன் மனதை வளப்படுத்திச் செயல்படுத்தும் துறையே அருள்துறை. இது உயிர் வழிபாடு, இறையுணர்வு என்னும் இரண்டு உறுப்புகளைக் கொண்டது. உயிர் வழிபாடு என்பது அறநெறியாகும். அறத்தின் மாண்பு உணர்ந்து ஆற்ற மனிதன் பெறும் அறிவின் முழுமைப் பேறு தான் இறையுணர்வாகும்.

அறத்தைக் காக்கவல்ல சிந்தனையாளர்கள், ஆட்சிப் பொறுப்பு உடையோர், செல்வந்தர்கள். தொழில் நிபுணர்கள், மக்கள் தலைவர்கள். யாவரும் இறையுணர்வில் முழுமை பெற வேண்டும். அப்போது தான் மக்களைச் சீரிய முறையில் வழி நடத்தவும் வாழ வைக்கவும் முடியும்.

இறையுணர்வில் முழுமை பெறுவதற்குச் சிறந்த முறை தன்னிலை விளக்கமாகும். இதனை ஆங்கிலத்தில் Self Realisation என்று சொல்வார்கள். இதுவே அருள் துறையின் கருப்பொருள். இறை வழிபாட்டின் உச்சம். உயிர் வழிபாட்டின் உறைவிடம். அமைதியைக் காக்கும் அரண். தன்னிலை விளக்கத்தால் அறிவும் உயிரும் உணரப் பெறும். முடிவில் தெய்வ நிலையும் தெளிவாக அகக் காட்சியாகும். தன்னை உணர்ந்தால் உயிர்கள், உலகம், தெய்வம் யாவும் அகக்காட்சியில் இணைந்து காணும். முறையான அகநோக்குப் பயிற்சி மூலம் ஒரு மனிதன் எளிதில் இந்நிலை பெறலாம். இத்துறையில் தேர்ந்த வழிகாட்டிகள் இந்நாட்டில் பலர் உள்ளனர்.

உடலாக, அறிவாக, உயிராக உள்ள தன்னிலே தலைவனாக உள்ள மெய்ப்பொருளை உணர்வதே தன்னிலை விளக்கம். இந்தத் தெளிவில் ஒவ்வொரு உயிரினிடத்தும் தெய்வத்தின் இருப்பு நிலை, ஆட்சிநிலை விளங்குமல்லவா? இவ்வுணர்ந்த நோக்கில் எல்லா உயிர்களும் ஒரே மூலத்தை அடிப்படையாகக் கொண்டே தோன்றி இயங்கி வாழ்கின்றன என்ற பேருண்மை அக்காட்சியாகின்றது. இத்தகைய அறிவின் தெளிவில் ஒழுக்கமும் ஈகையும் இயல்பாக மலரும். கடமையும் பொறுப்பும் சிறப்பாக அமையும். தனிமனிதன் வாழ்வில் அமைதியுண்டாகும். இவ்வமைதி அன்பாகவும் கருணையாகவும் விரிந்து சமுதாயத்தில் அமைதியைப் பரப்பும். மேலும் அது உலக விரிவாகச் செயல்படும்போது உலக நாடுகளிடையேயும் அமைதியை நிலை நாட்டும். எனவே தன்னிலை விளக்கமும் அவ்விளக்கத்தின் வழியே வாழும் அருள் நெறியும் உலக அமைதிக்குச் சிறந்த வழிகள்.

அமைதியின் பெருமையுணர்ந்த சிந்தனையாளர்களே! செயலில் விரைக! அறிஞர்களே திரண்டு எழுக! உங்கள் கருணையுள்ளம் உலகில் அருள்துறை ஓங்க வழி வகுக்கட்டும். மனிதகுல வாழ்வில் அமைதி நிலவட்டும்.

வாழ்க வையகம்! வாழ்க வளமுடன்!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# Viluthu
Center for Human Resource Development

# 'இலங்கை எழுத்தாளர்களின் படைப்புக்கள்'

## கண்காட்சி ஒழுங்குபடுத்தலும் விற்பனையும்

"விழுது" ஆற்றல் மேம்பாட்டு மையம் குடியியல் கல்விக்கான மாபெரும் கண்காட்சியுடன் இணைந்த கலை நிகழ்ச்சிகளை கொழும்பில் நடாத்துவதற்கான ஆயத்தங்களை மேற்கொண்டு வருகின்றது.

போரால் பாதிப்புக்குள்ளான வடக்கு கிழக்கு பகுதிகளில் வாழுகின்ற விதவைகள் மற்றும் மாற்று வலுவுள்ள சிறுவர்களுக்கும் நிதிசேர்ப்பதற்கான செயற்திட்டமாக இக்கண்காட்சி நடத்தப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

செப்டெம்பர் மாதம் 1ஆம் 2ஆம் திகதிகளில் (சனி ஞாயிறு நாட்களில்) கொழும்பு பம்பலபிட்டி இராமநாதன் இந்துக் கல்லூரியில் நடத்த ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

"ஒவ்வொருவரும் எல்லோருக்குமாக" (Each for All) என்று தலைப்பிடப்பட்டுள்ள இக்கண்காட்சியில் சுமார் 15க்கும் மேற்பட்ட கண்காட்சி கூடங்களை அமைப்பதற்கான முயற்சியில் விழுது நிறுவனம் ஈடுபட்டுள்ளது.

அந்த வகையில் "இலங்கை எழுத்தாளர்களின் படைப்புக்கள்"(The works of writers in Sri Lanka)என்ற காட்சிக் கூடத்தை அமைக்கவுள்ளோம். இதில் இலங்கையிலுள்ள தமிழ் சிங்கள எழுத்தாளர்கள், கவிஞர்கள், படைப்பிலக்கிய வாதிகள், விமர்சன ஆய்வாளர்கள், சிறுகதையாசிரியர்கள் மற்றும் நாடக எழுத்தாளர்கள் ஆகியோர் தமது நூல்களை காட்சிக்கு வைப்பது மட்டுமல்லாது விற்பனையையும் இங்கு மேற்கொள்ள முடியும்.

ஓவியங்கள், புகைப்பட தொகுப்புக்கள், கேலிச்சித்திரங்கள், சிற்பங்கள் ஆகியனவும் காட்சிக்கும் விற்பனைக்கும் வைக்கப்படும். கிராமிய விவசாயக் கைத்தொழில் உற்பத்திகளையும் விற்பதற்கான காட்சிக் கூடங்கள் ஸ்தாபிக்கப்பட விருக்கின்றன. காட்சிக்கூடங்கள் தவிர, இரு நாட்களும் பல்வேறு கலை நிகழ்சிகளையும் நடாத்த ஒழுங்கு படுத்தன்னட்டு வரகின்றன. கவியரங்கம், தெருவெளி அரங்கு, மற்றும் கிராமிய கலை நிகழ்ச்சிகளும் அரங்கேற்றப்படும்.

பலதரப்பட்ட மக்களையும் பெரும் எண்ணிக்கைகளில் கவருவதற்கென தனியார் துறையினரின் உதவியுடன் களியாட்ட, மற்றும் பொழுது போக்கு அம்சங்களும் இணைக்கப்படும். ஊடக அனுசரணையுடன் இந்நிகழ்ச்சிக்கான தேவையான விளம்பரப்படுத்தலுக்கும் ஏற்பாடு செய்யப்பட்டு வருகிறது.

எனவே "இலங்கை எழுத்தாளர்களின் படைப்புக்கள்" (The works of writers in Sri Lanka) என்ற காட்சிக் கூடத்திற்கு தங்களது மேலான பங்களிப்பை எதிர்பார்த்து நிற்கின்றோம்.

நீங்கள் செய்யவேண்டியது இதுதான். கண்காட்சியில் விற்பனைக்கு வைக்கப்படவேண்டிய நீங்கள் வெளியிட்ட நூல்கள் மற்றும் இறுவெட்டுக்களில் வெளிவந்த உங்களுடைய படைப்புக்களை 03,டொரிங்டன் அவனியூ, கொழும்பு 7இல் அமைந்துள்ள "விழுது ஆற்றல் மேம்பாட்டு மையத்தில்" இம்மாதம் 25ஆம் திகதிக்கு முன்னர் ஒப்படையுங்கள். ஐந்துக்கும் குறையாத நூல்களையோ, இறுவெட்டுக்களையோ வாரநாட்களில் காலை 8 மணி தொடக்கம் மாலை 5 மணிவரை எமது அலுவலகத்தில் ஒப்படைக்க முடியும்.

நேரில் வருகைதர முடியாதவர்கள் தங்களைப்பற்றிய விபரங்களுடன் தபால் உறையின் இடதுபக்க மேல்மூலையில் "இலங்கை எழுத்தாளர்களின் படைப்புக்கள்" எனக் குறிப்பிட்டு பதிவுத்தபாலில் அனுப்பி வைக்கவும். கண்காட்சி தொடர்பான மேலதிக விபரங்கள் பற்றி அறிய விரும்பினால் 011 3150836, என்ற தொலைபேசி இலக்கத்துடனோ அல்லது viluthuexhibit@gmail.com என்ற மின்னஞ்சலூடாகவோ தொடர்பு கொள்ள முடியும்.

'பிரஜைகளினதும் நிறுவனங்களினதும் சமூக வகை பொறுப்புக்கூறலை வளப்படுத்துவோம்'.

Program Coordinator, Viluthu, No 03, Torrington Avenue, Colombo 7, Sri Lanka
Tel : +94 (0) 11 2506272, +94 (0) 11 3150836 e-mail : viluthuexhibit@gmail.com
Web: www.viluthu.org , www.irukkiramonline.com

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அகவிழி

## கிடைக்குமிடங்கள்

**பூபாலசிங்கம் புத்தகக்கடை**
202, செட்டியார் தெரு, கொழும்பு - 11
தொ.பே.இல.: 011-2422321

**பூபாலசிங்கம் புத்தகக்கடை**
4A, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்
தொ.பே.இல.: 021-2226693

**நியூ கேசவன் புக்ஸ்டோல்**
52 டன்பார் வீதி, ஹட்டன்
தொ.பே.இல.: 051-2222504,
051-2222977

**அறிவாலயம் புத்தகக்கடை**
190 B புகையிரத வீதி,
வைரவப்புளியங்குளம், வவுனியா
தொ.பே.இல.: 024-4920733

**அன்பு ஸ்டோர்ஸ்**
14 பிரதான வீதி, கல்முனை
தொ.பே.இல.: 067-2229540

**புக் லாப்**
20, 22 சேர் பொன் ராமனாதன் வீதி,
பரமேஸ்வரா சந்தி, திருநெல்வேலி,
யாழ்ப்பாணம்
தொ.பே.இல: 021-2227290,
கை.தொ.இல.: 077-1285749

**இஸ்லாமிக் புத்தக இல்லம்**
77, தெமட்டக்கொட வீதி,
கொழும்பு - 09
தொ.பே.இல.: 011-2688102

**கவிதா ஸ்ரோஸ்**
இல:05 பஸ் தரிப்பிடம், வவுனியா
தொ.பே.இல.: 024 - 2222012

**Noori Book Shop**
No. 143, Main Street, Kathankudi
Tel.: 065-2246883

**பூபாலசிங்கம் புத்தகக்கடை**
309-A 2/3 காலி வீதி,
வெள்ளவத்தை, கொழும்பு
தொ.பே.இல.: 4515775, 2504266

**அபிஷா புத்தகக்கடை**
137, பிரதான வீதி, தலவாக்கலை
தொ.பே.இல.: 052-2258437

**நூர் மொஹமட் நியூஸ் ஏஜண்ட்**
132, பிரதான வீதி,
கிண்ணியா-03
தொ.பே.இல.: 026-2236266

**குமரன் புக் சென்டர்**
18, டெய்லிபயர் கொம்பிலக்ஸ்
நுவரெலியா
தொ.பே.இல.: 052-2223416

**பிரியங்கா புத்தகக் கடை**
பிரதான வீதி,
பருத்தித்துறை
தொ.பே.இல.: 077-9303246

**கொலேஜ் நீட்ஸ் புத்தகக்கடை**
120, பிரதான வீதி,
அட்டாளைச்சேனை 14
கை.தொ.இல.: 077-3034469

**அல்குரசி புத்தக நிலையம்**
28, 1/2, புகையிரத வீதி, மாத்தளை
தொ.பே.இல.: 066-3662228

**Rajah's Book Centre**
No. 111, Main Street, Batticaloa
Tel.: 065-2222371

**S. சச்சிதானந்தகுமார்**
19/26, மாரியம்மன் கோவில் வீதி,
மட்டக்களப்பு
தொ.பே.இல.: 077-1270458

Printed by
Kumaran Press (Pvt) Ltd.
39, 36th Lane, Colombo 06

ISSN 1800-1246

Registered in the Department of Posts of Sri Lanka under No. QD/96NEWS/2012.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org